

ரொனால்டினோவை குரங்கு என்று விமர்சித்த அரசியல்வாதி

பக்கம் 18

# உதயன்

சுடர்: 29 கதிர்: 296 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 2 வியாழன் 18.09.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

24 பக்கங்கள்

யாழ். - 20/=

வன்னி - 20/=


தெளிவான வானிலை

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h

ஈரப்பதம்: 48%

காற்றழுத்தம்: 1008 hPa

வெளிச்சத் தெளிவு: மிக நன்று

சூரியோதயம்: 05:23

சூரியஸ்தமனம்: 18:04

# ஆபத்து ஐஸ்கிறீம்

## யாழ்.மாவட்டத்தின் மூன்று முன்னணி ஐஸ்கிறிம் உற்பத்தி நிறுவனங்களின் தயாரிப்புகளில் மலத் தொற்று

யாழ்ப்பாணம், செப்.18


யாழ். மாவட்டத்தில் முன்னணியில் உள்ள மூன்று பிரபல ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனங்களின் தயாரிப்புகளில் மலத் தொற்று காணப்படுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. நெருப்புக் காய்ச்சலை ஏற்படுத்தக் கூடிய கோலி போர்ம் என்ற பக்றீறியா ஐஸ்கிறீம் வகைகளில் அளவுக்கு மிக அதிகமாகவே இருப்பது ஆய்வுகூடச் சோதனைகளில் நிரூபிக்கப் பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவரும் நெருப்புக் காய்ச்சல் நோய்க்கு இது ஒரு முக்கிய காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றபோதும், குறிப்பிட்ட நிறுவனங்களின் தயாரிப்புகளை தடை செய்யவோ உற்பத்தியை நிறுத்தவோ இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என்று தெரிவிக்கப் படுகிறது.

ஐஸ்கிறீம் உற்பத்திகளில் மலத் தொற்று கண்டறியப்பட்டுள்ளமையை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர். கேதீஸ்வரன் உறுதிப்படுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் 10 ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்களில் இருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு நடத்தப்பட்ட சோதனையில் அனைத்து மாதிரிகளிலும் கோலி போர்ம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது என்று அவர் தெரிவித்தார். எனினும் எந்த நிறுவனங்களின் உற்பத்திகள் அவை என்பதை அவர் வெளியிட வில்லை.

நல்லூர் கந்தன் திருவிழா

19 ஆம் பக்கம் பார்க்க



யாழ்ப்பாணத்தில் தைபொயிட் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள் விவரம். (ஆண்டு ரீதியாக)

தைபொயிட் என்றால் என்ன?

பக்கம் 21

தைபொயிட் காய்ச்சலால் பீடிக்கப்பட்டோர் விவரம் (மாவட்டம்)

| மாவட்டம் | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|
| கொழும்பு | 9 | 8 | 9 | 1 |
| யாழ்ப்பாணம் | 169 | 307 | 360 | 254 |
| கிளிநொச்சி | 0 | 15 | 31 | 16 |
| மன்னார் | 1 | 41 | 45 | 20 |
| முல்லைத்தீவு | 0 | 2 | 5 | 4 |

## வடக்கு வருகிறார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், செப். 18

மூன்று நாள் பயணமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் வடக்கு வரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தப் பயணத்தின்போது பல்வேறு கட்டடங்களின் திறப்பு விழாக்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள், புகையிரத சேவை ஆரம்பம் என்பனவும் இடம்பெறவுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

வடக்கு மாகாண சபைத்

22 ஆம் பக்கம் பார்க்க

## நவம்பர் 13 யாழ்தேவி வருகின்றது

யாழ்ப்பாணம், செப். 18

24 ஆண்டுகளின் பின்னர் யாழ்தேவி ரயில் அடுத்த மாதம் 13 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.தேவி ரயில் சேவை தற்போது கொழும்பிலிருந்து பளை வரையில் இடம்பெறுகின்றது. இந்தச் சேவை யாழ். நகருக்கு அடுத்த மாதம் 13 ஆம் திகதியிலிருந்து விஸ்தரிக்கப்படவுள்ளது. முன்னதாக, இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஆண்டு தேர்தல் பரப்புரையின் போது தெரிவித்திருந்தார். இருப்பினும் 6

19 ஆம் பக்கம் பார்க்க



கொழும்பு துறைமுக நகர (Colombo Port City) அபிவிருத்தித் திட்டம், சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் மற்றும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பு காலிமுகத் திடலை அண்மித்த கடல் பகுதி நிரப்பப்பட்டு 233 ஏக்கர் காணியில் புதிய நகரம் நிர்மாணிக்கப்படவுள்ளது என்று இலங்கை துறை முகங்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

## ஆமை வைத்திருந்த நபருக்கு தண்டம்

கிளிநொச்சி, செப்.18

7 ஆமைகளை வைத்திருந்த நபரொருவருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் நேற்று இருபத்தையாயிரம் தண்டம் விதித்துள்ளது.

பூநகரி பாலாவிக்குளப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஆமைகளுடன் நாச்சிக்குடா பொலி

19 ஆம் பக்கம் பார்க்க

## டெங்கு ஒழிப்பில் 7 ஆயிரம் பேர்

### நேற்றுமுன்தினத்துடன் பணிகள் நிறைவு

யாழ்ப்பாணம், செப். 18

கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை வடக்கில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு நிறைவுற்றுள்ளது. யாழ்ப்பாணத்தில் மட்டும் சுமார் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் டெங்கு ஒழிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர் தெரிவித்தனர்.

அவர்களில் கிராம அலுவலர்கள், சமுர்த்தி

22 ஆம் பக்கம் பார்க்க

## விக்னேஸ்வரனின் ஆதங்கத்தை நோர்வே தூதுவரிடம் கூறினேன்

### யாழ்.மறைமாவட்ட ஆயர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 18

"கொழும்பு அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்ற வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் ஆதங்கத்தை, நோர்வேத் தூதுவரிடம் எடுத்துக் கூறினேன். அத்துடன் கொழும்பு அரசும் - வடக்கு மாகாண சபையும் விட்டுக் கொடுத்து இணைந்து செயற்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு என்பதையும் அவருக்கு சுட்டிக்காட்டினேன்"- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ்

22 ஆம் பக்கம் பார்க்க

## கிடப்பில் போடப்பட்ட வாழ்வெழுச்சி கடன்

### ஆரம்ப நிகழ்வின் பின்னர் கடன்கள் வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணம், செப். 18

வாழ்வின் எழுச்சி கடன் திட்டம் பெரும் எடுப்பில் கொழும்பு அரசினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும், ஆரம்ப நிகழ்வில் வைத்து கடன் வழங்கப்பட்டவர்களைத் தவிர ஏனையோருக்கு கடன் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆளுங்கட்சியின் அமைச்சர் ஒருவர் தனது பணிப்புரையில்லாமல் யாழ். மாவட்டத்தில் கடன் வழங்க வேண்டாம் என்று தெரிவித்துள்ளமையே இதற்கு காரணம் என்றும் கூறப்படுகின்றது.

வாழ்வின் எழுச்சி கடன் திட்டம் கடந்த முதலாம் திகதி நாடளாவிய ரீதியில் பெரும் எடுப்பில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கடன் திட்டத்தை வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தின் எந்த

19 ஆம் பக்கம் பார்க்க

## தம்புள்ளை தாக்குதல் ஐ.நாவுக்கு செல்கிறது

கொழும்பு, செப்.18

தம்புள்ளை பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்வதற்கு தம்புள்ளை பள்ளிவாசல் நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

2012ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி இப்பள்ளி மீது நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் அதனைத் தொடர்ந்து அப்பள்ளிக்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட நட

19 ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமைப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்க

### ஐ.நா. சபையில் நிமால்கா கோரிக்கை

கொழும்பு, செப்.18

"இலங்கையின் எதேச்சதிகாரத்தை எதிர்ப்பதால் அச்சுறுத்தலை எதிர் கொண்டுள்ள அதேவேளை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையகத்தின் தீர்மானத்தை நிறைவேற்ற பணியாற்றும் மனித உரிமைப் பணியாளர்கள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள் உட்பட்டோரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு அவசியம்."

இவ்வாறு இலங்கையைச் சேர்ந்த மனித உரிமை பாதுகாவலர் நிமால்கா பெர்னாண்டோ ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் 27 ஆவது அமர்வில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் அங்கு தெரிவித்துள்ளதாவது -

"ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் புதிய மனித

19 ஆம் பக்கம் பார்க்க



இருநாள் பயணம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இலங்கை வந்த சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குக்கும், பிரதமர் டி.எம். ஜயரத்னவுக்கும் இடையில் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நேற்று முற்பகல் சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் சிரேஷ்ட அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌஸி, அதாவுட செனிவிரட்ண, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோர் உட்படப் பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.(ற)

# அரசின் சேவைகளை புரிந்துகொள்ளுங்கள்

## ஜனாதிபதி மஹிந்த கோரிக்கை



கொழும்பு, செப்.18

நாட்டுக்குப் பெரும் சேவைகளை செய்யும் யுகத்தில் சரியாக புரிந்து கொள்ளாது அவதூறுகளை செய்வதும் அவமதிப்பதும் பழக்கமாகி விட்டது என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

நாட்டை கட்டியெழுப்ப தற்போதைய அரசு முயற்சிக்கும்போது அதனை புரிந்து கொள்ளாத சிலர் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சேர் அநகாரிக தர்மபாலவின் 150 ஆவது ஜனன தின நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"நாடு செல்லும் பயணம் குறித்து அனைவரும் புரிந்து நடந்து கொள்வது அவசியமானது. நாட்டை முன்னேற்ற தற்போதைய அரசு மேற்கொண்டு வரும் வேலைத்திட்டங்கள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியமானவை. இவ்வாறே சிரேஷ்ட இலங்கைப் புத்திரரான அநகாரிக தர்மபாலவின் அன்றைய சேவையை புரிந்து கொள்ளாதவர்கள் அவருக்கு அவமதிப்புகளையும் அவதூறுகளையும் செய்தனர்"- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# அரசுக்கு வலியை ஏற்படுத்த ஜே.வி.பிக்கு வாக்களியுங்கள்

## அனுரகுமார திஸாநாயக்க கோரிக்கை

கொழும்பு, செப்.18

நாட்டில் பிரதானமான பிரச்சினைகள் இருக்கும் போது ஐக்கிய தேசியக் கட்சி அதனைத் தவிர்த்து விட்டு செயற்படுகிறது. அரசுக்கு எதிராக பலமான குரலையும் பலமான நிலைப்பாட்டையும் ஏற்படுத்தி, அரசுக்கு வலியை ஏற்படுத்த வேண்டுமாயின் ஜே.வி.பிக்கு வாக்களிக்க வேண்டும் - இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் அந்தக் கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க.

செவனகலையில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"இந்தமுறை ஏன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கப் போகிறீர்கள் என நான் கேள்வி எழுப்புகிறேன். ஆளும் கட்சியினரும் ஐக்கிய தேசியக் கட்சியினரும் உற்ற நண்பர்கள் என்பதை நினைவில் வைத்து கொள்ளுங்கள்.

இவர்கள் ஒன்றாக வர்த்தகத்தில் ஈடுபடும் நபர்கள். அதனை நாங்கள் நாடாளுமன்றத்தில் பார்த்துள்ளோம். ஒன்றாக விருந்துகளுக்கு, இரவு நேர களியாட்ட விடுதிகளுக்கு செல்லும் நபர்கள். ஐக்கிய தேசியக் கட்சி மக்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்வதில்லை.

அரசில் இருப்பவர்களுடன் தான் அவர்கள் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றனர். ஐ.தே.கட்சியில் உள்ள பல தலைவர்கள் இப்படியானவர்களே"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# மாலைதீவு ஜனாதிபதி இலங்கை வருகின்றார்

கொழும்பு, செப்.18

மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லாஹ் யமீன் அப்துல்கையும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் இலங்கைக்கு வரவுள்ளார்.

இலங்கையில் நடைபெறவுள்ள ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே அவர் வரவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கின்றது.

இன்று கொழும்பில் ஆரம்பமாகவுள்ள இந்த மாநாடு 20ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.(ற)

# போலி சி.ஐ.டி. கைது

கொழும்பு, செப்.18

குற்றப்புலனாய்வு அதிகா[ri] என்று தன்னை அடையாளப்படுத்தி தனிநபர்களிடம் இருந்து பணம் பெற்ற நபரொருவரை, ஹெட்டிபொலை பிரதேசத்தில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர், தனிநபர்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி தான் குற்றப்புலனாய்வு அதிகாரி என்றும் தனது வங்கிக் கணக்கில் குறிப்பிட்ட தொகை பணத்தை வைப்பிலிடுமாறும் அச்சுறுத்தியுள்ளார்.

சந்தேகநபரை, நாரம்மல நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று ஹெட்டிபொலை பொலிஸார் தெரிவித்தனர்.

# போலியான லொத்தர் சீட்டு; ஒருவர் கைது

கொழும்பு, செப்.18

பூகொட பெப்லியவல விகாரைக்கு அருகாமையில், போலி வெற்றி இலக்கங்களுடனான லொத்தர் சீட்டுக்கள் மூலம் நிதி மோசடியில் ஈடுபட்டு வந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மனம்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட காலமாக இந்த மோசடி நடவடிக்கைகளில் இவர் ஈடுபட்டுவந்துள்ளார் என்று ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# தமிழரசுக் கட்சியுடன் பேசினால் வாக்குகளை இழப்பார் ஜனாதிபதி

## எச்சரிக்கின்றார் கலாநிதி குணதாச அமரசேகர

கொழும்பு, செப்.18

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் பேச்சுக்குச் சென்றால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில், சிங்கள தேசிய அமைப்புகள் அவருக்கு ஆதரவு வழங்காது என்று எச்சரித்துள்ளார் தேசிய அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கலாநிதி குணதாச அமரசேகர.

அமைச்சர் விமல் வீரவன்ஸவின் அனுசரணையில் செயற்படும் இந்த அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தமிழ் கட்சிகள் மாநாடுகளை நடத்தி ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து சர்வதேசத்துக்கு வழங்குவதற்காக பல்வேறு யோசனைகள் அடங்கிய 15 யோசனைகளை கொண்டு வந்துள்ளன. இந்த யோசனைகள் குறித்து ஜனாதிபதி விசேடமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இந்த 15 யோசனைகளின் அடிப்படையில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அகிம்சை வழியில் தமிழ் மக்களின் கோரிக்கையை வென்றெடுக்க போராட்டத்தை ஆரம்பிக்க போவதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த யோசனை தொடர்பாக ஜனாதிபதி முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும்"- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# விமர்சிப்பதை விட்டுவிட்டு கட்சிக்காக உழையுங்கள்

## மங்களவிடம் கோருகின்றார் சஜித்



கொழும்பு, செப்.18

எனது நடவடிக்கைகளை விமர்சித்து காலத்தை வீணடிக்காது, நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கட்சியின் எதிர்கால வெற்றிக்காக ஊடகங்களை வசப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ.

அறிக்கை ஒன்றின் மூலமே அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.

"ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவின் தலைவர் எனக் கூறும் மங்கள சமரவீர, சிரச ஊடகத்தையும் அதன் உரிமையாளரையும் தொடர்ந்தும் விமர்சித்து வருகிறார். அரசின் ஒப்பந்தத்தின் படியே மங்கள இதனை மேற்கொண்டு வருகிறார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்காக குரல் கொடுத்ததன் காரணமாகவே சிரச ஊடக வலையமைப்பின் மீது குண்டு தாக்குதல் நடத்தப்பட்டதுடன் தீ வைக்கப்பட்டது.

இதனை மங்கள அறியாதிருப்பது ஆச்சரியமானது. ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகியிருக்கும் தொடர்ந்து விலகி வரும் ஊடகங்களின் ஆதரவை மீண்டும் கட்சிக்கு பெற்றுக்கொடுப்பதற்கு மங்கள சமரவீர முக்கியத்துவத்தை கொடுக்க வேண்டுமே அன்றி அவற்றை விமர்சிக்கக் கூடாது.

பசறையில் நடைபெற்ற கட்சியின் 68ஆவது மாநாட்டில் நானும் கட்சியின் தலைவரும் கைகோர்த்து கொண்டது. கட்சிக்குள் இருக்கும் அரசின் நிழல்களுக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதை மங்கள சமரவீர வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் புலனாகியுள்ளது"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# மாலுமி இல்லாத கப்பல் போன்றது இன்றைய பொருளாதாரம்

## குற்றஞ்சாட்டுகின்றது ஜாதிக ஹெல உறுமய கட்சி

கொழும்பு, செப்.18

நாட்டின் பொருளாதாரம் மாலுமி இல்லாத கப்பல் போன்று மாறியுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ளது ஜாதிக ஹெல உறுமய கட்சி.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அந்த கட்சியின் தேசிய அமைப்பாளரான மேல் மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த ஸ்ரீவர்ண சிங்க இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இலங்கையின் பொருளாதாரம் அடித்துச் செல்லப்படுவதை எம்மால் காணமுடிகிறது. சீனா வந்தால் சீனாவின் திசை நோக்கி அடித்துச் செல்கிறது. ஜப்பான் வந்தால் ஜப்பானின் பக்கம் அடித்துச் செல்கிறது. இந்தியா வந்தால், இந்தியாவின் பக்கம் அடித்துச் செல்கிறது. இலங்கையின் பொருளாதாரம் மாலுமி இல்லாத கப்பலாக மாறியுள்ளது.

வெளிநாடுகளுடன் அண்மையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் உண்மையில் இலங்கைக்கு அவசியமானதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. பொருளாதாரத் துறைக்கு அமைச்சர்கள் தனித் தனியாக நியமிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்களால் பலன் தரும் சேவைகள் நாட்டுக்கு கிடைக்கவில்லை.

சீனிக்கு ஒரு அமைச்சரும், தேங்காய்க்கு ஒரு அமைச்சரும் என தனித்தனி வகையான அமைச்சர்கள் உள்ளனர். ஆனால், நாட்டுக்கு தேவையான 5 வீத சீனியை உற்பத்தி செய்ய முடியாமல் உள்ளது. எதிர்காலத்தில் தெங்கு துறைக்கும் என்ன நேருமோ என்பது தெரியாது. தேங்காயைக் கூட வெளிநாட்டில் இறக்குமதி செய்யும் நிலைமை கடந்த காலத்தில் ஏற்பட்டது"- என்று தெரிவித்துள்ளார்.(ற)

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 02 வியாழன் (18.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 296


# நாங்கள் சிங்கள பௌத்தர்கள் என்று பெருமைப்படும் நிலையில் இலங்கை

## தனது அரசே மாற்றியது என்கிறார் மஹிந்த



கொழும்பு, செப்ரெம்பர் 18

இலங்கையின் பெரும்பான்மை இனத்தவர்கள் தாங்கள் சிங்கள பௌத்தர்கள் எனப் பெருமையுடன் சொல்லக்கூடிய நிலைக்கு அல்லது துட்டகைமுனு குறித்து பெருமையுடன் பேசக்கூடிய நிலைக்கு நாட்டை அரசு மாற்றியுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

கொழும்பு மாளிகாகந்தையில் அநகாரிக தர்மபாலவின் 150ஆவது பிறந்த தினத்தை குறிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். (22ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலை மாணவரின் பாடத் தெரிவுக்கு அனுமதி

### விரிவுரைகள் திங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தை அடுத்து அவர்கள் விரும்பியபடி பாடநெறிகளில் விசேட கற்கையை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர். இதனைக் கலைப்பீடப் பதில் பீடாதிபதி பேராசிரியர் புஸ்பரட்ணம் உறுதிப்படுத்தினார்.

இதனையடுத்து எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் இரண்டாம், நான்காம் வருட மாணவர்கள் விரிவுரைகளுக்குச் செல்வர் என்று மாணவப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

திட்டமிடல், பொருளியல் மற்றும் அரசியல் பாடநெறிகளில் பயிலும் 100 இற்கும் மேற்பட்ட மாணவர்களே இதனால் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து அனைத்து மாணவர்களும் நேற்றுமுன்தினம் மதியம் ஆர்ப்பாட்டத்தில் ஈடு (22ஆம் பக்கம் பார்க்க)

## தங்கூசி வலை பாவித்து மீன்பிடித்த 11 பேர் கைது

### தனங்கிளப்புக் கடலேரியில்

தென்மராட்சி, செப்.18

சாவகச்சேரி மற்றும் தனங்கிளப்புக் கடலேரியில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலை பயன்படுத்தி மீன் பிடித்த 11 பேரை யாழ்.மாவட்ட நீரியல் வள திணைக்கள அதிகாரிகள் பிடித்ததுடன் பெருமளவு மீன்களையும் வலைகளையும் கைப்பற்றினர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது.

நேற்றுக் காலை தனங்கிளப்புப் பகுதிக் கடலேரியில் 5 பேரும் சாவகச்சேரி கோயிற் குடியிருப்புப் பகுதிக் கடலேரியில் 6 பேரும் திணைக்கள அதிகாரிகளிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

இந்தப் 11 பேருடன் அப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட தங்கூசி வலைத் தொகுதியையும கைப்பற்றி சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர்.

இந்தப் 11 பேருக்கும் தடை செய்யப்பட்ட தங்கூசி வலை பயன்படுத்தியதற்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து அபராதத் தொகையை எதிர்வரும் 24ஆம் திகதி நீதிமன்றில் செலுத்துமாறும் உத்தரவிட்டதுடன், தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்லுமாறும் நீதிவான் பணித்தார்.

அத்துடன் கைப்பற்றப்பட்ட படகுகளை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறும் வலைகள் மற்றும் மீன்கள் ஆகியவற்றை அழிக்குமாறும் நீதிவான் பணித் (22ஆம் பக்கம் பார்க்க)



சாவகச்சேரி மற்றும் தனங்கிளப்பு கடலேரியில் தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகள் பாவித்து மீன்பிடியில் ஈடுபட்டவர்களைக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் நேற்று கைது செய்தனர். இவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கூசி வலைகளும் மீன்களும் நேற்று தீயிட்டு அழிக்கப்பட்டன. (த)

## உள்ளூராட்சி சபைகளுக்கான வட்டி வீதம் குறைப்பு

யாழ்ப்பாணம், செப். 18

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தினர் உள்ளூராட்சிச் சபைகள் பெறும் கடன்களுக்கான வட்டி வீதத்தைக் குறைத்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் அடிப்படை வசதிகளை முன்னேற்றுவதற்காகவும் வருமானத்தை ஈட்டும் திட்டங் (22ஆம் பக்கம் பார்க்க)

## மண்ணெண்ணெயின் விலை குறைப்பால் சற்று மகிழ்ச்சி

### மன்னார் மீனவர் சங்கத் தலைவர் கூறுகிறார்

மன்னார், செப். 18

மண்ணெண்ணெய் 20 ரூபாவினால் விலை குறைப்புச் செய்யப்பட்டுள்ளமை மீனவர்களுக்கு சற்று மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் தலைவரும், வடக்கு மாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் தலைவருமான என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசானது இன்றைய நிலையில் எரிபொருள்களின் விலையைச் சற்று குறைத்துள்ளது.

மண்ணெண்ணெய் 20 ரூபாவினால் விலை குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. அதே வேளை பெற்றோல் 5 ரூபாவினாலும், டீசல் 3 ரூபாவினாலும் விலை குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. குறித்த விலை குறைப்பு தற்போது மன்னார் மாவட்டத்திலும் நடைமுறைக்கு வந்துள்ளது.

ஆனால் விலையேற்றம் என்பது கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் நடைமுறைக்கு வந்தபோது மன்னார் மாவட்ட மீனவர் சமூகம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. குறித்த பிரச்சினைகளின் ஊடாகப் பல உயிர்களும் காவு கொள்ளப்பட்டன.

இந்த எரிபொருள் விலையைக் குறைப்பதற்காக நாங்கள் மீனவர் சமூகத்துடன் இணைந்து பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டிருந்தோம். இறுதிவரை போராடி (22ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உதவியாளர்களை உள் வாங்குக

### ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 18

வடக்கில் உள்ள ஆசிரிய உதவியாளர்கள் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்பட வேண்டும் அல்லது ஓய்வூதியத்துக்குள் இணைக்கப்பட வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளதாவது:-

ஆசிரிய உதவியாளர்களாக உள்ள அனைவரையும் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கவேண்டும் அல்லது அரச உத்தியோகத்தர்களுக்கு உள்ளது போன்று ஆசிரிய உதவியாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படவேண்டும். அதுதான் சரியான தெரிவாக இருக்கும்.

அதனை விடுத்து அவர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்கும் வகையில் அதிகாரிகள் இருக்கக்கூடாது. அவர்கள் தற்போது எந்தவகைத் தரத்துக்குள்ளும் உள்ளடங்கவில்லை. அவர்களைத் தரம் 3-11 இற்குக் கொண்டுவந்து சம்பள அதிகரிப்பும் வழங்க வேண்டும். (22ஆம் பக்கம் பார்க்க)

## துன்னாலையில் கைக்குண்டு மீட்பு



யாழ்ப்பாணம், செப். 18

யாழ்.பருத்தித்துறை துன்னாலை பகுதியில் உள்ள வயலில் இருந்து கைக்குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வயலுக்குச் சென்ற விவசாயி ஒருவர் கைக்குண்டு இருப்பதைக் கண்டு 551 ஆவது படைப் பிரிவினருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இந்த தகவலின் பிரகாரம் வயலுக்குச் சென்ற 551 ஆவது படைப் பிரிவு இராணுவத்தினர் கைக்குண்டை மீட்டுள்ளனர். (த)

## இம்மாத ஓய்வூதியத்தை வங்கியில் பெறமுடியாதோர் தொடர்பு கொள்க

யாழ்ப்பாணம், செப். 18

இந்த மாதத்துக்குரிய ஓய்வூதியப் பணத்தை வங்கியில் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் அவர்களின் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் முதன் முறையாக, ஓய்வூதியர்களின் பணம் நேரடியாக வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டது. இதன்போது ஓய்வூதியர்கள் பல்வேறு கிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர். ஓய்வூதியர்களின் வங்கிக் கணக்குகளில் பணம் வைப்பிலிடப்படாமல் இருந்தமையும் (22ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் புனிதராக ஜோசப் வாஸ்

### அனுமதி வழங்கினார் பாப்பரசர்

கொழும்பு, செப்.18

இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இறை பணியாற்றிய முத்திப் பேறுபெற்ற ஜோசப் வாஸ் அடிகளாரை இலங்கையின் புனிதராக அறிவிப்பதற்குப் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அனுமதி வழங்கியுள்ளார்.

பரிசுத்த பாப்பரசர் தனது இலங்கை (22ஆம் பக்கம் பார்க்க)

ஆம் 7 ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
முருகன் செல்லையா



பிறப்பு 19.12.1948 — இறப்பு 18.09.2007

இமைகள் மூடித்திறப்பதற்குள்
வருடங்களோ ஏழாகின
நாம் வாழும் நாள்களில் உங்கள்
நினைவுகள் எம்முடன் வாழும்

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
மு.இந்திரசித்தன் - குடும்பம்,
வல்லை வீதி, தொண்டமானாறு.

---

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 27 . 10 . 1960 — மறைவு 19 . 08 . 2014

திருமதி பவானி செல்வராசா

அன்பினால் வழிகாட்டி அரவணைத்த அம்மாவே!
உயிராக இருந்து எம்மை ஊக்குவித்த அன்னையே!
பக்கத்தில் இருந்து பாசமுடன் பல கதைகள்
பாங்காகப் பேசியதை எப்படி மறப்போம் அம்மா
மாதம் ஒன்று சென்றாலும் மாறாது எம் துயரம்
மாதாவே உம் நினைவு எமைவிட்டு நீங்காது எந்நாளும்.

இன்று (18.09.2014) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(52272)(7.6.3)

நூல் நிலையவீதி,
கைதடி தெற்கு,
கைதடி.

குடும்பத்தினர்.

---

## வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலய திருவிழா



கொழும்புத்துறை, செப்.18

யாழ். குடாநாட்டின் பிரசித்தி பெற்ற வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலய வருடாந்த திருவிழா நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் நவநாள் வழிபாடுகளைத் தொடர்ந்து நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழா நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் சனிக்கிழமை திருவிழாத் திருப்பலி காலை 7 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும். தொடர்ந்து திருச்சொரூப பவனியும் நடைபெறும்.

திருத்தலத்தில் கூடும் பக்தர்களின் வசதி கருதி குடிதண்ணீர், சுகாதார வசதிகளை வேலணை பிரதேச சபை மேற்கொண்டு வருவதுடன்பாதுகாப்பு, போக்கு வரத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ-135)

---

## தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகிகளுக்கான வரவேற்பு

அச்சுவேலி, செப்.18

இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகிகளுக்கான வரவேற்பு விழாவும் கோப்பாய்க் கோமான் அமரர் கு.வன்னியசிங்கத்தின் 55 ஆவது நினைவு தினமும் நாளை வெள்ளிக்கிழமை நீர்வேலி கந்தசாமி கோயிலடியில் உள்ள மகளிர் அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தமிழ்த் தேசியமும் கோப்பாய்க் கோமானும்" என்ற தலைப்பில் வன்னியசிங்கம் நினைவுப் பேருரையை ஆற்றவுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோப்பாய்த் தொகுதி கிளையின் தலைவர் சி.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.


நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். (வ-11)

---

# மரண அறிவித்தல்கள்

## மாரிமுத்து பாலசுந்தரம்

(முன்னாள் உரிமையாளர் பாலா கராஜ் - சாவகச்சேரி)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட மாரிமுத்து பாலசுந்தரம் 14.09.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து- மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மட்டுவில் வாகையடியைச் சேர்ந்த துரைபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், பவளராணியின் அன்புக் கணவரும், மாரிமுத்து கனகசபை, காலஞ்சென்ற மாரிமுத்து சிவஞானத்தின் அன்புச் சகோதரனும், சுதாமினி (கனடா), தர்மேந்திரா(ஆஸ்திரேலியா-பல் வைத்தியர்), சத்தியதீபா(கனடா), அனுராதா (காணி நிர்வாக திணைக்களம்- யாழ்ப்பாணம்), யசேந்தினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கினேஸ்வரன், காயத்திரி, நந்தகுமார், சியாமளன்(ரட்ணாஸ் வைன்டிங் சொப் -ஸ்ரான்லி றோட்), பிரபாகர் ஆகியோரின் அன்பு மாமனாரும், கந்தசாமி, யோகராணி, தர்மரட்ணம், ஜெயராணி, அமிர்தராணி, பாக்கியதுரை, அற்புதராணி, மகாதேவா ஆகியோரின் அன்பு மைத்துனரும், வினிசன், வினிஜா, இசான், மாயா, அஸ்வின், றெவின், அஸ்மிகா, பர்மினி, ஆகாஷினி, கவின்சன், ஆரியா, விதிஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(18.09.2014)வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10,00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

86/2, வளாக வீதி,
கொக்குவில் கிழக்கு,கொக்குவில்.
தொ.பே.: 021 222 5366, 077 614 1496

(AF82314)(5.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பூமணி வீரசிங்கம்



யாழ்ப்பாணம் கச்சேரி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி வீரசிங்கம் 15.09.2014 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-இராசம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான துரையப்பா-தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வீரசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், மங்களேஸ்வரி, பாலச்சந்திரன் (அக்கன்), விமலேஸ்வரி, சந்திரகுமார் (இந்திரன்), ஜெகதீஸ்வரி (லலி), உதயகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் மோகனதாஸன் (காந்தி), சசிபாலினி (மேனகா), காலஞ்சென்ற விஜயகுலராஜா மற்றும் அனுஷா, ஏகலநாதன் (நந்து), மிராளினி (மீரா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் புவனேஸ்வரி, லோகநாதன், கமலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் செல்வநாயகம், இந்திராதேவி, சிறீஸ்கந்தராசா, கௌரிதேவி, புஷ்பராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் கார்த்திகா, யதுர்ஷன், பிரியந், பிரியாஸ், துவிஷா, தூரிகா, பிரீத்திக், சிராம், தஸ்வர், காவியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2014) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
T.P : 077 196 9955, 077 193 0148

(52346)
(7.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

---

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் லோகினி ஜெகநாதன்

திதி: தசமி (18.09.2014)

மலர்வு 17.12.1972 — உதிர்வு 29.09.2013

ஆண்டொன்று கடந்தாலும் உங்கள்
அன்பு முகம் மனதைவிட்டு நீங்காது
உங்கள் பிரிவு எமைத் தினமும் துன்பத்தில்
ஆழ்த்திடுதே என்செய்வோம் உங்கள் ஆத்மா
காளிஅன்னை பாதத்தை நீங்காது
நிலைத்திடும் பேறு பெற வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.
மில்லேன், காளிகோயிலடி, மல்லாகம்.

---

அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
ஞானப்பிரகாசம் சிவலிங்கம்
(சந்திரன்)

பிறப்பு 09.08.1953 — இறப்பு 20.08.2014

20.08.2014 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (19.09.2014) வெள்ளிக்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் அன்னாரது திருவையாறு 118/3, கிளிநொச்சி இல்லத்தில் நடைபெற்று, காலை 6.00 மணியளவில், அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அந்நிகழ்விலும் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். (தயவுசெய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

மேலும், எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்திகேட்டு ஓடோடி வந்து உதவிய உள்ளங்களுக்கும், தொலைபேசி, கண்ணீர் அஞ்சலி, பதாகைகள், மலர்வளையம் மற்றும் தேவையான உதவிகள் புரிந்தவர்களுக்கும், இறுதிக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இல. 118/3, திருவையாறு,
கிளிநொச்சி

குடும்பத்தினர்.

## ஸ்கந்தாவில் நாவலருக்கு சிலை

யாழ்ப்பாணம், செப்.18

கொழும்பு நாவலர் நற்பணி மன்றம், யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளிலும் நாவலர் பெருமானின் சிலைகளை நிறுவவுள்ளது.

முதலாவது சிலை நிறுவும் வைபவம் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வளாகத்தில் இடம்பெறும்.

சைவத்தையும் தமிழையும் தனது இரு கண்கள் எனப் போற்றிக் காத்தருளிய மண்ணின் மைந்தரான நாவலர் பெருமானின் சிலைகளை கொழும்புப் பகுதி பாடசாலைகளில் நிறுவியமை போன்று யாழ்ப்பாணத்திலும் நிறுவுவதற்கு மேற்படி மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

நாவலர் சிலை நிறுவும் பணிகள் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளில் இடம்பெறும் என்றும் மன்றம் அறிவித்துள்ளது. (ஓ)

# வேலணை பிரதேச சபையில் 24 பேருக்கு நியமனங்கள்



வேலணை பிரதேச சபையில் தற்காலிக ஊழியர்கள் உட்பட 24 பேருக்கு புதிய நியமனங்கள் திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

தற்காலிக ஊழியர்கள் 17 பேருக்கு புதிய நியமனங்களும் 7 பேருக்கு நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் ஆளுநர் அனுமதியுடன் பிரதேச சபை இந்த நியமனங்களை வழங்கியது.

வாகனச் சாரதி, மின் இணைப்பாளர், அலுவலக ஊழியர், சுகாதாரப் பகுதிக்கான ஊழியர்கள், காவலாளிகள் பதவிகளுக்கு வழங்கப்பட்ட நியமனங்களுக்கான நியமனக் கடிதங்களை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்டீன், பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சிவராசா, யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜே.எப்.ஜக்ஸன், பிரதேச சபை உறுப்பினர் எஸ்.கனகரத்தினம் ஆகியோர் வழங்கினார்கள். வேலணை பிரதேச சபையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (வ-7)

## திருவுடையாள் மலரின் பாகம்-5 இற்கு ஆக்கங்கள் கோரல்

கரணவாய், செப்.18

கரவெட்டி பிரதேச செயலகத்தால் வருடாந்தம் வெளியிடப்படும் திருவுடையாள் பிரதேச மலரின் பாகம்-5 இற்கு பிரதேச படைப்பாளிகளிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

வடமராட்சி தெற்கு-மேற்கு, கரவெட்டி பிரதேச கலாசாரப் பேரவையின் வருடாந்த வெளியீடான திருவுடையாள் பாதம் என்ற பிரதேசமலரின் 5 ஆம் பாகம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வெளியிடப்படவுள்ளது.

குறித்த மலரில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட படைப்பாளிகளின் சிறுகதைகள், குறுநாடகம் மற்றும் கவிதை என்பன இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

அவற்றை அனுப்ப விரும்பும் படைப்பாளிகள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் தமது ஆக்கங்களை பிரதேச செயலகத்தில் கலாசார உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்குமாறு கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி அறிவித்துள்ளார். (வ-108)

## உள்ளூராட்சிசபை நூலகங்களை பார்வையிடும் மாணவர்கள்

தென்மராட்சி, செப்.18

ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகவுள்ள தேசிய வாசிப்பு மாதம் தொடர்பான அறிவைப் பெறும் நோக்கில் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் உள்ளூராட்சி சபைகளின் பொது நூலகங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

நூலகங்களுக்கு வரும் மாணவர்கள் அங்குள்ள சிறுவர் பகுதியின் செயற்பாடுகள் தொடர்பாக பார்வையிடுவதுடன் அவை தொடர்பாக நூலக உத்தியோகத்தர்களிடமும் விளக்கங்களைக் கேட்டுப் பெற்றுக்கொள்கின்றனர்.

இடைநிலை, உயர்தர வகுப்பு மாணவர்கள் நூலக அமைப்பு முறைகள், உடனுதவும் பகுதி, நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதி, வாசிப்புப் பகுதி போன்றவற்றைப் பார்வையிட்டு வருகின்றனர். மாணவர்களுடன் ஆசிரியர்கள், பாடசாலை நூலகர்கள், நூலக ஆசிரியர்கள் போன்றோரும் வருகை தருகின்றனர். (வ-9)

# சைவசமய அறிவுப் பரீட்சைக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

வண்ணை-சாந்தையர்மடம் கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக் கழகம், பாடசாலை மாணவர்களுக்கு இடையே சைவசமய அறிவை விருத்தி செய்யும் நோக்கில் கடந்த 60 வருட காலமாக நடத்தி வரும் சைவ சமய அறிவுப் பரீட்சை, செயல் முறைப் போட்டி ஆகியவற்றை இந்த வருடமும் நடத்தவுள்ளது.

தரம் 1,2 மாணவர்களுக்கு நீதிநூல் மனனப்போட்டியும், தரம் 3 தொடக்கம் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கு சைவசமய அறிவுப் பரீட்சையும், கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் செய்தல் ஆகிய செயன் முறைப் போட்டிகள் கீழ் பிரிவு, மேற் பிரிவு என்னும் இரு பிரிவுகளில் பங்குபற்றும் வகையிலும் ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன.

சைவசமய அறிவுப் பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 19 திகதியும், நீதி நூல் மனனப்போட்டி ஒக்ரோபர் 26ஆம் திகதியும், செயன்முறைப் போட்டி நவம்பர் மாதம் 2 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

...ப்பிலும், போட்டி... டியிலும் முதல் 3 இடங்களைப் பெறுவோருக்கான பரிசில்கள் அடுத்த வருடம் சிவராத்திரி தினத்தன்று வழங்கப்படும்.

மேற்படி பரீட்சையிலும், போட்டிகளியிலும் பங்குபற்ற விரும்புவோர் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82 நாவலர் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பி.ப.2 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் ஒரு பாடசாலையில் இருந்து சைவ சமய அறிவுப் பரீட்சைக்கு 100 பரீட்சார்த்திகள் தோற்றுவார்களானால் அந்தப் பாடசாலையை ஒரு பரீட்சை நிலையமாக அமைத்துக் கொள்ளலாம் என்றும், விண்ணப்பப் படிவங்கள் பாடசாலைகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் எதிர் வரும் 19 ஆம் திகதிக்குள் பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பிக்குமாறும், சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பரீட்சைச் செயலர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (வ)

THE HALO TRUST

GETTIG MINES DUT OF THE GROUND, FOR GOOD

**சாரதிக்கான பதவி வெற்றிடம்**

ஹேலோ டிரஸ்ட் ஆனது பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 14 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹேலோ டிரஸ்ரின் எதிர்கால வேலைக்காக சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர்களின் அத்தியாவசிய சேவைகளாவன, மிதிவெடி அகற்றும் அணிகளை மிதிவெடித் தளத்திற்கு நகர்த்திச் செல்வதும் அங்கு விபத்து நிகழ்ந்தால் அம்புலன்ஸ் சேவை வழங்குவதும் ஆகும்.

* விண்ணப்பதாரிகளிடமிருந்து ஆங்கிலம் பேசும்திறன் எதிர்பார்க்கப்படுகின்றது.
* அனைத்து விண்ணப்பதாரிகளும் AD ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

ஆர்வமும், அனுபவமும் உள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவரங்கள் அடங்கலாக, தங்கள் விவரங்களை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**ஹேலோ ரஸ்ட்**
12, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 3779

அனைத்து விண்ணப்பங்களும் (47877) (7.6.3)
22 புரட்டாதி 2014 திங்கட்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர சுவாமி திருக்கோயில்**

புரட்டாதி சனி விஞ்ஞாபனம்

மெய்யடியார்களே!

நிகழும் புரட்டாதி மாதம் 04ஆம் நாள் (20.09.2014) முதலாவது புரட்டாதி சனி விரத விஞ்ஞாபனம் நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்திலே நடைபெற திருவருள் கூடியுள்ளது. தொடர்ந்து 4 சனி புரட்டாதி சனி விரதமாக அனுஷ்டிக்கப்படும்.

புரட்டாதி சனி விரதம் அனுஷ்டிக்கும் அடியார்கள் நகுலமாமுனிவர், நளன், அர்ச்சுணன், முசுகுந்த சர்க்கரவர்த்தி மற்றும் பல சித்தர்கள், முனிவர்கள் ஸ்நானஞ் செய்து பலன் பெற்ற நகுலேஸ்வர சாகர சங்கம கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தமாடி தொடர்ந்து நவக்கிரகங்களுக்கும் சனீஸ்வரப் பெருமானுக்கும் நடைபெறும் விஷேட அபிஷேக ஹோமங்களில் பங்கு கொண்டு எம்பெருமானின் அருளைப் பெறுவீர்களாக.

எல்லா அடியார்களும் ... பெறுவதற்காக ஆலயத்திலே எள்தீபம், நெய்தீபம், அர்ச்சனைப் பொருள்கள் என்பவற்றைப் பெற்று நடைபெறும் பூஜையில ... நவக்கிரக சனீஸ்வரப் பெருமானுக்கு நீர் ஊற்றியும் எள்தீபம் ஏற்றியும், அர்ச்சனை செய்வித்தும் காகத்திற்கு எள் சாதம் வைத்தும ... பரிகாரங்களைப் பூர்த்தி செய்வீர்களாக.

* ஆலயத்திலே எள்தீபம், அர்ச்சனைப் பொருள்கள், நெய்தீபம், எள்சாதம், தூயபால, ... கறுப்புத்துணி போன்ற அனைத்துப் பொருள்களும் பெற்றுக் கொள்ளலாம்.

நிகழும் புரட்டாதி மாதம்
17ஆம் நாள் (03.10.2014) கேதார கௌரிவிரத விஞ்ஞாபனம்
மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 21 தினங்கள் காலை 10.00 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் விஷேட அபிஷேக ஹோமங்கள் நடைபெற்று விஷேட பூஜையும் இடம்பெறும்.

* கேதார கௌரி விரத நூல் எடுக்கும் அடியார்கள் முதல்நாள் வந்து சாகர சங்கம கண்டகி தீர்த்தத்திலே தீர்த்தமாடி நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்திலே விநாயக வழிபாட்டுடன் மகாசங்கற்பம் செய்து பெயர்களைப் பதிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சர்வே ஜனகா சுஹினோ பவந்து

நகுலேஸ்வரம்,
கீரிமலை.

ராஜராஜ ஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள்,
நகுலேஸ்வர ஆதீனம், கீரிமலை.

(அ/52303)(12-3-6)

**சோதிடம்**

கல்வியில் சிக்கலா? உத்தியோகம் கிடைக்குமா?
வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா?
வெளிநாடு போகலாமா? நோய் நீங்குமா? கேட்டுப் பாருங்கள்.
'சிவா சோதிட நிலையம்' 100, அரசடி வீதி, கந்தர்மடம்.
(யாழ்.இந்து மகளிர் கல்லூரியடி) யாழ்ப்பாணம். T.P.: 077 899 6281
(62340)(5.3.6)

**வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு (இலவச தொழிற்றிறன் பயிற்சி) நிறுவனம்**
**முகவரி மாற்றம்**

இலக்கம் 26, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மற்றும் இலக்கம் 105, இராசபாதை திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இயங்கி வந்த மேற்படி தொண்டு நிறுவனம் 09.09.2014 தொடக்கம் இலக்கம் 39, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கவுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவன நிர்வாகி.

(62340)(5.3.6)

**ULTRA TECH வடபகுதியில்**

ULTRA TECH சிமெந்து வடபகுதியில் பொறியியலாளரின் மற்றும் கட்டட ஒப்பந்ததாரர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஆதீத்தியா பீறிலா கம்பனியின் ULTRA TECH சிமெந்து தனது விற்பனைத் துறையை வடபகுதி நோக்கி நகர்த்தி உள்ளது. கல் அரிபவர்கள் மற்றும் சகல தேவை... சிமெந்து என்று பொறியியலாளரின் சிபார்சுகளுக்கும் சிறந்த ... "ULTRA TECH சிமெந்து" பெற்ற வெற்றிச் சின்னம் "ULT... ...யைக் சீக்கிரத்தில் காயும் தன்மையும் அதிகூடிய பசைத் தன்மையை... கொண்ட சிமெந்து. வாடிக்கையாளர்களே ULTRA TECH சிமெந்தைப் பாவித்து நீங்கள் நேரத்தை மிச்சம் பிடித்து பணத்தையும் சேமித்து இலட்சாதிபதி ஆவதற்கு அரிய சந்தர்ப்பத்தை ULTRA TECH ஏற்படுத்தி உள்ளது. கூடிய கற்களைப் பெறலாம்.

உடனடியாக ஓடர்களைப் பதிவுசெய்யும் முகவரி : (52271)(7.6.3)
**City Suppliers**
129, Stanley Road, Jaffna. T.P.No : 021 221 9300

## வன்னேரிக்குளம் ம.வியின் மிகச் சிறப்பான வைர விழா

கிளிநொச்சி, செப். 18

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தின் வைர விழா அண்மையில் நடைபெற்றது. பாடசாலை முதல்வர் த.பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் கலந்துகொண்டார்.

இந்த வைரவிழாவில் பாடசாலையின் பழைய மாணவரும், நோர்வே நாட்டில் வசிப்பவருமாகிய தி.லிங்கேஸ்வரனின் ஏற்பாட்டில் பாடசாலையின் வாயில் வளைவு அமைக்கப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளரினால் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு சைக்கிள் உட்பட பல பரிசில்கள் வழங்கப்பட்டன.

வைரவிழா கலைநிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன. வைர விழா மலரை பாடசாலை முதல்வர் வெளியிட்டு வைக்க வலயக் கல்விப் பணிப்பாளர் பெற்றுக்கொண்டார். (து-18)

## கிளிநொச்சி வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை

கிளிநொச்சி, செப். 18

கிளிநொச்சி கல்வி வலயத்தில் இடைநிலைப் பிரிவில் 18 கணித ஆசிரியர்களுக்கும் 28 விஞ்ஞானப் பாட ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது. இந்த ஆண்டு248ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்றிருப்பதன் காரணமாகக் கிளிநொச்சி கல்வி வலயத்தின் பல பாடசாலைகளில் ஆசிரியர் ஆளணி நெருக்கடி காணப்படுகின்றது.

இதன் காரணமாக மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. கிளிநொச்சி வலயத்தின் கிராமப்புறப் பாடசாலைகளிலே ஆசிரியர் நெருக்கடி பெரும் இடர்களை உருவாக்கியுள்ளது.

குறிப்பாக சில பாடசாலைகளில் தமிழ்ப் பாடத்துக்குக் கூடஆசிரியர்இல்லாதநிலைமை காணப்படுகின்றது.பெற்றோர்கள் நாள்தோறும் வலயக் கல்விப் பணிமனைக்கு வருகை தந்து தமது பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர். (து-18)

# மானிப்பாய் மத்திய சந்தை விரைவில் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு

## 90 லட்சம் செலவில் மீன் விற்பனை நிலையம்

வலி.தென்மேற்கு, செப்.18

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் முக்கிய சந்தையாக உள்ள மானிப்பாய் மத்திய சந்தை பல மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. முதற் கட்டமாக பல இலட்சம் ரூபா செலவில் வாங்கப்பட்ட காணியில் மீன் சந்தை நவீனமான முறையில் சகல வசதிகளுடனும் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

> வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள ஏழு சந்தைகளில் மானிப்பாய் மத்திய சந்தை முன்னணி வகிப்பதுடன் பிரதேச சபைக்கு வருடாவருடம் அதிக வருமானத்தை பெற்றுக் கொடுக்கின்றது.

வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள ஏழு சந்தைகளில் மானிப்பாய் மத்திய சந்தை முன்னணி வகிப்பதுடன் பிரதேச சபைக்கு வருடாவருடம் அதிக வருமானத்தையும் பெற்றுக் கொடுத்து வருகின்றது.

மானிப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி, சண்டிலிப்பாய் ஆகிய ஐந்து கிராமங்களை உள்ளடக்கிய மானிப்பாய் கோவில்பற்று பகுதியில் யாழ்ப்பாணம்-காரைநகர் வீதியில் பழமை வாய்ந்த சிறிய கட்டடத்தில் வசதியீனங்கள் மத்தியில் இயங்கி வரும் இந்தச் சந்தை வளாகத்தில் மரக்கறி விற்பனை நிலையம், கடலுணவு விற்பனை நிலையம், ஆட்டிறைச்சி, கோழியிறைச்சி, மாட்டிறைச்சி விற்பனை நிலையங்கள் உட்பட மேலும் பல வர்த்தக நிலையங்களும் இயங்கி வருகின்றன.

மேற்படி சந்தைக்குத் தினசரி பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்வதற்காக வருகின்றபோதும் வளாகத்திலுள்ள கட்டட அமைப்புக்கள் நெருக்கமாக அமைந்துள்ளதால் மக்கள் அங்கு நடமாட முடியாமல் பெரும் சிரமங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகிறார்கள்.

இந்த நிலையில் மேற்படி சந்தையை தற்போதய சூழ்நிலைக்கேற்றவாறு அமைப்பதற்குப் பிரதேச சபைக்கு உதவ முன்வந்துள்ள மானிப்பாய் கோவில்பற்று வர்த்தக சங்கம், சந்தை வளாகத்துக்கு அருகில் தனியாருக்குச் சொந்தமான 5 பரப்புக் காணியைக் கொள்வனவு செய்து பிரதேச சபையிடம் கையளித்தது.

இந்த நிலையில் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் நெல்சிப் திட்டத்தின் கீழ் கிடைத்த பெரும் தொகையான நிதியுதவியுடன் சந்தைக் கட்டடத்தை அமைக்க முன்வந்த பிரதேச சபை சந்தைக் கட்டடத்துக்கான வரைபடத்தை பட வரைஞர்களின் உதவியுடன் தயாரித்து வைத்திருந்தது.

அரசியல் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக நெல்சிப் திட்டத்தின் கீழ் கிடைத்த நிதியில் மாற்றம் செய்யப்பட்டதால் சந்தை அபிவிருத்தி வேலையில் தடங்கல் ஏற்பட்டது.

தற்பொழுது பிரதேச சபைக்கு அபிவிருத்தி வேலைகளுக்காகப் பொது நிறுவனத்தினால் ரூபா 90 லட்சம் கிடைத்துள்ளது. இந்த நிதியுதவியைப் பயன்படுத்திக் கடந்த இரு வருடங்களுக்கு மேலாகத் தடைப்பட்டிருக்கும் சந்தை அபிவிருத்தி வேலையை ஆரம்பிப்பதற்கு முன்வந்துள்ள பிரதேச சபை முதற் கட்டமாக சந்தைக்கு அருகில் வாங்கப்பட்ட காணியில் பல வசதிகளுடன் நவீன முறையில் மீன் சந்தையை அமைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. (து-115)

## குப்பை ஏற்றிய வாகனங்கள் மூடியவாறு வீதிகளில் பயணிக்க வேண்டும்



தென்மராட்சி தெற்கில் உள்ள நெல் வயல்களுக்குப் போடுவதற்கெனக் குப்பை மற்றும் உர வகைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்படுவதாக நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர். குப்பைகளை வாகனங்களில் ஏற்றி அதனை திறந்த நிலை யில் கொண்டு செல்லப்படும் வாகனங்களைத் தடுத்து நிறுத்தி அவற்றை மூடிய பின்னர் கொண்டுசெல்ல அனுமதிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். வாகனங்களில் குப்பைகளை ஏற்றி மூடாமல் வீதிகளில் கொண்டு செல்வதால் பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுகின்றது.

இதனைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் கூறினர். அத்துடன் உழவு இயந்திரங்களில் கொண்டு செல்லப்படும் கலப்பைகள் பாதுகாப்பற்ற முறையில் கொண்டு செல்லப்படுவதால் கலப்பையின் இரு கரைகளிலும் காணப்படும் இரும்புக் கேடர்களினால் பொது மக்களுக்கும் வீதியில் செல்லும் வாகனங்களுக்கும் பாதிப்பு ஏற்படாதிருக்கவே கலப்பையை பெட்டியில் ஏற்றிச் செல்லுமாறு தாம் அறிவுத்துவதாகவும், பாதுகாப்புக் கவசம் பொருத்தப்பட்டுள்ள கலப்பையை உழவு இயந்திரத்தில் பொருத்திக் கொண்டு செல்வதற்கு அனுமதிப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (து-9)


A/L பரீட்சைகளின் பின் தகவல் தொழினுட்பம் மற்றும் ஆங்கில கல்வி

தற்பொழுது நேரடி பதிவுகள் ஆரம்பம்

"நல்லதோர் ஆரம்பம்"
உங்கள் தகவல் தொழில்நுட்ப கல்வி சீஎஸ்சி-ஏசியனுடன் தொடங்கட்டும்.

Sept. 21st ஞாயிறு

யார் இதில் பங்குபற்றலாம் ?
இம்முறை உயர்தர பரீட்சை எழுதிய மாணவ, மாணவியர், கொம்பியூட்டர் கல்வியில் ஆர்வமுள்ள 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோர் அனைவரும் பங்குபற்றலாம்.

வினாக்கள் எவ்வாறானவை?
இலகுவான 25 பொது அறிவு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் Multiple Choice Questions வகையைச்சார்ந்தவை

Mega Computer Scholarship Win 75%

புலமைப்பரிசில்
புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவ, மாணவியர் பெறும் மதிப்பெண்களுக்கமைய முறையே 50%, 60%, மற்றும் 75% வரையான ஸ்கொலர்ஷிப் வழங்கப்படும்.

பாடப்புத்தகமும் சான்றிதழும்
அனைத்து பாடநெறிகளுக்கும் பயிற்சிப்புத்தகங்கள் இலவசமாகவும் பரீட்சைகளின் இறுதியில் ISO 9001 : 2008 சர்வதேச அங்கீகாரம் பெற்ற இந்திய டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்படும்.

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
யாழ்.நகர்
2G ஸ்ரான்லி வீதி,
021 2225677





HOME IS NOT HOME WITH OUT A HOME THEATER

INTEX CURSOR MIPAQ Mr. Plus

CURSOR E-2530 (2.1) Rs.2,780/-
MIPAQ M280 (2.1) Rs.3,950/-
MIPAQ M-100 (2.1) Rs.3,220/-
Bluetooth CURSOR BT-2855(2.1 Bluetooth) Rs.8,600/-
Intex IT-4000usb Rs 7500/-
MIPAQ M288 (2.1) Rs.4,000/-
MIPAQ M2655 (2.1) Rs.5,820/-
MIPAQ M2475 (2.1) Rs.5,560/-
CURSOR HS-2900 (2.1) Rs.7,730/-
CURSOR HS-2840 (2.1) Rs.11,580/-
MIPAQ M5950 (5.1) Rs.8,020/-
CURSOR HT-6100 (5.1) Rs.18,870/-
MR. PLUS 5816 (5.1) Rs.9,710/-
INTEX IT- 4000BT (5.1 Bluetooth) Rs.10,500/-
DJ-7000W Rs.11,370/-
DJ-12000W Rs.19,670/-
MR. PLUS 5806 (5.1) Rs.15,850/-
Intex 4600 Rs 8500/-

MICRO PC SYSTEMS
யாழ்ப்பாணம் : இல. 218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
E-mail: sales@micropcsystems.com
Web: www.micropcsystems.com
www.facebook.com/MicroPcSystemsPvtLtd
யாழ்ப்பாணம் - 021 222 5893 வவுனியா - 024 222 1969
நெல்லியடி - 077 303 9536 திருகோணமலை - 026 222 6977
கிளிநொச்சி - 077 396 3278 கொழும்பு - 011 236 7405
Credit card accepted HSBC
HOTLINE - 0777308417



ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபூலில் வெளிநாட்டு இராணுவத் தொடரணியை இலக்குவைத்து தலிபான் அமைப்பினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட கார்க் குண்டுத் தாக்குதலில் கூட்டுப்படையினர் மூவர் உயிரிழந்ததாக நேட்டோ தெரிவித்துள்ளது. இதன்போது. 16 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். நேட்டோ படைவீரர் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது (வ)

## எபோலாவை கட்டுப்படுத்த ஆபிரிக்காவுக்கு விரைகிறது அமெ. படை

வொஷிங்டன். செப்.18


மேற்கு ஆபிரிக்க நாடுகளில் வேகமாகப் பரவி வரும் எபோலா நோயைக் கட்டுப் படுத்த. இராணுவ மருத்துவப் படையைச் சேர்ந்த 3.000 வீரர்களை அங்கு அனுப்ப அமெரிக்க ஜனாதிபதி முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2.400- இற்கும் மேற்பட் டோரைக் காவு கொண்ட அந்த நோய். லைபீரியாவில் ஆரம் பித்து சியாரா லியோன். கீனியா. நைஜீரியா ஆகிய நாடுகளில் கட்டுக்கடங்காமல் பரவி வருகிறது.

தற்போது கொங்கோ நாட்டிலும் அந்த நோய் பரவியுள்ளதா கக் கூறப்படுகிறது. அந்தநோ யால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட லைபீரியா வுக்குப் பெரும்பாலான அமெ ரிக்கப் படையினர் அனுப்பப் படுவர் என்று தெரிகிறது.

அங்கு 100 படுக்கைகளைக் கொண்ட 17 எபோலா சிகிச்சை மையங்களை அந்தத் துருப் பினர்கள் அமைப்பர் என்றும் கூறப்படுகிறது. (வ)

## ஆஸி. அருகே குன்றின் மீது கட்டப்பட்ட கிளிஃப் ஹவுஸ்



கொன்பெர்ரா, செப்.18

ஆஸ்திரேலியாவில் உள்ள குன்று ஒன்றின் ஓரத்தில் கொன்செப்ட் வீடு ஒன்றை அந்தநாட்டைச் சேர்ந்த மாட்ஸ்கேப் நிறுவனம் கட்டியுள்ளது.

ரியல் எஸ்டேட் நிறுவனமான மாட்ஸ்கேப், கிளிஃப் ஹவுஸ் என்ற வீட்டை குன்றின் ஓரத்தில் கட்டியுள்ளது. மாட்ஸ்கேப் ஆஸ்திரேலியாவின் தென்மேற்கு கடற்கரையில் உள்ள குன்றின் ஓரத்தில் இந்தக் கொன்செப்ட் வீட்டைக் கட்டி யுள்ளது. குன்றின் ஓரம் கட்டப்பட்டுள்ள வீடு 5 மாடிகள் கொண்டது. வீட்டுக்குள் கார் நிறுத்தும் இடத்தில் இருந்து லிப்ட் மூலம் தான் செல்ல முடியும். தரைத் தளத்துக்குச் சென்றால் இந்திய பெருங்கடலில் வீடு இருப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

ஏனென்றால் கண்ணாடி ஜன்னல்கள் வழியாக இந்தியப் பெருங் கடலில் அலைகள் ஆர்ப்பரிப்பதைப் பார்க்க முடிகிறது. சகல வசதிகளும் உள்ளடக்கியதாக இந்த வீடு அமைக்கப்பட்டுள்ளது. (வ)

# கிழக்கு உக்ரைன் பகுதிக்கு சுயாட்சி வழங்க நடவடிக்கை

## புதிய பிரேரணைக்கு நாடாளுமன்றம் ஒப்புதல்

உக்ரைனின் கிழக்குப் பகுதி யில் கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள பகுதிகளுக்கு சுயாட்சி வழங்கவும், அரசுக்கு எதிராக மோதலில் ஈடுபட்டு வருவோ ருக்குப் பொது மன்னிப்பு வழங்கவும் வகை செய்யும் புதிய பிரேரணைக்கு அந்த நாட்டு நாடாளுமன்றம் ஒப்பு தல் அளித்துள்ளது.

செப்ரெம்பர் 5 ஆம் திகதி ஒப்புக்கொள்ளப்பட்ட புதிய போர் நிறுத்த உடன்பாட்டின் படி இந்தப் புதிய பிரேரணை உருவாக்கப்பட்டுள்ளது. இதன் படி சிறையில் அடைக்கப்பட் டுள்ள கிளர்ச்சியாளர்கள் விடு விக்கப்படுவர்.

அதேபோல் கிழக்கு உக் ரைன் பகுதியில் உள்ள அரசு அலுவலகங்களில் இருந்து



கிளர்ச்சியாளர்கள் வெளியேறு வதோடு, ஆயுதங்களை அர சுப்படையினரிடம் ஒப்படைக்க வேண்டும். தங்கள் பிடியில் உள்ள அரசுப் படையினர் மற் றும் ஏனைய கைதிகளை விடுதலை செய்ய வேண் டும். ஆனால் உக்ரைன் அரசின் புதிய சட்டம் குறித்து கருத்து தெரிவித்துள்ள டனட் ஸ்க்கைச் சேர்ந்த கிளர்ச்சியா ளர்கள் பிரிவின் தலைவர் இனி யும் உக்ரைனுடன் இணைந்து இருக்க விருப்பமில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

தங்கள் வசம் உள்ள பகுதி களை இணைத்து புதிய நாட்டை உருவாக்க வேண் டும் என்றும் கிளர்ச்சியாளர் கள் கோரி வருகின்றனர். இந்த நிலையில் பிரச்சினை உருவாகக்காரணமாக இருந்த ஐரோப்பிய யூனியனுட னான உடனான வர்த்தக உடன்பாட்டுக்கும் உக்ரைன் நாடா ளுமன்றம் ஒப்புதல் தெரி வித்துள்ளது.

கடந்த 2013 நவம்பரில் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட அப் போதைய ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் மறுத் ததை அடுத்து நாடெங்கிலும் எழுந்த போராட்டங்களே தற் போது உக்ரைனில் நிலவி வரும் பிரச்சினைகளுக்கு ஆரம்பப் புள்ளியாக அமைந் துள்ளன. (வ)

# வத்திக்கான் தேவாலய காரில் கஞ்சா

வத்திக்கான் தேவாலயத்தின் தூதரகப் பலகைகளுடன் சென்ற கார் ஒன்று பிரான்ஸில் சோதனையிடப்பட்டபோது 4 கி.கிராம் கோகைன் மற்றும் 200 கிராம் கஞ்சா என்பன அதற்குள் இருந்ததால் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்தத் தக வல் நேற்று வெளிவந்ததும் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



குறித்த கார் தேவாலயத்தின் நூலகத்தில் பணிபுரிந்து கடந்த 2003ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற ஆர்ஜென்ரீனா வைச் சேர்ந்த கார்டினல் ஜோர்ஜ் மெஜியாவுக்குச் சொந்தமானதா கும். தற்போது 91 வயதாகும் அவர் முதுமை காரணமாகப் படுக்கையில் இருக்கின்றார்.

தற்போதைய போப்பாண்ட வரான பிரான்சிஸ் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப் பட்ட இரண்டு தினங்களில் சக நாட்டவரான மெஜி யாவைச் சந்தித்தார். அப்போது மாரடைப்பு ஏற்பட்டதால் மெஜியா ரோமில் இருந்த மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டிருந்தார்.

மெஜியாவின் பிரத்தியேக செயலாளர் இந்தக் காருக் கான வருடாந்தப் பரிசோத னையைச் செய்யவேண்டி அந்தப் பொறுப்பை இரண்டு இத்தாலி நாட்டவரிடம் ஒப் படைத்திருந்தார் என்றும் - அவர்கள் இந்த வாய்ப்பைப் பயன் படுத்திக்கொண்டு ஸ்பெயினுக்குச் சென்று இந் தப் போதைப் பொருள்களை வாங்கியிருக்கக்கூடும் என் றும் கருதப்படுகின்றது.

ஆனால் உத்தியோகபூர்வ மாக இந்தத் தகவல் உறுதி செய்யப்படவில்லை.

அவர்கள் இருவரும் திரும்பி வரும்போது பிரெஞ்சு அல்ப்ஸ் பகுதியில் உள்ள சம்பெரி என்ற இடத்தில் உள்ள சோதனைச் சாவடி யில் இந்தக் கார் சோதனைக் காக நிறுத்தப்பட்டது. அவர் கள் இருவரிடமும் வத்திக்கான் கடவுச் சீட்டும் இல்லை என் பதால் வத்திக்கானுக்கு இதில் எந்த நேரடித் தொடர்பும் இல்லை என்று சட்டத் தக வல்கள் குறிப்பிடுகின்றன.

இந்தச் சம்பவத்தை உறுதி செய்துள்ள வாடிகன் அலுவல கம் இதில் தங்களுடைய ஊழி யர்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பதை வலியுறுத் திக் கூறியுள்ளது. (வ)

# ஸ்கொட்லாந்துக்கு கூடுதல் அதிகாரம் வழங்க உறுதி

ஸ்கொட்லாந்து விடுதலை தொடர்பான பொது வாக் கெடுப்பு நெருங்கி வரும் நிலையில். அந்தப் பிராந்தி யத்துக்கு கூடுதல் சுயாட்சி வழங்கப்படும் என்று ஒருங் கிணைந்த பிரிட்டனை விரும் பும் தலைவர்கள் உறுதி யளித்துள்ளனர்.

லேபர் கட்சியின் மிலிபாண்ட், லிபரல் டெமாக்ரடிக் கட்சி யின் நிக் க்ளெக், பிரதமரும் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவருமான டேவிட் கமரூன் ஆகியோர் இதற் கான உடன்பாட்டில் கையெ ழுத்திட்டுள்ளனர்.

நாட்டின் வளங்களை சமமா கப் பங்கிடுவது தொடர்பான திட்டங்களை வகுப்பதற்கும் அவர்கள் உறுதியளித்துள் ளனர். எனினும், இது போன்ற திட்டங்களை அறிவிப்பதற்கு இவ்வளவு காலம் ஏன் எடுத் துக் கொண்டது என்று விடு தலைக்கு ஆதரவான தலை வர்கள் கேள்வி எழுப்பியுள் ளனர்.

பொது வாக்கெடுப்பில் விடு தலைக்கு ஆதரவான முடிவு வரக்கூடும் என்று அஞ்சியே இதுபோன்ற அறிவிப்புகள் தற்போது வெளியாகி வரு வதாகவும் அவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். இதனிடையே, ஸ்கொட்லாந்து பிரிந்து சென் றால் அதன் சுகாதாரத் திட்டங் கள் முழுமையாகப் பாதிக்கப் படும் என்று லேபர் கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பி னரான அலிஸ்டார் டார்லிங் கூறியுள்ளார். (வ)

## எல்லையில் ஊடுருவ முயன்ற தீவிரவாதிகள் சுட்டுக் கொலை

ஜம்மு, செப்.18
காஷ்மீர் பள்ளத்தாக்கின் மச்சில் நிலை எல்லை கட்டுப்பாட்டுக்கோட்டின் அருகே ஊடுருவ முயன்ற 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
இது குறித்துப் பேசிய இராணுவ உயர் அதிகாரி, "எல்லையில் அத்துமீறி நுழைந்த தீவிரவாதிகள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர்.
அதனை அடுத்து அவர்கள் எமது வீரர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தினர். தொடர்ந்து நடைபெற்ற மோதலில் 2 தீவிரவாதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். சுட்டுக்கொல்லப்பட்ட தீவிரவாதிகளிடம் இருந்து துப்பாக்கிகளும், வெடி பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.
இதனால் எல்லையில் சற்று பதற்றம் நிலவுகிறது" என்றார். (வ)



மூன்று நாள் சுற்றுப்பயணமாக சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் நேற்று இந்தியா வந்துள்ளார். இரு நாடுகளுக்கிடையே உள்ள வர்த்தகம் மற்றும் முதலீடு குறித்தும் நீண்ட நாள்களாக இரு நாடுகளுக்கிடையே நிலவும் எல்லைப் பிரச்சினை குறித்தும் அவர் பிரதமர் நரேந்திர மோடியுடன் பேசவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பிரதமர் நரேந்திர மோடி நேற்று தனது 64 ஆவது பிறந்த நாளை அகமதாபாத்தில் கொண்டாடிய வேளையில் சீன ஜனாதிபதியை வரவேற்றார். (வ)

## சுப்பிரமணியம் சுவாமிக்கு தக்க பாடம் புகட்டுவோம்

### தமிழக வாழ்வுரிமை கட்சி நிறுவுநர்

சென்னை, செப்.18
தமிழக மீனவர்களுக்கு எதிராகச் செயற்படும் சுப்பிரமணியம் சுவாமிக்கு தக்க பாடம் புகட்டுவோம் என்று தமிழக வாழ்வுரிமை கட்சி நிறுவுநர் வேல்முருகன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
புதுச்சேரியில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.
மீனவர்களை இலங்கை அரசிடம் காட்டிக்கொடுக்கும் சுப்பிரமணியம் சுவாமி, தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கு வந்தால் அவருக்கு தகுந்த பாடம் கற்பிக்கப்படும்.
'கத்தி' திரைப்படம் தங்களுக்கு எதிரான படம் அல்ல என்று கூறிய அவர், படத் தயாரிப்பு நிறுவனத்தை மட்டுமே தாங்கள் எதிர்ப்பதாகக் கூறினார்.
முன்னதாக நடைபெற்ற அந்தக்கட்சியின் ஆலோசனை கூட்டத்தில் முக்கிய நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மத்திய அரசை வலியுறுத்தி 5 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (வ)

## ராஜீவ் கொலைக் குற்றவாளிகளுடன் பாகிஸ்தான் உளவாளிக்கு தொடர்பு?

### தீவிர விசாரணையில் தேசிய புலனாய்வு அதிகாரிகள்

சென்னை, செப்.18
சென்னையில் கைதுசெய்யப்பட்ட பாகிஸ்தான் உளவாளிக்கு, ராஜீவ் கொலைக் குற்றவாளிகளுடன் தொடர்பு இருக்கலாம் என்ற கோணத்தில் தேசிய புலனாய்வு அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.
சென்னை சாலிகிராமத்தில் இலங்கையைச்சேர்ந்த பாகிஸ்தான் உளவாளி அருண் செல்வராசனை தேசியப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கடந்த 10 ஆம் திகதி கைது செய்தனர். இலங்கை யில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளுடன் இணைந்து இந்தியாவுக்கு எதிராக அருண் செல்வராசன் செயற்பட்டதை



பல ஆதாரங்கள் மூலம் தேசிய புலனாய்வு அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.
அருண் செல்வராசனின் கைபேசி இலக்கத்துடன் கடந்த 5 ஆண்டுகளாகத் தொடர்பு கொண்ட அனைவரின் பட்டியலையும் அதிகாரிகள் சேகரித்து விட்டனர். அவர்கள் அனைவரிடமும் பட்டியலில் உள்ளவரிசைப்படி விசாரணை நடந்து வருகிறது. அதேபோல அவருடன் சமூக வலைத்தளங்கள் மூலம் தொடர்பில் இருந்தவர்களிடமும் விசாரணை நடைபெற்று வருகிறது. எனினும் யாரும் கைது செய்யப்படவில்லை.
இந்தநிலையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அருண் செல்வராசன் இருந்ததால், ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர்களுக்கும் அருண் செல்வராசனுக்கும்இடையில்ஏதாவதுதொடர்பு இருக்கலாம் என்று தேசிய புலனாய்வு பிரிவு அதிகாரிகள் சந்தேகப்படுகின்றனர்.
அருண்செல்வராசன் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பயனடைந்து இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அருண்செல்வராசனை நேற்று முன்தினம் காலையில் பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் பொலிஸார் முன்னி[illegible]படுத்தினர். அருண்செல்வராசனை காவலில் எடுத்து விசாரணை நடத்த தேசிய புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கடந்த 12 ஆம் திகதி மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும் என்று நீதிபதி அறிவித்தார். (வ)

## வெள்ளத்தில் மிதக்கும் இறந்த விலங்குகளால் கொலரா அபாயம்

ஸ்ரீநகர், செப்.18
ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளப் பெருக்கில் 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.
ஏராளமான விலங்குகள் இறந்தன. வெள்ளம் வடியாமல் தேங்கி இருக்கும் தண்ணீரில் இறந்து மிதக்கும் விலங்குகளால் அந்தப் பகுதிகளில் கொலரா பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
பல இடங்களில் விலங்குகள் இறந்து துர்நாற்றம் வீசுவதால், தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனாலேயே, வெள்ளம் வடிந்த பகுதிகளில் இருக்கும் வீடுகளுக்கும் பொதுமக்கள் திரும்பாமல் முகாம்களிலேயே தங்கி உள்ளனர்.
எனவே, சுகாதார மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து இறந்து மிதக்கும் விலங்குகளை அப்புறப்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ)

## மூன்று கண்களுடன் மாட்டுக் கன்று

மூன்று கண்களுடன் மாட்டுக் கன்று ஒன்று தமிழ் நாட்டில் உள்ள கொளத்தூர் கிராமத்தில் பிறந்துள்ளது.



சிவபெருமானின் நெற்றிக் கண்ணைப் போல் நெற்றியில் இதன் மூன்றாவது கண் அமைந்திருப்பதால் இந்தக் கன்றைக் காண மக்கள் குறித்த பகுதிக்குச் சென்று வருகின்றனர்.
இந்தக் கன்று தமது கிராமத்துக்கு அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும் என்று தாம் நம்புவதாக அங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (வ)

## மோடிக்கு வயது 64 தாயிடம் ஆசி பெற்றார்



அகமதாபாத், செப்.18
பிரதமர் நரேந்திர மோடி தனது 64 ஆவது பிறந்த நாளான நேற்று குஜராத் மாநிலம் காந்திநகரில் உள்ள தனது தாயார் ஹீரா பாயை நேரில் சந்தித்து ஆசி பெற்றார்.
அப்போது அவரது தாயார் காஷ்மீர் மக்களுக்கு பிரதமர் நிவாரண நிதியில் இருந்து வழங்குவதற்காக 5 ஆயிரம் ரூபா கொடுத்ததாகக் கூறப்படுகிறது. பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த நாளை நாடுமுழுவதும் கொண்டாட பா.ஜ.க. தொண்டர்கள் ஏற்பாடுகள் செய்திருந்தனர். ஆனால் தனது பிறந்த நாளைக் கொண்டாட வேண்டாம் என்றும் அதற்கு பதிலாக காஷ்மீர் வெள்ள நிவாரணத்துக்கு உதவுமாறும் தனது நலம் விரும்பிகளைப் பிரதமர் கேட்டுக்கொண்டார். மேலும் நரேந்திர மோடி பிரதமராகப் பதவியேற்ற பின் தனது சொந்த மாநிலத்துக்கு செல்லுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## உத்தரப் பிரதேச சிறுவன் உயரத்தில் கின்னஸ் சாதனை




உத்தரப்பிரதேசத்தில் வசிக்கும் 5 வயதிலேயே 5.7 அடி உயரமுடைய சிறுவன் உலகில் உயரமுடைய சிறுவனாக கின்னஸ்சாதனை படைத்துள்ளான்.
உத்தரப் பிரதேச மாநிலம் மீரட்டை சேர்ந்த சஞ்சய் சிங் - சுவேத்லனா என்ற தம்பயரின் மகன் கரண் சிங். அபரிமிதமாக வளர்ச்சியடைந்து வரும் கரண்சிங், 5 வயதிலேயே 5.7 அடி உயரத்தை எட்டியுள்ளார். இது குறித்து அவருடைய தந்தை சஞ்சய் கூறுகையில் :-
"எனது மகன் கரண் சிங்கை பாடசாலையில் சேர்த்தோம். அவனைக் கண்டு ஏனைய குழந்தைகளெல்லாம் அலறியடித்து ஓடினார்கள். பின்னாளில், கரணுடன் நன்றாக பழகினார்கள். தற்போது அவனுக்கு ஏராளமான நண்பர்கள் உள்ளனர்"- என்றார்.
உயரத்தில், கரணுடைய அம்மா சுவேத்லனாவும் சளைத்தவர் அல்ல. 7.2 அடி உயரம் உள்ள அவர் 2012 வரை, இந்தியாவின் உயரமான பெண் என்ற கின்னஸ் சாதனையை தன் வசம் வைத்திருந்தார். அதன் பின்னர் இந்தச் சாதனையை மேற்கு வங்கத்தைச் சேர்ந்த, 8.2 அடி உயரம் கொண்ட சித்திகா பர்வீன். என்பவர் வசப்படுத்திக் கொண்டார். 2007இல் திருமணத்தின் போது, 6.6 அடி உயரமாக சுவேத்லனா இருந்தார். 25 வயதிலும் அவர் வளர்ந்து வருவதற்கு, அதிகமான வளர்ச்சி ஹார்மோன்களே காரணம் என்கின்றனர் மருத்துவர்கள். உயரம் மட்டுமன்றி, அம்மா சுவேத்லனாவுக்கும் மகன் கரண் சிங்குக்கும் கேட்கும் திறன் அசாதாரணமாக உள்ளது - என்றார். (வ)



பண்டாரவலையில் நடைபெற்ற ஜனநாயகக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான சரத் பொன் சேகாவின் கார் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் தாக்குதல் நடைபெற்ற இடத்தின் மாதிரித் தோற்றமும் உருவாக்கப்பட்டுள்ளது. (ற)

# இலங்கை சிங்கள தேசம் என்போருக்கே வாக்கிடுக

## பொதுபல சேனா கோரிக்கை

கொழும்பு, செப்.18
சிங்கள பௌத்தர்களின் தேசம் இலங்கை என்பதை ஏற்றுக் கொள்பவர்களுக்கே ஊவா மாகாண சபைத் தேர்தலில் மக்கள் வாக்களித்து வெற்றி பெறச்செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது பொது பல சேனா அமைப்பு.

அவ்வாறான வேட்பாளர் தமிழராக, சிங்களவராக, முஸ்லிமாக இருந்தாலும் எந்தவிதப் பிரச்சினையில்லை எனவும் அந்த அமைப்பின் தேசிய அமைப்பாளர் விதாரன் தெனியே நந்ததேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற பொது பலசேனாவின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"சட்ட விரோத வர்த்தகங்களில் ஈடுபடுவோருக்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது. உலகில் எங்கும் இல்லாத தேர்தல் கலாசாரம் இங்கு காணப்படுகின்றது. ஒருவருக்கொருவர் சேறுபூசிக்கொள்வதும் வன்முறைகளும் கொலைகளும் என கீழ்த்தரமான தேர்தல் கலாசாரமே காணப்படுகின்றது. எந்தவொரு தொழிலுக்கு இணைய வேண்டுமானால் அதற்கு கல்வித் தகைமை உட்பட வேறு தகுதிகள், குடும்ப பின்னணி தேவை. ஆனால், இங்கு அரசியல் செய்வதற்கு எந்த விதமான கல்வி அறிவோ, தகுதியோ, குடும்ப பின்னணியோ தேவை இல்லை.

கசிப்பு வியாபாரம் அல்லது போதைப்பொருள் வியாபாரம் என எந்தவிதமான சட்ட விரோத வர்த்தகம் செய்பவர்களாக இருந்தாலும் அவர்களால் இங்கு அரசியல் செய்ய முடியும். தேர்தலில் போட்டியிட முடியும். இந்தநிலை மாற வேண்டும். அதனை மக்களாலேயே மாற்ற முடியும். எனவே, ஊவா மாகாண சபைத்தேர்தலில் தகுதியான வர்களுக்கு வாக்களிக்க வேண்டும்.

இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கு சொந்தமான நாடு என்றும்- எமது கலாசாரம் வரலாறு தெரிந்தவர்கள் எவராக இருந்தாலும் அவ்வாறான வேட்பாளர்கள் தமிழராக, சிங்களவர்களாக, முஸ்லிம் ஆக இருக்கலாம். இந்த நிலைப்பாடு கொண்ட வேட்பாளர்களை இந்தத் தேர்தலில் வெற்றி பெற செய்ய வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# மொனராகலை பிரதேசத்தில் நிலநடுக்கம்

கொழும்பு, செப்.18
மொனராகலை எதிமலே பிரதேசத்தில் நேற்று அதிகாலை 5.10 அளவில் சிறு அளவிலான நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நில நடுக்கம் இரண்டு ரிச்டர் அளவுக்கும் குறைவானது என்று மொனராகலை இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. நில அதிர்வு குறித்து ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

# ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பிக்கு ஆதரவு வழங்குவதற்கு தயார்

## சரத் பொன்சே கா தெரிவிப்பு



கொழும்பு, செப்.18
ஊவா மாகாணத்தில் எதிரணியை பலப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுக்கு ஆதரவு வழங்குவதற்குத் தயார் என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"ஊவா மாகாண சபையில் ஆட்சியமைக்க எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவு வழங்கப்படும். ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. மற்றும் ஜனநாயகக் கட்சி ஆகிவற்றுக்கு இடையிலான ஒற்றுமை மூலம் அரசுக்கு எதிரான ஒரு வலுவான படையை ஏற்படுத்துவது முக்கியமானது. அரசை விரைவில் கலைக்க எதிர்க்கட்சிகள் ஒரு பொதுவான குறிக்கோளுடன் செயற்பட வேண்டும்.

நாட்டில் 95 வீதமானவர்கள் வறுமையில் பாதிக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள 5 சத வீதத்தினார் ஆச்சரியத்தை அனுபவித்து வருகின்றனர். ஆச்சரியம் யாருக்கு தேவைப்படுகிறது. அது ஒரு மாயையை தவிர வேறில்லை. ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை பின்னோக்கிச் சென்று கொண்டிருப்பதுடன் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது."- என்று தெரிவித்துள்ளார். (ற)

# பால்மா விளம்பரங்களுக்கு தற்காலிகமாக தடை விதிப்பு

கொழும்பு, செப்.18
இலங்கையில் பால்மா தொடர்பான விளம்பரங்களை ஊடகங்களில் பரப்புரை செய்ய தற்காலிக அடிப்படையில் தடை விதிக்கப்பட்டுள்ளது. சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் பாலித மபால இந்தத் தகவலை உறுதி செய்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

"மீள அறிவிக்கும் வரையில் ஊடகங்களில் பால்மா தொடர்பான விளம்பரங்களை பரப்புரை செய்யக் கூடாது. இது தொடர்பில் ஊடக நிறுவனத் தலைவர்களிடம் எழுத்து மூலம் கோரியுள்ளோம்.

பால்மா விளம்பரங்களின் போது தேவையற்ற தூண்டுதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் காரணமாக விளம்பரங்களுக்கு தடை விதிக்க தீர்மானித்தோம்.

தேவையற்ற தூண்டுதல்களில் ஈடுபடும் சகல பால்மா விளம்பரங்களையும் பட்டியல்படுத்தி ஒழுங்கு செய்யும் வரையில், பால்மா விளம்பரங்களை தற்காலிக அடிப்படையில் ஊடகங்களில் பரப்புரை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# பொருளாதார கணக்கெடுப்பு நிறைவு

கொழும்பு, செப்.18
குடிசன மற்றும் மதிப்பீட்டு திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பொருளாதார கணக்கெடுப்பின் மூன்றாம் கட்டப் பணிகள் நிறைவை எய்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, விவசாய துறைக்கான சகல பிரிவுகளினதும் தகவல்கள் சேரிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# தேர்தலில் தோல்வி அச்சமே விலை குறைப்புக்கு காரணம்

## ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்



கொழும்பு, செப்.18
தேர்தல் தொடர்பில் ஏற்பட்டுள்ள அச்சம் காரணமாகவே அரசு எரிபொருள்களின் விலைகளை குறைத்திருக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"ஊவா மாகாண சபைத் தேர்தலில் அரசு தோல்வி அடையும் நிலை ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாகவே தற்போது எரிபொருள்களின் விலைகளை குறைத்திருக்கிறது. இந்த புதிய விலைகள் எத்தனை நாள்களுக்கு் நிலைக்கும் என்பது கேள்விக் குறியே"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ரூ. 10 கோடி சட்டவிரோத சிகரட் மீட்பு

கொழும்பு, செப்.18
சட்ட விரோதமான முறையில் ஹொங்கொங்கில் இருந்து கொண்டு வரப்பட்ட 10 கோடி ரூபா பெறுமதியான 40 லட்சம் சிகரட் தொகுதி ஒன்று மீட்கப்பட்டுள்ளது. ஒருகொடவத்தை கொள்கலன் சாலையில் இருந்து இவை மீட்கப்பட்டுள்ளன. (ற)

# வடக்கு மாகாண முதலமைச்சர் ஒத்துழைப்பு வழங்குவதில்லை

## பாதுகாப்புச் செயலர் குற்றஞ்சாட்டுகின்றார்

யாழ்ப்பாணம், செப். 18
கொழும்பு அரசால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஒத்துழைப்பு வழங்குகின்றார் இல்லை என்று குற்றஞ்சாட்டியுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, கொழும்பு மாநாகர சபையை ஐ.தே.க. ஆட்சி செய்தாலும் அரசுடன் இணைந்து அபிவிருத்தி செய்வது போல் ஏனைய சபைகளும் அரசுடன் இணைந்து அபிவிருத்தி. நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

யு.என் ஹபிர்ரார் நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வு கொழும்பில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"கொழும்பு அரசால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் ஒத்துழைப்பு வழங்குகின்றார் இல்லை. இதனால் வடக்கிலுள்ள சாதாரண மக்களே பாதிக்கப்படுகின்றனர். கொழும்பு அரசுடன், வேறுபாடான அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டுள்ள மாநகரசபை அதிகாரிகள் குறிப்பாக மேயர்களே மத்திய அரசுடன் இணைந்து செயற்பட தயங்குகின்றார்கள்.

ஆனால் அதிர்ஷ்டவசமாக கொழும்பு மாநகரசபையை, மத்திய அரசின் எதிர்கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி கைப்பற்றியிருந்தாலும் நகர அபிவிருத்திக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குகின்றது.

வடக்கு மக்களில் அக்கறையிருந்தால், வட்க்கு மாகாண முதலமைச்சரும் கொழும்பு மாநாகரசபை போன்று செயற்பட வேண்டும்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)




# காதலில் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது ஆண்களே

இயந்திர மயமான இந்த உலகில் வர்த்தகம், மருத்துவம், வங்கி இன் னும் பல சேவைகள் பூகோள மயமாக்கப்பட்டு இலத்திரனியல் இயந்திர மயமாக வளர்ச்சியடைந்துள்ள நிலையில் காதல் என்பது அன்றும் இன்றும் என்றும் ஒரே மாதிரியான உணர்வே.

அதன் தன்மைகள் ஆளுக்காள் வேறுபடுமே தவிர அதில் உள்ள அன்பு என்றும் உண்மையே. அன்று அன்னம்,புறா , ஓலை மூலம் தூதுவிட்டு தத்தமது காதலை தெரிவித்து வெளிப்படுத்தி வந்த காதலர்கள் இன்று பல படிகள் மேலே சென்று பேஸ்புக், மெயில்,இன்ரநெற், டுவிட்டர், புளொக்கர் என நவீன வழிகளில் தம் காதலை வளர்த்துக் கொள்கிறார்கள். காதல் இருக்கும் வரை காதல் தோல்விகளும் இருந்து கொண்டுதான் இருக்கும். அது ஆண்களாயினும் சரி பெண்களாயினும் சரி காதல் தோல்வியினால் வேதனைப்படுகிறார்கள்.

"பெண்களின் காதல் தோல்வி பெற்றோர் அழும் வரை, ஆண்களின் காதல் தோல்வி அடுத்த பிஹரை காணும் வரை" என நம் இளைஞர்கள் காதல் தோல்விக்கு புது மொழியை உருவாக்கியிருக்கிறார்கள்.

ஆனாலும் இன்றைய காலகட்டத்தில் காதல் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது ஆண்களே. ஏனெனில் காதலிக்கும் போது கண் மண் தெரியாமல் காதலிக்கும் நமது பெண்கள் கல்யாணம் என வரும் போது யோசிக்கிறார்கள். அதாவது தாம் காதலிக்கும் காதலன் தகைமையுள்ளவனாக இருக்கிறானா என்பதை யோசிக்கின்றனர்.

அதன் பின்பே தாம் காதலிக்கும் காதலன் தமது குடும்பத்துக்கு தகுதியான வனா, படித்தவனா, தன்னை வசதியாக வைத்துக் காப்பாற்றுவானா என ஆழமாகச் சிந்திக்கத் தொடங்குகின்றனர்.

பெண்கள் சிந்திக்கத் தொடங்கினால் பிறகென்ன சொல்லவா வேண்டும்? உடனே தமது மனதை மாற்றிக் கொண்டு விடுவார்கள்.

பின்பு அந்தக்காதலனிடம் சென்று "அடுத்த ஜென்மத்திலாவது நாம் ஒன்று சேர்வோம்" என மிகச் சுலபமாகக் கூறிவிட்டு பெற்றோர் பார்க்கும் வெளிநாட்டு மாப்பிளைகளைக் கலியாணம் செய்கின்றனர். எமது இளைஞர்களோ தாடி வளர்த்துக்கொண்டும், இன்னும் சிலர் காதல் தோல்வியை ஆற்றாது தற்கொலையும் செய்யத் துணிகின்றனர்.

ஆக மொத்தத்தில் இன்றைய கால கட்டத்தில் காதல் தோல்வியை அதிகம் ஆண்களே எதிர்கொள்கின்றனர்.

*சுகி பாலா, இணுவில்.*

# தற்கொலை எல்லாவற்றுக்கும் தீர்வாக அமையுமா?


மனநிலையில் சின்னச் சின்ன தவறுகளுக்காக, இந்தச் சமூகம் எப்படி நம்மைப் பார்க்கும், இனி எப்படி வாழ முடியும் என்ற விரக்தியில் இருக்கும் போதுதான் தற்கொலைக்கான முதல் முடிவை அந்தச்சூழல் எடுக்க வைக்கிறது. அடுத்த கட்டமாக யாருமற்ற தனிமையும், தற்கொலை செய்து கொள்ள ஏதுவான சூழலும் இருந்து விடுவதால் தற்கொலைகள் எளிதில் அரங்கேறுகின்றன.

பெரும்பாலும் பெண்கள்தான் தற்கொலை முயற்சிகளில் அதிகம் ஈடுபடுகிறார்கள். ஆண்கள் தற்கொலைக்கு முயற்சித்தால், அது மரணத்தில் முடிவது நிச்சயம். ஆண்களுக்கான சூழல் அப்படி இருக்கிறது. அதுமட்டுமில்லாமல் இன்றைய உலகம், நவீன மயமாதலின் உச்சத்தில் இருப்பதால் இன்ரநெற், தொலைக்காட்சி என்று மனிதத் தொடர்புகளே இல்லாமல் எல்லாமே இயந்திரத்துக்குள் மூழ்கிவிடுவதால், மனித வாழ்வில் நடக்கும் அன்றாடச் சம்பவங்களில் வெற்றி - தோல்விகளை பக்குவப்பட்டு பார்க்கும் மனநிலை இல்லாதவர்களாகவே உள்ளனர். அதே சமயம் எதையும் மனம் விட்டுப் பேசும், குடும்ப கலந்துரையாடல் என்பதும் மிகவும் குறைந்துவிட்டது. பெற்றோர்கள் வேலை, பணம் என ஓடுகிறார்கள். அவர்கள் குழந்தைகளையும் 'படி.. படி...' என நிர்ப்பந்தித்து பெறுபேறுகள் மட்டுமே வாழ்க்கை என்று ஓட வைக்கிறார்கள். இதற்கிடையில் ஏற்படும் சறுக்கல்களையும் வீழ்ச்சிகளையும் ஏற்றுக் கொள்ள அவர்கள் மனது பக்குவப்படாததால் தற்கொலை செய்துகொள்ள வாய்ப்பு உள்ளது.

பெரும்பாலும் தற்கொலை என்பது, தனிநபர் தற்கொலைகளாகவும், குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்வதும் நடக்கிறது. அதில் தனிநபர் தற்கொலை என்பது அவரது செயல்கள், நடவடிக்கை மூலம் செய்யப்படுகிறது. இரண்டாவது சமூகம் சார்ந்தது. வட்டிக் கொடுமை, கடன் பிரச்சினை, வேலையில்லாமை இவற்றையெல்லாம் விடக் குடிப்பழக்கம் போன்றவைதான் அதிகம். தற்போது குடிப்பழக்கத்தால் ஏகப்பட்ட குடும்பங்களே அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துகொண்டமை கண்டறியப்பட்டிருக்கிறது.

இனிமேல் வாழ்ந்து என்ன செய்யப்போகிறோம் என்ற மனநிலையில்தான் தற்கொலைகள் அதிகம் அரங்கேறுகின்றன. பரம்பரை வழியாக வரும் ம்ன அழுத்தமும், தற்கொலை செய்யத் தூண்டுவதாக சொல்லப்படுகிறது.:.

எனவே குடும்பத்தில் அனைவரும் ஒருவருக்கு ஒருவர் மனம்விட்டு பேச நேரத்தை ஒதுக்க வேண்டும், தனிமையை விரட்ட நல்ல நண்பர்கள், தன்னம்பிக்கை தரும் புத்தகங்களை வாசித்தல், பிடித்த பாடல்களை கேட்டல், விளையாடுதல் அல்லது வேறு ஏதாவது பிடித்த வேலை களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறன சூழல்களை எமக்குள் ஏற்படுத்திக் கொண்டால் தற்கொலையைத் தவிர்த்துக் கொள்ள முடியும். வாழ்க்கை வாழ்வதற்கே. இதனை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.



## அம்மா



முன்னூறு தினங்கள்
முத்தாக எனைச் சுமந்து
நித்திலத்தில் நான் வளர
நித்தமும்
வியர்வை சிந்தி
பத்திரமாய்
பயிற்றுவித்து
பல்கலையும்
இணைத்தூட்டி
உன்னத நிலையடைய
உரமிட்ட உத்தமியே

*க.தாட்ஷாயினி*

## காதல்

மகரந்த
மழையில் நனைந்த
வண்டைப் போலத்
தான் என் காதலும்
மறக்க முடியாமல்
உன்னையே
நினைத்து
மயங்கிக் கிடக்கிறது
மயக்கம் தெளிந்தாலும்
காதல் போதை
தெளியவில்லை
அப்படியே தான்
உள்ளது
என் காதல்
போதைக்கு மருந்து
உன் நினைவுகள்
மட்டும் தான்....



## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

காதலில் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது
ஆண்களா? பெண்களா?

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.





போற்றுதலுக்குரிய அவதூத் பாபா

ஷிவானந்த் ஜி

சில பதின் வருடங்களுக்கு முன்னர் பாபாஜி நம் பூமிக் கிரகத்துக்கு வந்து சேர்ந்தார். மிக இளம் வயதிலேயே அவர் ஆன்மிகத்தில் பற்றுடையவராக இருந்தார். அவருக்கு 8 வயதாக இருக்கும்போது ஒரு யோகி அவர் முன் தோன்றி ஒரு மந்திரத்தால் அவரை உய்வித்துச் சென்றார். அவர் அளித்துச் சென்ற மந்திரத்தால் பல ஆன்மிக அனுபவங்களை அடைந்த பாபாஜி அந்த யோகியையே தனது குருவாக வரித்துக்கொண்டார். அவரைத் தேடித் தனது ஆன்மிகப் பயணத்தைத் தொடங்கிய பாபாஜி இமாலயம் உட்படப் பல இடங்களில் தேடி அலைந்தும் அவரைக் கண்டடைய முடியவில்லை. அன்றுதொட்டு அவர் தன் நாளின் பெரும் பகுதியைத் தியானத்தில் செலவழித்தார். மேற்கொண்டு தன் பயணத்தில் பலப் பல சித்தர்களையும் யோகிகளையும் சந்தித்த பாபாஜி அவர்களிடம் இருந்து தன் ஆன்மிக லட்சியத்துக்கான அருளையும் ஆசிகளையும் பெறும் பாக்கியத்தைப் பெற்றார்.




கொழும்பு வருகிறார்

செப்ரெம்பர் 19 - 21

3 நாள்கள் ஆன்மிக யோகா கருத்தரங்கு
மாணிக்கவாசகர் கோயில் கலையரங்கம்

அன்பே சிவம்! அறிவியலும் சிவம்!



கனடாவின் பல பகுதிகளில் வடதுருவ வெளிச்சங்கள் வானில் வண்ணங்களாய் நிறைந்திருந்தது. அழகாய் காட்சியளித்துள்ளது.
பூமியன் வளிமண்டலத்தில் இரண்டு சூரிய எரிப்புகளினால் ஏற்பட்ட துகள்களின் விளைவாக, கனடாவில் கடந்த வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை பல பகுதிகளில் வடதுருவ வெளிச்சங்கள் வந்துள்ளன.
அட்லான்டிக் கனடாவில் நியூ பிறவுன்ஸ்விக் மற்றும் நியூ பவுன்லாந்து பிரதேசங்களுக்கு மேலாக ஒரு தெளிந்த பச்சை மற்றும் ஊதா நிற கதிர்கள் வானில் தோன்றியுள்ளன. இதை பார்த்த பலர் ஆச்சரியத்தில் ஆழ்ந்தது மட்டுமன்றி இந்த அழகிய காட்சிகளை புகைப் படம் எடுத்துள்ளனர்.

# வர்ணங்களால் மிளிர்ந்த வான்பரப்பு...



சீப்புக்கும் வாழைப்பழத் தோலுக்கும் ஓர் ஒற்றுமை. சீப்புத் தலை வாரும்;, வாழைப்பழத் தோல் காலை வாரும்.

## நச்சின்னு கடி



நான் ஒரு தடவை இருபது அடி உயரமுள்ள ஏணியிலிருந்து கீழே விழுந்திருக்கிறேன். ஐயையோ! அடிபட்டிருக்குமே. அப்படியெல்லாம் ஒன்று மில்லையே... அப்போது நான் ஏணியின் முதல் படியில்தானே இருந்தேன்.




# நடு இரவு

இலத்திரனியல் மயப்பட்ட சினிமா வந்த பின்னர், சினிமா எடுப்பது மிகவும் எளிமையாகிவிட்டது. எதையாவது புதுமையாக செய்து மக்களை கவர வேண்டும் என்று நினைக்கிறார்கள். புதுகை மாரிசா என்பவர் 12 மணி நேரத்தில் ஒரு படத்தை எடுத்து சாதனை படைக்க நினைக்கிறார். படத்தின் பெயர் நடு இரவு. புதுமுகங்கள் நடிக்கிறார்கள், உலக நாதன் ஒளிப்பதிவு செய்கிறார், ரமேஷ் கிருஷ்ணா இசை அமைக்கிறார். இந்த படத்தின் பூஜை ஏ.வி.எம். அரங்கில் நடந்தது. தயாரிப்பாளர் சங்கத் தலைவர் கேயார் தொடங்கி வைத்தார். தனது புதிய முயற்சி பற்றி இயக்குநர் புதுகை மாரிசா கூறியதாவது:- பல வருடங்காக திட்டமிட்டு இந்த முயற்சியை செய்கிறேன். நாளை இந்தப் படப்பிடிப்பு நடக்கிறது. மாலை 6 மணிக்கு படப்பிடிப்பு தொடங்கி மறுநாள் காலை 6 மணிக்குள் அதாவது 12 மணி நேரத்துக்குள் படப்பிடிப்பை முடிக்கிறோம். இதற்கான ஏற்பாடுகள் சரியாக இருக்கிறது. மோனிகா என்ற சிறுமி முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். நடிப்பவர்கள் அனைவருக்குமே ஒத்திகையும், பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு திகில் கதை என்பதால் இரவிலேயே படத்தை எடுத்து முடித்து விடுகிறோம்- என்றார்.



# ஆஸி யில் காணாமற் போனார் ஸ்பைடர்மான்



ஆஸ்திரேலியாவின் நியூ சவூத் வேல்ஸ் மாநிலத்தில் காணாமற்போன மூன்று வயதுச் சிறுவனைத் தேடும் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த சிறுவன் ஸ்பைடர்மான் உடையணிந்திருந்த போதே காணாமற் போயுள்ளான். சூவில்லியம் டைரெல் என்ற சிறுவன் கடந்த வார இறுதியில் காணாமற் போயிருந்தான். உறவினர் வீடொன்றின் முன்புறத்தில் இருந்தே சிறுவன் காணாமற் போயுள்ளான். இந்தச் சிறுவனைத் தாம் மூன்று நாள்களாக தீவிரமான முறையில் தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
மூன்று நாள்கள் கடந்துள்ள நிலையில், சிறுபிள்ளை ஒருவரை உயிருடன் மீட்பதற்குரிய வாய்ப்பு குறைவாகக் காணப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். வில்லியம் உணவோ, தண்ணீரோ இல்லாமல் வெளியேறிச் சென்றிருக்கக்கூடும் என்பதால், அவனைக் கண்டுபிடிப்பது முக்கியமானதென அதிகாரிகள் நம்புகிறார்கள். இந்தச் சிறுவன் காணாமற்போன சமயம், ஸ்பைடர்மன் ஆடையை அணிந்திருந்தாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.




## ஒவ்வொரு மாணவனும் செய்ய வேண்டியது எதனை?

ஒவ்வொரு மாணவனும் சித்த சுத்தியை - தூய சிந்தனைக்கு வழிவகுக்கக் கூடிய சத்கர்மாஸ் - நல்ல கருமங்களைச் செய்ய முற்பட வேண்டும். தூய சிந்தை எங்கு இருக்கிறதோ அங்கு ஞான சித்தி - ஞானோதயம் இருக்கும். இவை அனைத்தும் எமக்குள்ளேயே இருக்கிறது. புறத்தே எங்கும் தேடி அலைய வேண்டியதில்லை.




சுவர் மணிக்கூட்டை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வோம். அதன் நொடிக் கம்பியை சத்கர்மங்களுக்கு ஒப்பிடலாம். அதாவது நாம் செய்யும் நற் காரியங்கள் நிமிடம் காட்டும் கம்பி, சித்த சுத்தியை - சிந்தையின் தூய்மையைக் குறிக்கும். சித்த சுத்தி உபாசன நிலையைக் குறிக்கின்றது. நாம் கடவுளை நேசிப்பதையும் பலகாலங்களுக்குப் பலவகையான வழிபாடாற்றுவதை யும் உபாசன நிலை குறிக்கும் . இது ஆத்ம விசுவாச - தன்னம்பிக்கைக்கு வழிவகுக்கும். மணித்தியாலக் கம்பி தன்னம்பிக்கையைக் குறித்து நிற்கும்.
வினாடி காட்டியினதும், நிமிடக் காட்டி யினதும் பார்க்கக் கூடிய வேகமான அசைவுகள், கண்ணுக்குப் புலனாகாத மந்தகதியில் செல்லும் மணித்தியாலக் கம்பியின் அசைவுக்குக் காரணமாக உள்ளது.
அதுபோலவே, எமது நல்ல செயல்கள், இறைவனை நேசித்தல் வணங்குதல் ஆகியன ஆத்ம விசுவாசத்துக்கு அல்லது தன்னம்பிக்கைக்கு வழி வகுக்கும்.

# பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் மன்னார் நீதிமன்றத்துக்கு பயணம்

மன்னார், செப் 18

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மன்னாருக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டு மன்னார் மாவட்ட நீதிமன்றத்துக்கு வருகை தந்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை விசேட உலங்கு வானூர்தி மூலம் மன்னார் தள்ளாடி படைத் தளத்தை வந்தடைந்த அவர் முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்ட நீதிமன்றத்துக்கு வருகைத் தந்தார்.

இதன்போது மன்னார் நுழைவாயில் பாலத்தில் வைத்து மலர் மாலை அணிவித்து நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார். மன்னார் நீதிமன்ற வளாகத்தினுள் இடம்பெற்ற பொலிஸ் அணி வகுப்பு மரியாதையைப் பிரதம நீதியரசர் ஏற்றுக் கொண்டார். பின்னர் அவரது வருகையின் ஞாபகார்த்தமாக மரக்கன்று ஒன்று நடப்பட்டது. மன்னார் நீதிவான் நீதிமன்ற கட்டடத் தொகுதியில் மன்னார் மேல் நீதிமன்ற ஆணையாளர் மகிந்த பினிதினிய தலைமையில் விசேட கூட்டம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம், மன்னார் மேல் நீதிமன்ற ஆணையாளர் மகிந்த பினிதினிய உட்பட வவுனியா மாவட்ட நீதிபதிகள், மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள், மன்னார் நகர சபைத் தலைவர், பொலிஸ்.இராணுவம், கடற்படை ஆகியவற்றின் உயரதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். இறுதியில் மன்னார் நீதிமன்ற சட்டத்தரணிகளினால் பிரதம நீதியரசருக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 15ஆம் திகதி பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் மடுத் திருவிழாவுக்கு சென்றிருந்தபோது நீதியரசரை மன்னாருக்கு வருகை தரும்படி மன்னார் நீதிவான் ஆனந்திகனகரட்ணம் அழைப்பு விடுத்திருந்த நிலையிலேயே அவர் மன்னாருக்குப் பயணம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த)



மன்னார் நுழைவாயிலில் பிரதம நீதியரசருக்கு வரவேற்பு

# சூழல் மாசடையாதவாறு கல், மண் அகழ்கின்றோம்

## புதுக்குடியிருப்பில் புனரமைப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனம் தெரிவிப்பு



ஏக்கநாயக்கா

முல்லைத்தீவு, செப்.18

மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே வீதிப் புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டு வருகிறோம். சூழல் மாசடையாவண்ணம் மண் மற்றும் கல் அகழ்வுகளை மேற்கொண்டு வருகின்றோம் என ஒட்டுசுட்டான் மற்றும் புதுக்குடியிருப்பில் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ள 'மாகா' தனியார் நிறுவனப் பொறுப்பாளர் ஏக்கநாயக்கா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கை யில்,

மண் அகழ்வின்போது சூழல் மாசடைகிறது. கல் அகழ்வின் போது கிணறுகளில் நீர்வற்றி மக்கள் நீருக்காக அலைகின்றனர். காடுகளை அழிக்கின்றனர் எனப் பொலிஸார் கூறுகின்றனர். ஆனால் நாம் அவ்வாறு செயற்படவில்லை. மண் அகழும்போது அவதானமாக உள்ளோம். கல் அகழ்வில் பெரிய குழிகளை ஏற்படுத்தவில்லை. நாம் மக்களுக்காகவே வீதிகளை நல்ல முறையில் புனரமைக்கின்றோம். மக்களின் நலனில் எமக்கு அக்கறை உண்டு. மக்களுக்குத் தேவை எனக் கருதப்படும் எந்த இடத்திலும் மண் அகழ்வதில்லை. வாழ்விடங்களுக்கு அப்பால் தான் மண்ணை அகழ்கிறோம்- என்றார். (த-500)

# 18 குடும்பங்களின் வீடுகள் மினி சூறாவளியால் பாதிப்பு

## ஜீவநகர் அம்மன் ஆலயமும் சேதம்





மினி சூறாவளியினால் பாதிக்கப்பட்ட வீடுகள்

முல்லைத்தீவு, செப்.18

கடந்த 12 ஆம் திகதி ஏற்பட்ட இடிமின்னல், மழையுடன் கூடிய மினி சூறாவளியினால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஜீவநகர், இடது கரை, 3ஆம் கண்டம் ஆகிய கிராமங்களிலும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் கெருடமடு, மன்னாகண்டல், வசந்தபுரம் ஆகிய கிராமங்களிலும் 18 குடும்பங்களின் வீடுகள் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளன. ஜீவநகர் கிராமத்தின் அம்மன் ஆலயமும் பாதிப்படைந்துள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தற்போது பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனை அறிந்த முல்லைத்தீவு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.சிவமோகன் சம்பவ இடத்துக்கு விரைந்து பார்வையிட்டு அவர்களுக்கான காலை உணவுகளை வழங்க ஏற்பாடு செய்துள்ளார்.

மேலும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலரினால் கூரை விரிப்புகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் கூட்டுறவுக் கடை ஒன்றும் மினி சூறாவளியால் பலத்த சேதமடைந்துள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மேலும் உதவிகள் வழங்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-500)

# வெளிநாடு செல்லும் யுவதிகளுக்கு ஓமந்தையில் பயிற்சி நிலையம்

வவுனியா, செப் 18

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் செல்லும் பெண்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகப் பயிற்சி மையம் ஒன்று ஓமந்தைப் பகுதியில் அமைக்கப்படவுள்ளதாக வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டுக்குச் செல்லும் பெண்கள் எதிர் நோக்கும் தொழில் ரீதியிலான பிரச்சினையை எதிர்கொள்ளத் தக்க வகையில் பயிற்சி மையம் ஒன்று ஓமந்தையில் அமைக்கப்படுவதன்மூலம் பலருக்கு அங்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

அத்துடன் அதனையண்டிய பகுதியில் பாதிப்படைந்த பெண்கள், சிறுவர்களுக்கான பாதுகாப்பு நிலையமும் அரசால் அமைக்கப்படவுள்ளது .

வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்களுக்குப் பயிற்சி வழங்கும் இடம் அமையவுள்ள பகுதியில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக வவுனியா பிரதேச சபையால் வேலி அமைக்கப்பட்டமை தொடர்பான சிக்கல் நிலை உள்ளது. இது தொடர்பாக நாம் கவனத்தில் எடுத்துள்ளோம்-என்றார். (த-402)

# 100 ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஒழுங்கை மூடப்பட்டமைக்கு எதிர்ப்பு

> **ஒருவர் தமது காணியூடாகப் புதிய ஒழுங்கை ஒன்றை உருவாக்கியுள்ளதால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.**

முல்லைத்தீவு, செப்.18

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஒட்டுசுட்டான்-புதுக்குடியிருப்பு வீதியிலிருந்து உட்பக்கமாக செல்லும் 100 ஆண்டுகளுக்கு மேல் பிரதேச சபையின் பதிவில் உள்ள பிரதான ஒழுங்கை ஒன்று மூடப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலாக ஒருவர் தமது காணியூடாகப் புதிய ஒழுங்கை ஒன்றை உருவாக்கியுள்ளதால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.

உயர்மட்டத்தில் உள்ளவர்களின் ஆதரவுடனேயே இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். இது குறித்து உடனடியாக ஆராய்ந்து ஏற்கனவே பயன்பாட்டில் இருந்த ஒழுங்கையை மக்கள் பாவனைக்கு விடவேண்டும் என ஒட்டுசுட்டான் தவிப் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாவனையில் இருந்து வந்த ஒழுங்கையை விடுத்து இன்னொருவரின் காணி ஊடாக உயர்மட்டத்தில் உள்ளவர்களின் ஆதரவுடன் போடப்பட்ட புதிய ஒழுங்கை முற்றுமுழுதாகப் பொருத்தமற்றதாகும். இதனால் முரண்பாடுகள் ஏற்படுவதுடன் மின் இணைப்பைக் கூட ஏற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே உடனடியாக இதற்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனக் கோரியுள்ளனர் அப்பகுதி மக்கள். (த-500)

# வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிதண்ணீர்

வவுனியாவில் தொடர்ந்தும் வறட்சி நிலை நீடித்து வருவதால் 17 கிராம அலுவர் பிரிவுகளுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்துள்ளார். 42 கிராம அலுவலர் பிரிவுகளில் தற் போது 17 பிரிவுகள் வறட்சி காரணமாக மோசமாகப் பாதிப்படைந்துள்ளன. வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களில் 43 தண்ணீர் தாங்கிகள் வைக்கப்பட்டு அவற்றுக்குபவுஸர்கள்மூலம்குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. எனவும் தெரிவித்தார். (த)



## கோப்பாய் கோமானின் நினைவு நீர்வேலியில்

கோப்பாய் கோமான் அமரர் வன்னியசிங்கத்தின் நினைவு தின நிகழ்வு நேற்றுப் புதன் கிழமை முற்பகல் 9.15 மணி யளவில் நீர்வேலி வாழைக் குலைச் சங்கக் கட்டடத்தில் நினைவுக் குழுத் தலைவர் எஸ். சந்திரன் தலைமையில் நடை பெற்றது. நினைவுச் சுடரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் மற்றும் மாகாண சபைகளின் உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தவிசா ளர்கள் ஏற்றி வைத்தனர். இதனைத் தொடர்ந்து திருவுருவச் சிலைக்கு மாவை சேனாதிராசா மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினார். (கு-86-11)

## சத்தியாக்கிரகத்தை குழப்பியதன் பின்னணியில் பண்டாரநாயக்கா

### வன்னியசிங்கம் நினைவு நிகழ்வில் மாவை

வலி.வடக்கு, செப் 18

காலிமுகத்திடலில் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தைக் குழப்பி அதில் கலந்து கொண்டவர்களைப் பொல்லுகள், கற்கள் கொண்டு தாக்கிக் காயப்படுத்தியமைக்குப் பின்னணியாக இருந்தவர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா என்றே கூறப்படுகின்றது என மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

அமரர் வன்னியசிங்கத்தின் 50 ஆவது நினைவு தின நிகழ்வுகள் நேற்றுப் புதன் கிழமை நீர்வேலி வாழைக்குலைச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய மாவை மேலும் தெரிவித்ததாவது:-

தந்தை செல்வாவுக்குத் தளபதிகளாகவும் ஆலோசகர்களாகவும் இருந்தவர்கள் பலர். அதில் வன்னியசிங்கம், நவரத்தினம் மற்றும் இளையவர்களில் அமிர்தலிங்கம் எனப் பலர் இருந்தார்கள். ஆனால் இவர்களில் முதன்மையானவராக வன்னியசிங்கம் இருந்தார். 1958 ஆம் ஆண்டு காலிமுகத்திடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தந்தையுடன் கைகோர்த்து ஈடுபட்டவர்.

சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்கள் குண்டர்களால் தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டார்கள். இவர்கள் தாக்கப்பட்டுக் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் நாடாளுமன்றம் சென்றவேளை அங்கிருந்த அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டார், உங்களுக்குச் சிறைத் தண்டனை வழங்கவேண்டும் என்று.

அதற்கு வன்னியசிங்கம், நீங்களும் ஒரு சட்டத்தரணி. நானும் ஒரு சட்டத்தரணி. ஆனால் நீங்கள் நீண்ட காலம் நீதிமன்றம் செல்லாமையால் சட்டத்தை மறந்து விட்டீர்கள். நான் இன்னமும் சட்டத்தை மறக்கவில்லை. எனக்கும் சட்டம் எல்லாம் தெரியும் என்று கூறி அவரைத் தொடர்ந்து பேசவிடாது தடுத்துவிட்டார்- என்றார்.

(கு-86-11)

## நாவற்குழிச் சந்தியில் நாய்களால் விபத்து

தென்மராட்சி, செப் 18

நாவற்குழிச் சந்தியில் இரவு வேளைகளில் நடைபெறும் மீன் சந்தையால் காலையில் மோட்டார் சைக்கிள்களில் ஏ-9 வீதியில் பயணிப்போர் அவ்விடத்தில் காணப்படும் நாய்களால் விபத்துக்குள்ளாகும் நிலை அடிக்கடி இடம்பெற்று வருகிறது.

கடலேரியில் வீச்சு வலை மூலம் பிடிக்கப்படும் மீன்கள் நாவற்குழிச் சந்திக்கு அருகில் விற்பனை செய்யப்படுகின்றது. வெட்டி விற்கப்படும் மீன்களின் கழிவுகளை மீன் வியாபாரிகள் அந்த இடத்திலேயே விட்டுச் செல்வதால் காலையில் நாய்கள் அவ்விடத்தில் கூடுவதால் வீதியில் செல்லும் மோட்டார் சைக்கிள்களுடன் மோதுண்டு விபத்து ஏற்பட்டு அதில் பயணிப்போர் காயமடைகின்றனர்.

இதுவரை இந்த இடத்தில் விபத்துக்குள்ளாகி பலர் காய



மடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றும் விபத்துக்குள்ளாகி காயமடைந்த அரச பணியாளரொருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

இரவு வேளையில் நடைபெறும் மீன் சந்தையை சிறிது தூரம் பின்னகர்த்தி வியாபாரத்தை மேற்கொள்ள உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது. (கு-9)

# முன்னெப்போதுமே இல்லாதவாறு வறட்சியால் தவிக்கிறது குடாநாடு


## 270 கிராம சேவகர் பிரிவுகளில் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 18

வறட்சி காரணமாக யாழ். மாவட்டத்தில் 270 கிராம சேவையாளர் பிரிவுகள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளதாக யாழ். மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வறட்சியின் பாதிப்புக்கள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு வறட்சி வாட்டி வதைக்கின்றது. இதனால் குடாநாட்டின் பல்வேறு



பிரதேசங்களிலும் மக்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். ஒரு மாதத்துக்கு முன்னதாக யாழ். மாவட்டத்தில் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளே வறட்சியின் பாதிப்பை எதிர்நோக்கியிருந்தன.

தற்போது 14 பிரதேச செயலாளர் பிரிவுகள் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன. 270 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 33 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. வறட்சியினால் பாதிக்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்துச் செல்கின்றன. குடாநாட்டில் கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் மூன்று தடவைகள் அதிகமான மழை வீழ்ச்சி பதிவானபோதும் வறட்சியைத் தணிக்கவில்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக உணவுத் திட்டத்தின்மூலம் உலர் உணவுப் பொதி வழங்கப்படவுள்ளன. 10 ஆயிரத்து 700 குடும்பங்களுக்கு யாழ். மாவட்டத்தில் உலர் உணவு முதல் கட்டமாக வழங்கப்படவுள்ளது.

அத்துடன் வறட்சியால் பாதிக்கப்பட்ட சகல பிரதேசங்களுக்கும் பவுசர் மூலமான குடிதண்ணீர் விநியோக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் குளங்கள் யாவும் தூர் வாரும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (கு-5)

## கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க மாநாடு நீண்ட காலத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், செப்.18

நீண்ட காலத்தின் பின்னர் யாழ். குடாநாட்டில் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் மாநாடு ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் கூட்டுறவு ஊழியர்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை உரிய தரப்பினருக்கு எடுத்துக்கூறும் வகையில் இந்த மாநாட்டை விரைவில் நடத்துவதற்குத் திட்டமிடீப்பட்டுள்ளது.

**யாழ். மாவட்டத்தில் கூட்டுறவு ஊழியர்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை உரிய தரப்பினருக்கு எடுத்துக்கூறும் வகையில் இந்த மாநாட்டை விரைவில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.**

இது குறித்து கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் தலைவர் எஸ். சிவகுமார் தெரிவிக்கையில்;

இந்த மாநாட்டை விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநாட்டுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர், பாரம்பரிய சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், அரச அதிபர், கூட்டுறவு ஆணையாளர்கள், கூட்டுறவு அதிகாரிகள் மற்றும் கூட்டுறவாளர்கள் போன்றோரை அழைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறிப்பாகக் குடாநாட்டின் கூட்டுறவுப் பணியாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட கோரிக்கைகள் இந்த மாநாட்டில் முன்வைக்கப்படவுள்ளன.

வடக்கில் கூட்டுறவு ஊழியர்களுக்கான தொழிற்சங்கங்கள் கடந்த போர்க் காலச் சூழ்நிலைக்குப் பின்னர் தற்போது மீண்டும் புத்துயிர் பெற்று வருகின்றன.

தற்போதைய சூழ்நிலையில் இந்தத் தொழிற்சங்க மாநாட்டை நடத்திக் கூட்டுறவு பணியார்களுக்குத் தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்காக தொழிற்சங்கத்தினர், வடக்கு மாகாண முதலமைச்சர், பாரம் பரிய சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர், கூட்டுறவுத் துறையைச் சார்ந்தோரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்-என்றார். (கு-17)

## உடுவிலில் 50 பயனாளிகளுக்கு பனம்பொருள் கைப்பணி பயிற்சி

யாழ்ப்பாணம், செப்.18

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் 50 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான இலவச பனம்பொருள் கைப்பணிப் பயிற்சி ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரெட்ணம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி பயிற்சிக்கு இந்தப் பிரதேசத்தில் நான்கு கிராம சேவகர் பிரிவில் இருந்து 50 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். இந்தப் பயனாளிகளில் கூடுதலானோர் கணவனை இழந்தும் மற்றும் வாழ்வாதாரம் அற்ற நிலையிலும் உள்ளனர். இவர்களுக்கே மேற்படி பயிற்சி மூன்று மாதக் காலத்துக்கு வழங்கப்படும்.

பாரம்பரிய சிறுகைத்தொழில்



அபிவிருத்தி அமைச்சு இந்தப் பயிற்சி நெறிக்கென ஒன்பது லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த 3 மாதப் பயிற்சியை பூர்த்தி செய்யும் பயனாளிகளுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த உபகரணங்கள் வழங்கப்படும்-என்றார்.

மேற்படி பயிற்சிநெறி ஆரம்ப நிகழ்வில் பனை அபிவிருத்தி சபையின் முகாமையாளர் (விரிவாக்கம்) கே. கோபாலகிருஷ்ணன், சபையின் அகில இலங்கைசிறுசுவடுகள் அமைப்பின் தலைவி திருமதி பவானி தங்கத்துரை ஆகியோரும் கலந்து கொண்டனர். (கு-17)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## புலிகளை ஒழித்ததன் பயனை அனுபவிக்க ஆரம்பித்துள்ளனர்

சீன அரச தலைவருடைய 24 மணி நேர இலங்கைப் பயணத்தின்போது அவருக்கு கொழும்பு வரலாறு காணாத மிகப்பெரும் வரவேற்பை வழங்கியிருக்கிறது. தெற்காசிய மற்றும் உலக அரசியல் களத்தில் இது மிக உன்னிப்பாக அவதானிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு நகர்வு என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இந்தியா செல்வதற்கு முன்பாக சீன அரச தலைவர் ஜீ ஜின் பிங் கொழும்பில் தரையிறங்கியிருந்தார். ஆனாலும் இந்தியாவிடம் இருந்து கிடைக்கும் அழுத்தங்களைச் சமாளிக்கும் வகையிலேயே கொழும்பு இராஜதந்திரத்துடன் சீனாவைக் கையாண்டு வருகிறது என்று அரசியல் அவதானிகள் நீண்டகாலமாகவே கூறிவருகிறார்கள்.

அதற்கேற்றாற்போல் இலங்கையின் உள் விவகாரங்களில் எந்தக் காரணங்களை முன்னிட்டும் எந்தவொரு நாடாவது எந்தவொரு தலையீட்டைச் செய்தாலும் அதனைச் சீனா உறுதியாக எதிர்க்கும் என்று சீன அரச தலைவர் உறுதியாகச் சொல்லியிருக்கிறார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படியும் அதற்கும் அப்பால் சென்று தமிழர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் படியும் இந்தியாவும் அதன் வழியில் மேற்கு நாடுகளும் கொழும்பு அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்து வரும் பின்னணியில் சீன அரச தலைவரின் கூற்று ஆணித்தரமாகக் கொழும்பில் வெளியிடப்பட்டிருக்கிறது.

சர்வதேச வெளியில் கொழும்பு எதிர்கொண்டுவரும் கடும் அரசியல் அழுத்தங்களின் மத்தியில் சீன அரச தலைவரின் இந்த வெளிப்படையான நிபந்தனையற்ற ஆதரவு அதற்கு சற்று ஆறுதலைத் தரும் என்பது நிச்சயம். இதனைக் கொழும்பு இலகுவில் அடைந்துவிடவில்லை. தனது 9 வருட ஆட்சிக் காலத்தில் கொழும்பு அரச தலைவர் 7 தடவைகள் சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டு இருக்கிறார். பொருளாதாரத்தையும் பாதுகாப்பையும் கட்டுப்படுத்தும் இரு சகோதரர்களும் மேலும் பல தடவைகள் பெய்ஜிங்கிற்குப் பறந்திருக்கிறார்கள். அவற்றின் பயனாகத்தான் 28 ஆண்டுகள் கழித்து - 1986ஆம் ஆண்டின் பின்னர் - சீன அரச தலைவர் கொழும்புக்கு நேரடியாக வருகை தந்து தனது உறுதியான ஆதரவை வெளிப்படுத்திவிட்டுப் போயிருக்கிறார்.

போர் தொடர்ந்து கொண்டிருந்த காரணத்தால் ஆயுதக் கொள்வனவுக்காக கொழும்பு சீனாவுடன் நெருங்கிச் செயற்படுகிறது எனக் கண்டு. அதிலிருந்து கொழும்பைத் திசை திருப்பவே புலிகளுக்கு எதிரான போரை இந்தியாவும் மேற்கு நாடுகளும் ஆதரித்தன என்று ஒரு வாதம் அரசியல் அவதானிகளிடையே முன்வைக்கப்படுவதுண்டு. அது உண்மையாயின் புதுடில்லி மற்றும் மேற்கு நாடுகளின் அத்தகைய இராஜதந்திரம் கொழும்பிடம் தோற்றுப்போய்விட்டது என்றே கூறவேண்டும்.

ஏனெனில் போர் முடிந்த பின்னரே சீன - கொழும்பு பொருளாதார உறவு மேலும் விரிவாகிப் பலப்பட்டிருக்கிறது. கொழும்பின் இரண்டாவது வர்த்தகப் பங்காளியாக இருந்த அமெரிக்காவைப் பின்தள்ளிவிட்டு அந்த இடத்தை அண்மையில் சீனா பிடித்துக் கொண்டுள்ளது. முதலிடத்தில் உள்ள இந்தியாவைப் பின்தள்ளுவதற்கும் நீண்ட காலம் செல்லாது என்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் இலங்கையில் மிக அதிகமாக முதலிட்ட நாடுகள் பட்டியலில் முதலிடத்தில் இருந்த இந்தியாவைச் சீனா ஏற்கனவே பின்தள்ளிவிட்டது.

மொத்தத்தில் கொழும்பின் ஆதரவுடன் சீனா மிக உறுதியாக இலங்கையில் தனது கால்களை ஊன்றிவிட்டது. இதிலிருந்து கொழும்பைப் பின்வாங்கச் செய்வதற்கு இந்தியாவும் மேற்குலக நாடுகளும் இதுவரையில் கடைப்பிடித்து வந்த மென்போக்கு அணுகுமுறை எதிர்பார்த்த பயனை அளிப்பதற்குப் பதில் மேலும் மேலும் நெருக்கத்தையே கொழும்புக்கும் சீனாவுக்கும் இடையே ஏற்படுத்தியுள்ளது என்பதை சீன அரச தலைவரின் பயணம் கோடி காட்டுகிறது. இதற்கான முழுமுதற் காரணம் கொழும்புக்கு எதிராக இலங்கையில் இருந்திருக்கக்கூடிய தமக்கான நட்பு சக்தியை இந்தியாவும் மேற்கு நாடுகளும் சேர்ந்து அழித்தொழித்தமைதான். விடுதலைப் புலிகளை அழித்தொழித்ததன் பயனை இப்போது அவை அனுபவிக்க ஆரம்பித்துள்ளன.

# தேர்தல்களை எதிர்கொள்ளப் போகும் 2015 புத்தாண்டு

■ சேரலாதன்



அடுத்த ஆண்டு இலங்கையில் தேர்தல்கள் ஆண்டாக அமையப் போகின்றது. நாட்டின் முக்கியமான தேர்தல்களான ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளு மன்றத் தேர்தல் என்பன 2015 ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ளமையே இதற்கான காரணமாகும்.

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் தேர்தலில் போட்டியிட முடியுமா என்பது தொடர்பான வாதப்பிரதி வாதங்கள் இப்போதே ஆரம்பித்து விட்டன.

கடந்த காலங்களின்போது மஹிந்தரின் நெருங்கிய சகாவாகச் செயற்பட்டு அவரது அரசியல் வாழ்வின் உயர்வுக்கு வழி திறந்துவிட்ட முன்னாள் பிரதம நீதியரசரான சரத் என். சில்வா மூன்றாவது தடவையாகவும், மஹிந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாதென அடித்துக் கூறுகின்றார். மேலும் தற்போதைய ஜனாதிபதி மூன்றாவது தடவையும் போட்டியிடுவதற்கு முயற்சி செய்தால் தாம் அதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடப் போவ தாகவும், வழக்கில் தாமே முன்னிலையாகி வாதாடப் போவதாகவும் அவர் தெரிவித்தமை இலங்கை அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தாமல் இல்லை. சரத் என். சில்வா வழங்கிய சில முக்கியமான தீர்ப்புக்கள் இந்த நாட்டின் வரலாற்றையே புரட்டிப் போட்டதை எவரும் இலகுவில் மறந்து விட முடியாது. குறிப்பாக மஹிந்தருக்கு எதிரான வழக்கில் அவருக்குச் சாதகமான தீர்ப்பை வழங்கியமை, வடக்குக்கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியாகப் பிரித்து தீர்ப்பளித்தமை, சுனாமியின் பின்னரான கட்டமைப்பில் இருந்து விடுதலைப் புலிகளை ஓரம் கட்டியமை, சம்பூர் மக்கள் தொடர்ந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு ஆகியவற்றைக் குறிப்பிட முடியும். சொல்லி வைத்ததைப் போன்று அவர் தீர்ப்புக்களை வழங்கியதால் உயர் நீதிமன்றம் மீதான நம்பிக்கை சிதைந்தமை வேறு விடயம். ஆனால் தாம் மறு பிறவி எடுத்தவர் போன்று சரத் என். சில்வா நடந்து கொள்வது தான் வேடிக்கையாக உள்ளது. நீதித்துறையில் இவர் போன்றவர்களின் கூற்றுக்களை மக்கள் இன்னமும் நம்புவார்களாயின் அதைவிடப் பெரிய தவறொன்றும் இருக்க முடியாது.

இதேவேளை தாம் போட்டியிடுவது தொடர்பாக நீதிமன்றத்தை ஒருபோதுமே நாடப் போவதில்லையென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். தற்போதைய நீதித்துறைக் கட்டமைப்பைப் பொறுத்தவரையில் நீதிமன்றங்களால் பாதிப்பு



எதுவும் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுவிடப் போவதில்லை. ஆனாலும் நேரத்தை ஏன் வீணாக்க வேண்டுமென அவர் நினைத்திருக்கலாம். மேலும், அவரது ஆதரவாளர்களும் ஜனாதிபதி போட்டியிடுவது தொடர்பாகக் குழம்பியதாகத் தெரியவில்லை.

வழக்கம் போல எதிர்க் கட்சிகள் குழம்பிய நிலையில் உள்ளதைக் காண முடிகின்றது. பொது வேட்பாளரா அல்லது தனித் தனியான வேட்பாளரா என்பது கூட அங்கு இதுவரையில் முடிவு செய்யப் படவில்லை. எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் களம் இறங்க விரும்புவதாகவும் தெரிய வருகின்றது. அவ்வாறெனில் பொது வேட்பாளர் என்ற பேச்சுக்கே இடமிருக்காது. தற்போதைய ஜனாதிபதியைத் தோற்கடிக்க வேண்டுமானால் மக்களின் முழு நம்பிக்கையைப் பெற்றதொரு பொது வேட்பாளர் களத்தில் இறங்குவதே உசிதமானதாகும். ஆனால் அதற்கான அறிகுறிகள் எதுவுமே தெரிவதாக இல்லை.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளில் சிறுபான்மை இனத்தவர்களின் வாக்குகளுக்கும் ஆதிக்கம் செலுத்த முடியுமென்பதை மறுக்க முடியாது. இந்த நாட்டைப் பொறுத்தவரையில் சுமார் 25 வீதத்துக்கும் மேலான வாக்குகள் சிறுபான்மை இனத்தவர்களுக்கு உண்டு. பலர் போட்டியில் இறங்கும்போது ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் அளிக்கப்படும் வாக்குகளில் 50 வீதத்துக்கும் மேலான வாக்குகளைப் பெற வேண்டுமென்றால் இந்த வாக்குகளையும் பெற்றேயாக வேண்டும். மஹிந்த ராஜபக்ஷ 50 வீதமான வாக்குகளைப் பெறுவதைத் தடுக்கும் நோக்குடன் ஜனாதிபதித் தேர்தலில் பலர் போட்டியிடுவார்களாயின் பெரும்பான்மையின மக்களின் வாக்குகள் சிதறுவதை எவருமே தடுக்க முடியாது. இந்த நிலையில் சிறுபான்மையினரின் வாக்குகளே முக்கியத்துவம் பெறப் போகின்றன. கடந்த 2005 இல் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் வாக்களித்திருந்தால் மஹிந்த ராஜபக்ஷ ஒருபோதுமே பதவிக்கு வந்தி ருக்க முடியாது என்பதை ஒருகணம் சிந்தித்துப் பார்த்தால் எல்லாமே தெரியவரும்.

மேலும் இங்கு நடைபெறும் தேர்தல்கள் நேர்மையான வகையில் இடம் பெறுகின்றன என்று கூறிவிட முடியாது. பல்வேறு மோசடிகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் ஜனநாயகத்துக்குச் சாவு மணி அடிக்கும் விதமாகவே இங்கு தேர்தல்கள் இடம்பெறுகின்றன. அதிலும் அரசு தனக்குள்ள வளங்கள் அத்தனையையும் பயன்படுத்துவதால் நியாயமான தேர்தல்கள் இடம்பெறுவதில்லை. சுயாதீனமான தேர்தல் ஆணையகமும் அமைக்கப்படாததால் தேர்தல் ஆணையாளர் வெறுமனே கூட்டல், கழித்தல் தரவுகளைக் கூறவேண்டிய ஒருவராகவே காணப்படுகின்றார்.

அதிகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதியிடம் உள்ளதால் நாடாளுமன்றம் என்பது வெறும் சம்பிரதாய பூர்வமான அமைப்பாகவே இயங்கி வருகின்றது. அரசியல் சாசனத்தை உருவாக்குவதில் நாடாளுமன்றமே பெரும் பங்கு வகிக்கின்றது. அதேபோன்று அதில் திருத்தங்களை மேற்கொள்வதும் இதன் பணியாகும். ஆனாலும் கூட பெரும்பான்மை என்றும், கூட்டல் கழித்தல் முறையே இங்கும் பயன்படுத்தப்படுவதாலும் நீதி, நியாயங்கள் இங்கு சீர்தூக்கிப் பார்க்கப்படுவதில்லை. உயர்நீதிமன்றத்தின் முன்னாள் பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்க விடயத்திலும் இதுவே நடந்துள்ளது. பெரும்பான்மை என்ற கணக்கை வைத்துக்கொண்டு உண்மைகளை ஆராயாது ஷிராணியைப் பதவி விலக்கும் ஜனாதிபதியின் நோக்கத்தை நிறைவு செய்வதிலேயே கவனம் செலுத்திய நாடாளுமன்றத்தால் அதனையே செய்ய முடிந்தது. மேலும் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியாத தொரு நிலையும் இங்கு



காணப்படுகின்றது. இதனால் நாடாளுமன்றத்தின் மதிப்பு குறைந்த நிலையிலேயே உள்ளதைக் காண முடிகின்றது.

தற்போதைய இலங்கையரசு உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றது. இறுதிப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்களும், காணாமற் போனவர்கள் விடயமும் அரசை இரு முனைகளில் தாக்குவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கின்றன. இதைவிட சாமானிய மக்களின் பொருளாதார நெருக்கடி, சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகள் என்பனவும் ஈட்டி முனைகளாகத் துரத்திக் கொண் டிருக்கின்றன. போர் வெற்றியும் பெரும்பான்மையின மக்களால் மெல்ல மெல்ல மறக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. பிரபல சோதிடர் ஒருவரும் இந்த ஆண்டு சுனாமியின் உருவத்தில் இடரொன்று இடம்பெறு மெனவும் இதன் காரணமாக ஆட்சி மாற்றம் உருவாகுமெனவும் கூறியுள்ளார்.

ஆகவே எதிரணியினர் ஒன்றாக இணைந்து ஒற்றுமையுடன் செயற்படுவதுடன், சிறுபான்மை இனத்தவர்களுக்கும் நம்பிக்கையூட்டி அவர்களையும் அரவணைத்துச் செல்வார்களாயின் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் இலகுவாக வெற்றி பெற முடியும். மேலும் மோசடிகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் எதிராகத் துணிவுடன் செயற்படவேண்டிய பொறுப்பும் இவர்களுக்கு உண்டு.

எவர் என்ன கூறினாலும் அடுத்த ஆண்டு இடம்பெறப் போகும் தேர்தல்கள் சுவாரஸ்யம் மிக்கனவாகவே அமையப் போகின்றன.

# பேசுவதை நிறுத்துங்கள் ராஜபக்ஷ



ராஜபக்ஷ அவர்களே, நிறையப் பேசியாயிற்று. உங்கள் அக்கறையை இனி செயலில் காட்டுங்கள். தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு அளிப்பதென்பது பாகப்பிரிவினையோ கூடுதல் சலுகையோ அல்ல.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கப் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்று இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷ சமீபத்தில் கூறியிருப்பதை எந்த வகையில் எடுத்துக் கொள்வதென்றே தெரியவில்லை.

இந்த விடயம்குறித்து முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, அப்போதைய இலங்கை அதிபர் ஜூனியஸ் ஜெயவர்த்தன ஆகியோர் 1987இல் பேசி முடிவுசெய்து கையெழுத்திட்ட இந்திய- இலங்கை ஒப்பந்தம், இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படாமலேயே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்து விட்டதால் இனிச் சமரசம் ஏற்பட்டு விடும் என்ற நடுநிலையாளர்களின் நம்பிக்கை ஐந்து ஆண்டுகள் கடந்த பிறகும் இதுவரை பயனேதும் அளிக்கவில்லை.

இலங்கையின் அரசியல் சட்டத்திலேயே சேர்க்கப்பட்டுவிட்ட 13ஆவது திருத்தம் என்பது ஒன்றுபட்ட இலங்கை என்ற அரசியல் கட்டமைப்பைக் காப்பதுடன் தமிழர்களைச் சம உரிமையுள்ள இலங்கைக் குடிமக்களாக அங்கீகரிக்கும் தன்மையைக் கொண்டது. ஆனால், அந்தச் சட்டத் திருத்தத்தை மேற்கொள்வதில் இலங்கை அரசுக்கு ஈடுபாடு துளியும் இல்லை என்பதுதான் உண்மை.

போரின்போது அப்பாவி மக்களின் மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டமை தொடர்பாக ஏராளமான குற்றச்சாட்டுகள், தெரிவிக்கப்பட்டபோதிலும் விசாரணை என்பது கண்துடைப்பாகவே இருக்கிறது. ஐ.நா.வின் சர்வதேச விசாரணைக் குழுவையும் அனுமதிக்க முடியாது, அது இலங்கையின் இறையாண்மைக்கு எதிரானது என்றும் இலங்கை அரசு கூறிவிட்டது.

போர்க் குற்றங்கள்குறித்தும் மனித உரிமைகள் மீறல்குறித்தும் கேட்டபோதுகூட, அந்தக் குற்றங்களுக்குக் காரணமே விடுதலைப் புலிகள்தான் என்றும், காணாமல் போனவர்களில் இலங்கை ராணுவத்தினரும் அவர்களுடைய குடும்பத்தவரும்கூட இருப்பதால், அதுபற்றியும் உள்நாட்டில் முதலில் விசாரிக்கப்பட வேண்டும் என்று கூறி, அந்தக் கோரிக்கையையே திசை திருப்பியிருக்கிறார் ராஜபக்ஷ.

இவையெல்லாம் ஒருபுறம் இருக்க, தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டணியின் மாகாண அரசுக்கு ஆட்சியில் முக்கியமான அதிகாரங்களும் பொறுப்பும் வழங்காமல், முனிசி பல் சேர்மன் போன்ற அலங்காரப் பதவியாக மாகாண முதல்வரை ஆக்கிவிட்டதை என்னவென்று சொல்வது? இதுபற்றிய கேள்விக்கு நாம் பேசத் தயாராக இருக்கிறோம், பேச அவர்கள் தான் வர வேண்டும் என்றிருக்கிறார் ராஜபக்ஷ.

பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று ராஜபக்ஷ ஒருபுறம் சொல்கிறார். மறுபுறம், தமிழர் பகுதிகளில் காணப்படும் ராணுவ ஆக்கிரமிப்பு, தொடர்ச்சியான சிங்களக் குடியேற்றங்கள், இலங்கையின் மத்திய அரசிடமே நீடிக்கும் காவல்துறை நிர்வாகம் ஆகிய நிலைப்பாடுகள். அவருடைய அரசுக்கு தமிழர் பிரச்சினை குறித்துக் கொஞ்சமும் பரி சீலிக்கும் மனம் இல்லை என்றால் அந்தப் பேச்சுவார்த்தையால் பயன்தான் என்ன?


ராஜபக்ஷ அவர்களே, நிறையப் பேசியாயிற்று. உங்கள் அக்கறையை இனி செயலில் காட்டுங்கள். தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிப்பதென்பது பாகப்பிரிவினையோ கூடுதல் சலுகையோ அல்ல. உங்கள் குடிமக்களில் ஒரு பகுதியினருக்கு நீங்கள் அளிக்கும் சம உரிமை மூலம் இலங்கை அரசு தன்னுடைய அக்கறையின் நம்பகத்தன்மையை வெளிப்படுத்த ஒரேயொரு வழிதான் இருக்கிறது. அரசமைப்புக்கான 13ஆவது சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுங்கள்!

நன்றி; தமிழ் இந்து

# அனைவரது வாழ்வையும் வளமாக்கும் ஒருவர்

வாழ்வை வளமாக்க இன்று மனிதன் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் வானைத் தொடுகின்றன. இருப்பினும் வாழ்க்கையில் அவன் எதிர்கொள்ளும் சவால்களோ அவற்றையும் மிஞ்சுகின்றன. பொருளாதாரச் சிக்கல்கள், உறவுமுறைகளில் சிக்கல்கள், வேலைப்பளு, ஏமாற்றங்கள், குடும்பத் தகராறுகள் என தனிமனிதன் எதிர்கொள்ளும் சவால்கள் ஒருபுறமும், நாடுகளுக்கு இடையே போர், உள்நாட்டுக் கலவரங்கள், மதக் கலவரங்கள், இயற்கை இடர்கள்,கட்சிக் கலவரங்கள் என நாடுகள் எதிர்கொள்ளும் சவால்கள் இன்னொரு புறமும் நாளுக்குநாள் விஸ்வரூபம் எடுத்து, இவை அனைத்தும் மனிதனின் அமைதியையும் சந்தோஷத்தையும் அழித்தொழித்து இதுவே நரகம் என்ற சூழலை உலகில் உருவாகியுள்ளது.

பாவம் செய்தவர்களே நரகத்துக்குச் செல்வார்கள் என்பது பொதுவான நம்பிக்கை. ஆனால் இன்று ஒவ்வொரு மனிதனும் நரகத்தில் வாழும் சூழலே இருப்பதால் இந்த உலகில் பிறக்கின்ற சகலரும் பாவம் செய்தவர்களா என்ற கேள்வி எழுகின்றது. ஆழமாகச் சிந்திப்போமேயானால், எவர் ஒருவரின் மனம் அமைதியற்று, சந்தோசம் இழந்து, அன்பு இழந்து அவதியுற்றுக் கொண்டிருக்கின்றதோ அவர்கள் நரக வாழ்க்கையே வாழ்கின்றார்கள். இந்த நிலை மாற வேண்டியது அவசியம். சுயமாற்றமே வளமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும்.



### சுயமாற்றம் என்றால் என்ன?

மனித உடற்பகுதிகளில் ஏதேனும் ஒரு குறைபாடு இருக்கலாம். ஆனால் எண்ணங்களை பிறப்பிக்க இயலாதவர்கள் என எவருமே இருக்க முடியாது. எண்ணங்கள் இயற்கையினால் மனிதனுக்கு கிடைத்த வரப்பிரசாதம், எனினும் ஏனைய இயற்கை வளங்களைப் போன்றே எண்ணங்களும் ஆக்கத்தையும் அழிவையும் ஏற்படுத்தக் கூடியவையாகும். ஆக்க பூர்வ, தூய, அவசியமான எண்ணங்கள் ஒரு மனிதனின் வாழ்வை வளமாக்குகின்றன. தூய்மையற்ற, ஆக்கபூர்வமற்ற, எதிர் மறையான எண்ணங்கள் அவனது வாழ்க்கையை அழித்து விடுகின்றன. இதிலிருந்து நாம் புரிந்து கொள்வது எமது வாழ்க்கை எமது கையிலேயே உள்ளது என்பது தான்.

### எண்ணங்களைச் சக்தி வாய்ந்ததாக ஆக்குவது எவ்வாறு?

எண்ணங்களை ஒரு மரத்தின் இலையோடு ஒப்பிடலாம். இலை பசுமையாக இருக்க வேண்டுமாயின் வேருக்கு உகந்த ஆகாரம் தேவையாகும். ஒரு மனிதனின் குணங்களும், சுபாவங்களும் வேரைப் போன்றவை. இந்தக் குணங்களும், சுபாவங்களும் என்னவோ அதற்கேற்பவே மனதிலிருந்து எண்ணங்கள் உருவாகுகின்றன. எண்ணங்கள் பசுமையாக இருக்க வேண்டுமாயின், குணங்களும் சுபாவங்களும் நற்குணங்களினாலும் நல்ல சுபாவங்களினாலும் நிறைந்திருக்க வேண்டும். நல்ல குணங்களுக்கும், நல்ல சுபாவங்களுக்கும் தெய்வீக புத்தியே ஆகாரமாக, ஆதாரமாக உள்ளது.

### புத்தியை தெய்வீகமாக்குவது எவ்வாறு?

நல்ல சகவாசம் கரையேற்றும் என்றும், தீய சகவாசம் மூழ்கடிக்கும் என்றும் கூறுவர். இன்றைய உலக சூழலில் நம்பிக்கையான சகவாசம் என ஒரேயொருவரின் சகவாசத்தையே கூற முடியும். ஏனைய அனைத்து சகவாசங்களும் அனேகமாக மூழ்கடிக்கின்றன, அவை நல்லவையாகவே இருப்பினும் நிரந்தரமானவையோ, நிலையானவையோ அல்ல. நிரந்தரமான, நிலையான, நம்பிக்கைக்குரிய சகவாசத்தை ஒருவரால் மாத்திரமே கொடுக்க முடியும். அவர் பல பெயர் கொண்டு அழைக்கப்பட்டாலும் அவர் ஒருவரே. அவர் சர்வ சக்திகளும் நிறைந்தவர், எந்தச் சூழலிலும் கை கொடுக்கக் கூடியவர். அந்த உதவியைப் பெறவே இன்றைய மனிதன் பல வழிகளிலும் இறைவன் என்ற பெயரில் அவரைத் தேடுகின்றான். எனினும் ஒருவரின் துணையை துல்லியமாக பெற்றுக் கொள்வதற்கு நிச்சயமாக அவருக்குரிய மொழி தெரிந்திருக்க வேண்டும். இறை சகவாசத்துக்கு நிச்சயமாக இறை மொழியான மௌன மொழியில் பரீட்சயம் தேவையாகும். இறை வனுடன் மௌனமாக உரையாடுதலே இராஜயோக தியானமாகும். நாள் முழுவதும் இயன்றளவு மௌனமாக இருந்து எமது புத்தியை இறை நினைவில் தெய்வீகமாக்கும் போது, சுயமாற்றம் தானாகவே இடம்பெறுகின்றது. அதனால் குணங்களிலும் சுபாவங்களிலும் மாற்றம் ஏற்படுகின்றது. இதனூடாக ஆக்க பூர்வமான தூய எண்ணங்கள் வெளிப்பட்டு அது ஆக்கச் சக்தியாகி, சொந்த வாழ்க்கையை வளமாக்குவதுடன் அந்த எண்ண சக்திகளின் அதிர்வுகள் சூழலிலும் அமைதியையும் சந்தோசத்தையும் ஏற்படுத்துகின்றன.

இந்த நிலை ஒன்றினாலேயே இறைவனால் உலகில் அமைதியை உருவாக்க முடியும். அத்துடன் இதற்கு எமது ஒவ்வொருவரது பங்களிப்பும் அவசியமாகும். இந்தப் பங்களிப்பை வழங்குவதன் மூலம் முதலில் நாம் பயனடைகின்றோம், அதனூடாக உலகுக்கு பயனளிக்கின்றோம். அப்பொழுதே நாம் உண்மையான இறை உதவியாளர்களாகவும் ஆகின்றோம்.

உலகில் அனைவராலும் எதிர்பார்க்கப்படும் அமைதி, சந்தோசம், ஸ்திரத்தன்மை போன்றவற்றை உருவாக்குவதற்காக பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினூடாக ஒவ்வொரு நபரும் தம்மை சக்தியூட்டிக் கொள்வதன் மூலம் உலகில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்ற நோக்கில் இந்தப் புதிய நிகழ்ச்சித்திட்டம் எடுத்துச் செல்லப்படுகிறது.

இதன் பிரதான அம்சம்: இந்த நிகழ்வு உலகளாவிய ரீதியில் 135 நாடுகளில் ஆயிரக்கணக்கான அரங்கங்களில் ஒரே தலைப்பில் உலக அமைதித் தினமாகிய 21.09.2014 அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது தான்.

எமக்கும், வீட்டுக்கும், சமூகத்துக்கும், நாட்டுக்கும் முழு உலகுக்கும் நன்மை செய்ய வேண்டும் என்ற உணர்வுடன் இருக்கும் உங்கள் அனைவரையும் எம்முடன் இணைந்து இந்த உலகளாவிய மாலைப் பொழுதில் கலந்து கொண்டு,உலகில் சுபீட்சத்தை அதிகரிப்பதில் உலகிலுள்ள மக்கள் அனைவருடனும் கைகோர்த்து ஒத்துழைக்குமாறு அன்புடன் அழைக்கிறோம் என பிரம்மகுமாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த நிகழ்வுகள் 21.09.2014 அன்று கொழும்பில் வத்தளை பிரதேச சபை மண்டபத்தில் மாலை 5 மணி முதல் 7.30 மணிவரையும் மற்றும் யாழ்ப்பாணம் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபம், 345, கோவில் வீதி, நல்லூரில் மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரையும் 'கடவுளின் சக்தியால் மாற்றத்துக்கான காலம்' என்ற தலைப்பில் இடம்பெறவுள்ளன. இதே தலைப்பில் மட்டக்களப்பில் 39/33, 2ஆம் ஒழுங்கை பாரதிபுரத்தில் மாலை 5.30 மணி முதல் 7.30 மணி வரையும், முல்லைத்தீவில் பிரம்மகுமாரிகள் சதுக்கம், வற்றாப்பளை, முள்ளியவளையில் மாலை 4 மணி முதல் 5.30 மணி வரையும், வவுனியாவில் மாலை 5 மணி முதல் 7 மணி வரையும் பிரம்ம குமாரிகள் நிலையம் 23, கற்குழி, வவுனியாவிலும் இடம்பெறவுள்ளன. கண்டி இனர் ஸ்பேஸ், 128, கட்டுகஸ் தோட்டையிலும், மாத்தளை பண்டாரவளையில் 35/9A பொலிஸ் கந்த வீதியிலும் இந்த நிக்ழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தகவல் தொடர்பு இணைப்பாளர்,
பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம், யாழ்ப்பாணம்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா


**மேடம்**: புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். குடும்பத்தில் வீண் வாக்குவாதம் ஏற்படும். பிள்ளைகள் மூலம் செலவு இருக்கும். அவர்களது முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பீர்கள். பயணங்கள் செல்ல நேரலாம்.


**இடபம்**: உறவினர்களிடம் வீண்வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். வாக்கு வன்மையால் காரியங்களில் அனுகூலம் ஏற்படும்.


**மிதுனம்**: மனதில் தேவையற்ற எண்ணங்கள் ஏற்படும். வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும். திடீர் செலவு உண்டாகலாம். காரியங்களில் தடைதாமதம் ஏற்படும். சிந்தித்துச் செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும்.


**கடகம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் உழைப்பு அதிகமாகும். முயற்சிகள் பயன்தராமல் போகலாம். உறவினர்களிடம் வீண் மனஸ்தாபம் உண்டாகலாம். குடும்பத்தில் கருத்து வேற்றுமை வரலாம்.


**சிங்கம்**: வீண் மனக்கவலை உண்டாகலாம். காரியங்களில் தடைதாமதம், வீண் செலவு ஏற்படலாம். வெளிநாட்டு வாய்ப்புகள் கை கூடி வரும். அதிகமான ஒப்பந்தங்களில் கையெழுத்திட வேண்டி வரும். உடன் பணிபுரியும் பணியாளர்களால் நன்மை ஏற்படும்.


**கன்னி**: அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு வேகமாக நடக்காவிட்டாலும் லாபம் குறையாமல் இருக்கும். வேலைப்பளு அதிகரிக்கும்.


**துலாம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு தடங்கல்கள், கூடுதல் உழைப்பு ஆகியவற்றைச் சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்கள் எதையும் வெளிக்காட்டாமல் உங்களுடன் இன்முகம் காட்டிப் பேசுவார்கள்.


**விருச்சிகம்**: சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். மற்றவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்கள் செய்யத் தயங்கும் வேலையைச் செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள்.


**தனுசு**: தொழில் வியாபாரத்தில் உயர்வுகள் உண்டாகும். அனுபவ பூர்வமான அறிவு கைகொடுக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எளிதாக பணிகளைச் செய்து முடிப்பார்கள். செயல்திறன் அதிகரிக்கும்.


**மகரம்**: குடும்பத்தில் இருப்பவர்கள் ஏதாவது குறை சொல்லியபடி இருப்பார்கள். புத்திசாதுரியம் அதிகரிக்கும். பயணங்களின்போது கவனம் தேவை. வீட்டில் உள்ளவர்கள் உங்களுக்குத் தகுந்த மரியாதை கொடுப்பார்கள்.


**கும்பம்**: தொழில் தொடர்பான நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி வரும். புதிய பொறுப்புகள் சுமையாக வரும். நிதானம் தேவை. எண்ணியபடி செயல்களை செய்து காரிய வெற்றி காண்பீர்கள். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.


**மீனம்**: தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றமான பயன் காண்பார்கள். புதிய வேலை பற்றிய சிந்தனை அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடித்து பாராட்டுப் பெறுவீர்கள்.

## நாளை

**புரட்டாதி-03 வெள்ளிக்கிழமை | 19.09.2014**

திதி: ஏகாதசி பி.இ.04.43 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் கா.6.46 வரை

சுபநேரம்:06.03-07.33 வரை
இராகுகாலம்:10.33-12.03 வரை
ஏகாதசி விரதம்

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## நியதி பற்றிய அறிவு

விவேகானந்தர் எழுதி வைத்திருந்த கையெழுத்துப் பிரதியில் நியதி பற்றி அவர் குறிப்பிடுகையில்;
தன் எல்லைக்குள் அடங்கிய ஒவ்வொரு தோற்றத்தின் செயல்முறை அல்லது சமத்துவ நிலையே நியதி எனப்படும். நியதி என்பது ஒரு போதும் தோற்றத்திலிருந்து வேறானதல்ல. அவ்வாறே மூலமும் மனிதனிலிருந்து வேறானதல்ல. மாற்றங்களின் தொகுப்பின் மூலமாகவும் சேர்க்கையின் மூலமாகவுமே நியதி பற்றிய அறிவைப் பெறுகிறோம். பொருள்களின் உண்மை நிலையில் நியதி இருக்கிறது. தீயானது சுட்டே தீரும். நீரானது நனைத்தே தீரும் என்பது நியதி. ஆன்ம நியதிகள், ஒழுக்க நியதிகள் சமுதாய நியதிகள், தேசநியதிகள் என்பவை தற்போதைய ஆன்மிக அளவைகள், மனிதப் பண்பு அளவைகள் என்பவற்றின் கூறுகளாகவும் அத்தகைய நியதிகளால் கட்டுப்பட்டு இருக்கின்ற ஒவ்வொரு அளவைகளின் காரணமாகவும் ஏற்படும். நிகழ்ச்சிகளின் தவறாத அனுபவமாகவும் இருக்குமானால் அவை எல்லாம் நியதியே. நாம் நியதியால் ஆக்கப்படுகிறோம். நாமும் நியதிகளை உருவாக்குகிறோம். சந்தர்ப்பங்களில் ஒரு மனிதன் தவறாமல் செய்யும் செயல்களில் காணும் பொதுத் தன்மையே அந்தக் குறிப்பிட்ட நோக்கத்தின்படி விதியாகும். இந்த விதியிலிருந்து யாரும் தப்பமுடியாது. நியதி என்பது அழியாமல் நிலைத்து நிற்கும். உடல் எந்தப் பொருள்களால் ஆக்கப்பட்டு இருக்கிறதோ அந்தப் பொருள்களைப் பற்றிய விதிகளையும் அந்தப் பொருள்கள் கால எல்லையையும் கடந்து நிலைத்து இருக்கின்றன என்பதையும் கண்டுபிடித்து இருக்கிறார்கள். உடலுக்கு அப்பாலுள்ள மனிதனைப் பற்றிய விதியைக் கண்டு பிடிப்பது கடினமாகும். இயற்கை விதிகளை எதிர்த்துச் செல்ல யாராலும் முடியாது. பெரும்பாலான மக்களின் முடிவுகளின் தோற்றமே ஒரு நாட்டின் விதிகள், சட்டங்கள். அவ்வாறு இருக்க வேண்டும் என்ற ஆசையே தவிர, அவை உண்மையில் அந்த நிலையில் இல்லை. இயற்கை பற்றிக் கூறப்படும் விதி என்ற சொல் ஒழுக்கத்தையும் மனிதரது செயல்களையும் குறிக்கப் பயன்படும் போது மிகவும் வேறுபட்ட பொருள்படுகிறது.

# வால் நட்சத்திரத்தில் கலன் இறங்கும் இடத்தை அடையாளம் காணல்



ஆளில்லா விண்கலமான ரொசெட்டா, தொலைதூர வால் நட்சத்திரம் ஒன்றில் எந்த இடத்தில் இறங்கி பரிசோதனைகளைச் செய்யும் என்பதை ஐரோப்பிய விஞ்ஞானிகள் தெரிவு செய்துள்ளனர்.
"67பி' என்று பெயரிடப்பட்டுள்ள 4 கிலோமீற்றர் அகலம் கொண்ட அந்த வால் நட்சத்திரத்தின் நூற்றுக்கணக்கான படங்களை ஆராய்ந்த பிறகே, ரொசெட்டா இறங்கும் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
எதிர்வரும் நவம்பர் மாதம் அந்த விண்கலம் தரையிறங்க, ஒப்பீட்டளவில் சமமாகவுள்ள ஓர் இடத்தையே தாங்கள் தேர்தெடுத்துள்ளதாக, விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.
ஃபிலே என்று அழைக்கப்படும் அந்தச் சோதனைக் கருவி , பனிப்பாறைகளைக் கொண்ட தளமொன்றில், திருகாணிகள் மற்றும் ஈட்டிகளைக் கொண்டு தன்னை நிலை நிறுத்திக் கொள்ளும்.
அந்த வால் நட்சத்திரத்தின் ஈர்ப்பு விசை மிகவும் குறைவாக உள்ளதால், ரொசெட்டா விண்கலம் அங்கு இறங்கி நிற்பது இயலாத ஒன்று. எனினும் இந்தச் சோதனை முயற்சியில் பல விடயங்கள் தவறாகப் போகக் கூடும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.
நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள இந்த முயற்சி, முற்றாக தானியங்கி இயந்திரங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் மூலம் செயற்படுத்தப்படும்.
தகவல்களை உடனுக்குடன் பகிர்ந்து கொள்ளும் தொலைவில் அப்போது ரொசெட்டா இருக்காது என்றும், அது மிக மிக தொலைவில் இருப்பதாலேயே இந்த ஏற்பாடு என்றும் ஐரோப்பிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | | | | 2 | | 7 |
| | | | | | 6 | 3 | 8 | |
| | 7 | 3 | 8 | | 4 | 6 | 9 | 1 |
| 6 | | | | | 7 | 1 | | |
| 2 | | | 9 | | 3 | | | 5 |
| | | 4 | 1 | | | | | 3 |
| 7 | 5 | 6 | 4 | | 2 | 9 | 1 | |
| | 2 | 9 | 5 | | | | | |
| 8 | | 1 | | | 5 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 6 | 9 | 4 | 5 | 3 | 1 | 7 |
| 7 | 3 | 1 | 2 | 6 | 8 | 4 | 5 | 9 |
| 4 | 5 | 9 | 3 | 7 | 1 | 2 | 6 | 8 |
| 8 | 6 | 3 | 4 | 2 | 7 | 1 | 9 | 5 |
| 9 | 4 | 7 | 5 | 1 | 3 | 6 | 8 | 2 |
| 1 | 2 | 5 | 6 | 8 | 9 | 7 | 4 | 3 |
| 6 | 9 | 4 | 8 | 3 | 2 | 5 | 7 | 1 |
| 5 | 1 | 2 | 7 | 9 | 6 | 8 | 3 | 4 |
| 3 | 7 | 8 | 1 | 5 | 4 | 9 | 2 | 6 |





இலங்கை பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பளுதூக்கும் போட்டியில் பதக்கங்களை வென்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு, கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்களினால் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. நேற்றையதினம் பாண்ட் வாத்திய இசையுடன் கல்லூரி மைதானத்துக்கு அழைத்து வரப்பட்ட வீரர்கள் மாலைகள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இந்தப் போட்டியில் எட்டுப் பதக்கங்களை யாழ். இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ரி- 86)

# பளுதூக்கல் போட்டியில் தொடர்கிறது பதக்கவேட்டை



இலங்கை 19 வயதுப் பிரிவில் தங்கப்பதக்கத்தை வென்ற யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை வீராங்கனை டினோஜா கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்களினால் நடத்தப்பட்ட வரவேற்பு நிகழ்வில் உரையாற்றும் போது. (ரி- 86)

யாழ்ப்பாணம்,செப்.18

தேசியமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டியில் வட மாகாண பாடசாலைகளின் பதக்க வேட்டை தொடர்கிறது. நேற்று முன்தினம் இடம்பெற்ற பெண்களுக்கான போட்டிகளில் 2 தங்கப்பதக்கங்களும், 2 வெள்ளி பதக்கங்களும் பெறப்பட்டன. மொத்தமாக வடமாகாணம் சார்பில் 18 பதக்கங்கள் வெல்லப்பட்டுள்ளன.

கொழும்பு அசோக கல்லூரியில் இடம்பெற்று வரும் தேசியமட்ட பாடசாலை களுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவி ஜெ.ஜெ.பி. டினோஜா 63 கிலோ எடைப்பிரிவில் 118 கிலோ எடையைத் தூக்கி முதலாம் இடத்தையும், 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான போட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி வி.ஆர்சிகா 63 கிலோ எடைப்பிரிவில் 112 கிலோ எடையைத் தூக்கி முதலாமிடத்தையும் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றனர். 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவி ஆர்.கௌசிகா 58 கிலோ எடைப்பிரிவில் 70 கிலோ எடையை தூக்கி இரண்டாம் இடத்தையும், 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி ரி.சுசந்திக்கா 53 கிலோ எடைப்பிரிவில் 70 கிலோ எடையைத் தூக்கி இரண்டாம் இடத்தையும் பெற்று வெள்ளி பதக்கத்தை வென்றனர். வடமாகாணம் சார்பில் வெல்லப்பட்ட 18 பதக்கங்களல், எட்டுப் பதக்கங்களை யாழ். இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ரி- 23-86)

# வவுனியா வீரர்கள் சாதனை



சர்வதேச கராத்தே சுற்றுப் போட்டி யில் வவுனியாவைச் சேர்ந்த வீரர்கள் 10 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

ஜப்பான் கராத்தே சம்மேளனத்தின் இலங்கை கிளையினால் கடந்த வெள்ளிக்கிழமை வெண்ணம்புவ அல்பேட் பீரீஸ் விளையாட்டு உள்ளக அரங்கில் இரண்டாவது சர்வதேச கராத்தே சுற்றுப் போட்டி நடத்தப்பட்டது.

இதில் கலந்து கொண்ட வவுனியா வைச் சேர்ந்த வீரர்கள் 4 தங்கம், 2வெள்ளி, 4வெண்கலம் என மொத்தமாக 10 பத்தக்கங்களை வென்றுள்ளனர். வெற்றி பெற்ற வீரர்கள், வவுனியா மாவட்ட சர்வதேச கராத்தே அமைப்பின் வடமாகாணத் தலைவரும், பயிற்றுநருமான சென்.சே.க.மோகன்ராஜ்ஜின் மாணவர்கள் என்பது குறிப் பிடத்தக்கது. இவர்கள் வவுனியா மாவட்டத்துக் கும், வடமாகாணத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர் என சர்வதேச கராத்தே அமைப்பின் வவுனியா தலைவர் தெரிவித்துள்ளார். (ரி- 421)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,செப்.18

பண்டத்தரிப்பு குஞ்சன் கலட்டி அறிவொளி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சிப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை 7 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் மயிலிட்டிகண்ணகி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி- 23)

* * *

கரணவாய்,செப்.18

திக்கம் இளைஞர் விளையாட் டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும், பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சாவற்காடு மகாத்மா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாகர்கோயில் நாகதீபம் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ரி- 108)

# அச்சுவேலியின் முதல்வனானது கதிரொளி ரொக்கெட்



அச்சுவேலி பிரதேசத்தின் எட்டு மென்பந்து கிரிக்கெட் கழகங்கள் இணைந்து நடத்திய 2014ஆம் ஆண்டுக்கான 'அச்சுவேலி முதல்வன்' கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் முரசொலி விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி வெற்றி வாகை சூடியது அச்சுவேலி கதிரொளி ரொக்கெட் விளையாட்டுக்கழகம்.

லீக் முறையில் நடத்தப்பட்ட இந்தச் சுற்றுப்போட்டியில் எட்டு அணிகளும் எதிரணிகளுடன் தலா ஒரு முறை மோதிய 38 போட்டிகளின் முடிவில், புள்ளிப்பட்டியலில் முதல் நான்கு இடங்களையும் முரசொலி, கதிரொளி ரொக்கெட், செங்கொடி, அச்சுவேலி மத்தி ஆகிய அணிகள் பெற்று 'ப்ளே ஒப்' சுற்றுக்குத் தகுதி பெற்றன. முதலாவது தகுதிப்போட்டியில் முரசொலியை வீழ்த்திய கதிரொளி ரொக்கெட் அணி நேரடியாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. அச்சுவேலி மத்தி அணியை வீழ்த்திய செங்கொடி விளையாட்டுக் கழகம் இரண்டாவது தகுதி போட்டியில் முரசொலியை எதிர்கொண்டது. அதில் முர சொலி வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது.

இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலி மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் முரசொலி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கதிரொளி ரொக்கெட் விளையாட்டுக் கழகம் மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற முரசொலியின் அணித் தலைவர் களத்தடுப்பைத் தெரிவு செய்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய கதிரொளி ரொக்கெட் அணிக்கு ஆரம்ப வீரர் மதுஜந்த் விரைவாக ஆட்டமிழந்த போதிலும் மறுமுனையில் நம்பிக்கை தந்த சார்லஸ் முரசொலி வீரர்களின் பந்துகளை துவம்சம் செய்தார். சீரான இடைவெளியில் இலக்குகள் சரிக்கப்பட்டபோதும் நான்காவது இலக்குக்காக டான்சனுடன் இணைந்து 56 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றார் சார்லஸ். பத்து ஓவர்கள் நிறைவில் கதிரொளி ரொக்கெட் அணி 8 இலக்குகள் இழப்புக்கு 120 ஓட்டங்களைக் குவித்தது. 6 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் அடங்கலாக சார்லஸ் 56 ஓட்டங்களையும், 2 சிக்ஸர்கள் ஒரு பவுண்டரி அடங்கலாக டான்சன் 24 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் முரசொலி அணியின் காந்தரூபன், நிஷாந்தன், சுபேந்திரன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளைச் சாய்த்தனர்.

கடினமான வெற்றி இலக்கை துரத்தத் தொடங்கிய முரசொலி அணி முதலாவது ஓவரின் இரண்டாவது பந்திலேயே முதல் இலக்கை இழந்து தடுமாறத் தொடங்கியது. இரண்டாவது இலக்கிற்காக ஜோடி சேர்ந்த காந்தரூபனும் சுபேந்திரனும் அதிரடியாக ஆடினர். ஆனாலும் மூன்றாவது ஓவரை வீசிய கதிரொளி ரொக்கெட்டின் செல்லா இருவரையுமே அடுத்தடுத்த பந்துகளில் வெளியேற்றி அதிர்ச்சியளித்தார். அடுத்து வந்த வீரர்கள் நிலைத்து நின்று ஆடாமல் ஒவ்வொருவராக வெளியேற முரசொலி அணி 10 ஓவர்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்று 27 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக காந்தரூபன் 22 ஓட்டங்களை தனது அணிக்காக பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் கதிரொளி ரொக்கெட் சார்பாக செல்லா 3 இலக்குகளையும், நேருஜன் மற்றும் சார்லஸ் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக கதிரொளி ரொக்கெட்டின் சார்லஸ் தெரிவு செய்யப்பட்டார். லீக் சுற்றின் நிறைவில் 7 போட்டிகளில் உயர்ந்த பட்சமாக ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களோடு மொத்தமாக 170 ஓட்டங்களைச் சேகரித்த இடைக்காடு விளையாட்டுக்கழகத்தின் கார்த்தீபன் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், சிறந்த பந்து வீச்சாளராக 7 போட்டிகளில் 15 இலக்குகளை வீழ்த்திய அச்சுவேலி மத்திய விளையாட்டுக் கழகத்தின் செந்தூரனும் தெரிவாகினர். இறுதிப்போட்டியில்வெற்றியாளருக்குரிய கேடயத்தையும், பணப் பரிசையும் முரசொலி வி.எஸ்.கழகத்தின் தலைவர் திரு.சுதாஸ்கரனும், இரண்டாம் இடத்துக்கான கேடயத்தையும், பணப்பரிசையும் ரொக்கெட் விளையாட்டுக்கழக ஆலோசகர் திரு.தயாளனும் வழங்கிக் கௌரவித்தனர். (ரி- 11)

# பாகிஸ்தான் தொடரிலிருந்து விலகினார் கிளார்க்



தொடைப் பகுதியில் ஏற்பட்ட தசைப் பிடிப்பிலிருந்து முற்றாகக் குணமடையாத நிலையில், பாகிஸ்தானுக்கெதிரான ஒருநாள் தொடரிலிருந்து விலகியுள்ளார் ஆஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க்.

அண்மையில் சிம்பாப்வேயில் நடந்து முடிந்த முத்தரப்பு கிரிக்கெட் தொடரின் போது தொடைப் பகுதியில் ஏற்பட்ட தசைப்பிடிப்பால் ஆஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் ஒரு ஆட்டத்தில் மாத்திரம் விளையாடியிருந்த நிலையில் பாதியிலேயே தொடரிலிருந்து விலகினார்.

இந்த நிலையில் காயத்திலிருந்து முழுமையாகக் குணமடைய மேலும் நாட்கள் தேவை என்பது தெரியவந்துள்ளதால், அடுத்த மாதம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள பாகிஸ்தானுக்கு எதிரான 3 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரில் இருந்து அவர் விலகியுள்ளார். அத்துடன் ஒருநாள் தொடரையடுத்து நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரிலும் அவர் பங்கேற்பது சந்தேகமாகியுள்ளது. (ரி)

# மாத இறுதிக்குள் புதியபயிற்சியாளர்

Sri Lanka Cricket

இலங்கை கிரிக்கெட் அணியின் நிரந்தர பயிற்சியாளர் இந்த மாத இறுதிக்குள் அறிவிக்கப்படுவார் என இலங்கை கிரிக்கெட் அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷ்லி டி சில்வா தெரிவித்துள்ளார்.

15 பேர் விண்ணப்பித்திருந்த அணியின் நிரந்தர பயிற்சியாளருக்கான பட்டியலில் இருந்து 9 பேர் இறுதிப் பட்டியலிற்கு தெரிவாகியுள்ளனர். இவர்களில் மார்வன் அத்தப்பத்து மாத்திரமே இலங்கையை சேர்ந்தவர் எனத் தெரியவருகிறது.

இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷ்லி டி சில்வா தெரிவிக்கையில், விண்ணப்பதாரிகளுடன் ஸ்கைப் தொழில்நுட்பத்தின் உதவியுடன் பேசியதாகவும், அதன் பின்னரே இறுதிப் பட்டியல் தயாரிக்கப்பட்டதாகவும், அடுத்த கட்ட சந்திப்பிற்காக சிலர் நேரடியாக அழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் இந்த வார இறுதிக்குள் சகல நடவடிக்கைகளும் நிறைவுக்கு வரும் எனவும், நிரந்தர பயிற்சியாளர் இந்த மாத இறுதிக்குள் அறிவிக்கப்படுவார் எனவும் அவர் தெரிவித்தார். (ரி)

# றொனால்டினோவை குரங்கு என்று விமர்சித்த அரசியல்வாதி



உதைபந்து வீரர் றொனால்டினோவை, வாலில்லாக் குரங்கு என்று இனவெறியுடன் பேசியுள்ளார் மெக்சிகோவைச் சேர்ந்த கார்லோஸ் மானுவல் டிரெவினோ நூனஸ் என்ற அரசியல்வாதி. இதனால் இவருக்கு கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளதுடன் அவரைக் கடுமையாக தண்டிக்க வேண்டும் என்று சமூக வலைத்தளங்களில் எதிர்ப்புக் குரல்கள் எழுந்துள்ளன.

மெக்சிகோ நகரத்தில் உள்ள குரடெரோ உதைபந்துக் கழகத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் றொனால்டினோ கலந்து கொண்டார். இதன்போது அவரைக் காண பெரும் கூட்டம் கூடியதனால் வீதிகளில் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது.

இதுகுறித்து நூனஸ் தனது முகப் புத்தகத்தில் கூறுகையில், நான் உதைபந்தை வெறுக்கிறேன். என்னால் அதை சகித்துக் கொள்ள முடியவில்லை. இந்த விளையாட்டுக்காக போக்குவரத்தையும் கூட பலர் பாதிக்கிறார்கள். வெள்ளமாகக் கூடுகிறார்கள். நான் வீட்டுக்குச் செல்ல 2 மணி நேரம் தாமதமாகிவிட்டது. எல்லாம் ஒரு மனிதக் குரங்கால் வந்த வினை. பிரேசில் நாட்டைச் சேர்ந்த அந்த வாலில்லாக் குரங்கு தான் இதற்கு காரணம் என்று அநாகரீகமாக பதிவிட்டிருந்தார்.

நூனஸின் இந்த பேச்சுக்கு தற்போது கடும் கண்டனங்கள் கிளம்பியுள்ளன. குறித்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்த உதைபந்துக் கழகமும் அவரைக் கடுமையாக கண்டித்துள்ளதுடன், மிகக் கடுமையாக தண்டிக்க வேண்டும் என்று அது அழைப்பு விடுத்துள்ளது. (ரி)

## இன்றைய CLT-20 ஆட்டம்

இரவு 8 மணி

கிங்ஸ் லெவன் பஞ்சாப் VS ஹோபேட் ஹரிகேன்ஸ்

# விதானகேக்கு ஒரு வருட போட்டித்தடை



இலங்கை வீரர் கித்ருவான் விதானகே மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு ஒருவருட கால ஒத்திவைக்கப்பட்ட போட்டித் தடையை இலங்கை கிரிக்கெட் சபை விதித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் வீரரான கித்ருவான் விதானகே இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டத்தின் பின் அணியின் பெண் செயலாளர் அறையில் தங்கியதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒழுக்காற்று குழுவின் விசாரணையில் வீரர்கள் தங்குமிடத்தை விட்டு அனுமதி இன்றி வெளியே சென்ற குற்றம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கு தண்டனையாக குறித்த ஆட்டத்தின் சம்பளம் முழுவதும் அபராதமாக அறிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, கடுமையாக அவர் எச்சரிக்கப்பட்டு ஒருவருடகால ஒத்திவைக்கப்பட்ட போட்டித் தடையை விதித்து இலங்கை கிரிக்கெட் சபை உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் குறித்த காலப் பகுதியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டால் அவர் கடுமையாக தண்டிக்கப்பட வாய்ப்புகள் உள்ளன. (ரி)

# சம்பியன் லீக்கிலிருந்து வெளியேறியது மும்பை



நடைபெற்று வரும் சம்பியன் லீக் ரி- 20 தொடரின் இறுதி தகுதி ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை நோர்தன் டிஸ்ரிக்ஸ் அணி 6 இலக்குகளால் தோற்கடித்தது. இதனால், மும்பை இந்திழியன்ஸ் அணி சம்பியன் லீக் தொடரின் தகுதிச் சுற்றோடு தொடரி லிருந்து வெளியேறியது.

நேற்று முன் தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நோர்தன் டிஸ்ரிக்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதனையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி சார்பில் தொடக்க ஆட்டக்காரர்களாக சிம்மன்ஸ், ஹஸியும் களமிறங்கினர். நோர்தன் டிஸ்ரிக்ஸ் அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள சிரமப்பட்ட சிம்மன்ஸ் 13 ஓட்டங்களிலும், ஹஸி 7 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்க, தொடர்ந்து உள்நுழைந்த சக்சேனா, ராயுடு, ரெயர் ஆகியோரும் அடுத்தடுத்து வெளியேறினர். பின்னர் களமிறங்கிய பொலாட் 31 ஓட்டங்களையும், கோபல் 24 ஓட்டங்களையும், மலிங்க 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க மும்பை அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது.

133 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய நோர்தன் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் 83 ஓட்டங்களை தமக்கிடையே பகிர்ந்து கொண்டனர். டெவ்சிச் 39 ஓட்டங்களையும், வில்லியம்சன் 53 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். பின்னர் வந்த வீரர்கள் சொதப்பிய போதிலும் வெற்றிக்கு மேலதிகமாக குறைவான ஓட்டங்களே தேவைப்பட்டதால், 17.2 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது நோர்தன். ஆட்டநாயகனாக பந்து வீச்சில் அசத்திய ஸ்ரைரிஸ் தெரிவானார்

ஏற்கனவே லாகூர் அணியிடம் தோல்வியுற்ற மும்பை அணி, இந்தத் தோல்வியுடன் சம்பியன் லீக் தொடரின் தகுதிச்சுற்றோடு தொடரிலிருந்து வெளியேறியது. (ரி)

# பாகிஸ்தானில் உலகக்கிண்ணம்

அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணக் கிரிக்கெட்தொடரின்வெற்றிகிண்ணம் பாகிஸ்தானின் லாகூரைச் சென்றடைந்தது.

1992ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆஸ்திரேலியா-நியூஸிலாந்தில் இரண்டாவது தடவையாக உலகக் கிண்ணத் தொடர் நடைபெற உள்ளது. 1992ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணி சம்பியன் ஆனது. இறுதிப் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி உலகக் கிண்ணத்தை முதன் முதலில்கைப்பற்றியதுபாகிஸ்தான். அந்த நினைவாக தற்போது வெற்றிக் கிண்ணம் பாகிஸ்தானுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. பாகிஸ் தான் சுதந்திர நினைவுச் சின்னம் அருகே அணித்தலைவர் மிஸ்பா உலகக் கிண்ணத்தைப் பெற்றார். சுதந்திர நினைவுச் சின்ன இடத்திலி ருந்து லாகூர் கடாபி விளையாட்டு மைதானத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டு, பின்னர் கராச்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டது.

இதன் போது மிஸ்பா தெரிவிக்கையில், உலகக் கிண்ணத் தொடருக்காக அனைத்து அணிகளும் தம்மை தயார்ப்படுத்தி வருகின்றன. இந்தச் சவாலுக்கு பாகிஸ்தான் அணியும் தங்கள் தரப்பில் கடுமையாக தயாரிப் பில் ஈடுபட்டுள்ளது. ஆஸ்திரேலியா - நியூஸிலாந்தில் உலகக் கிண்ணத் தொடர் நடைபெறுவதால் அங்கு நடப்பு சம்பியன் என்றிருந்த அணி என்ற முறையில் பாகிஸ்தான் மீது அதிக எதிர்பார்ப்பு உள்ளது. பாகிஸ்தான் ரசிகர்கள் ஆதரவுடன் இந்த முறையும் உலகக்கிண்ணத்தைக் கைப்பற்ற பாடுபடுவோம் என்று மிஸ்பா தெரிவித்தார். (ரி)

## தொடர்ச்சிகள்

### ஆமை

ஸாரால் கைதுசெய்யப்பட்ட குறித்த நபர் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அதன்போது நீதிபதி எம்.ஐ.வகாப்தீன் குறித்த நபருக்குத் தண்டம் விதித்துடன், ஆமைகளை குளத்தில் விடும்படியும் உத்தரவிட்டார். (ற-18)

### ஆபத்து

காலத்தில் ஐஸ்கிறீம் மாதிரிகள் பெறப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்று உதயன் அறிந்தான். உற்பத்தி மற்றும் விற்பனையில் முன்னணியில் இருக்கும் மூன்று நிறுவனங்களின் தயாரிப்புகள் மீதே அதிக கவனம் செலுத்தப்பட்டது என்றும் தெரிகிறது.

ஒரு லீற்றர் குடிதண்ணீரில் ஒரு கோலி போர்ம் பக்ரீறியா இருந்தால்கூட அது மனித நுகர்வுக்கு உதவாதது என்று புறந்தள்ளப்படுகிறது. ஆனால் சோதனை செய்யப்பட்ட ஐஸ்கிறீமிலோ லீற்றருக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோலி போர்ம் பக்ரீறியா இருந்தமை சோதனையில் கண்டறியப்பட்டது. சோதனை குறித்த முழுமையான அறிக்கை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குக் கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டது.

நல்லூர் திருவிழாக் காலத்தில் நாம் மாதிரிகளைப் பெற்றோம் என்று கூறுவது தவறு. மாவட்டம் முழுவதிலும் உள்ள 10 ஐஸ்கிறீம் கடைகளில் மாதிரிகளைப் பெற்றோம். அவற்றில் பக்ரீறியாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்றார் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன்.

குறித்த ஐஸ்கிறீம் தயாரிப்பு நிறுவனங்கள் அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் ஊடாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். ஆனால் உரிய நடவடிக்கை என்ன என்பதை அவர் விளக்கவில்லை.

இலங்கையிலேயே நெருப்புக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை யாழ். மாவட்டத்திலேயே மிக அதிகமாக உள்ளது. அதற்கு மலத் தொற்று உள்ள ஐஸ்கிறீம்களும் ஒரு காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. கடந்த ஐந்து வருடங்களாக இலங்கையில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு நெருப்புக் காய்ச்சலால் யாழ். மாவட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. அப்படி இருந்தபோதும் மலத் தொற்று ஏற்பட்டுள்ள ஐஸ்கிறீம் வகைகளைத் தடைசெய்யவோ அவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கவோ உரிய அதிகாரிகள் முன்வராமை கவலை அளிக்கிறது என்று குடாநாட்டின் புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர். சில வருடங்களுக்கு முன்னரும் யாழ். நகரில் உள்ள ஒரு பிரபல ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனத்தின் தயாரிப்புகளில் இவ்வாறு மலத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டபோதும் அந்த நிறுவனம் தொடர்ந்தும் தயாரிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட அனுமதிக்கப்பட்டது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அதிகாரிகளின் இத்தகைய அசமந்தப் போக்கு யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையை தேவையற்ற அபாயங்களுக்குள் தள்ளிவிடுகின்றது என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர். (உ-5)

### நவம்பர் 13

மாதங்களின் பின்னர் யாழ்ப்பாணத்துக்கான சேவையை யாழ்.தேவி ஆரம்பிக்கவுள்ளது. பளையிலிருந்து, யாழ்ப்பாணம் வரையிலான ரயில் சேவை எதிர்வரும் 13 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

1956 ஆம் ஆண்டு யாழ்தேவி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின்னர் 1990 ஆம் ஆண்டு ஜீன் 12 ஆம் திகதி முறிகண்டிப் பகுதியில் வைத்து யாழ்தேவி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து ரயில் சேவை நிறுத்தப்பட்டது.

போர் முடிவுற்ற பின்னர் இந்திய அரசால் 183 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் வடக்குக்கான ரயில் பாதைகள் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகள், 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகியிருந்தது. கடந்த 2012 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி, யாழ்தேவி, கொழும்பிலிருந்து ஓமந்தை வரையில் தனது பயணத்தை ஆரம்பித்தது.

அதன் பின்னர் கடந்த ஆண்டு செப்ரெம்பர் 14 ஆம் திகதி, கிளிநொச்சியை யாழ்தேவி வந்தடைந்தது. இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் பளை வரையில் சேவை நீடிக்கப்பட்டது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் வரையில் யாழ்தேவி எதிர்வரும் 13 ஆம் திகதியிலிருந்து பயணிக்கவுள்ளது. (ந-5)

### மனித உரிமை

உரிமை ஆணையாளரின் அறிக்கையை நாங்கள் வரவேற்கிறோம். உலகம் முழுவதிலுமுள்ள மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு பாது காப்பை வழங்கவேண்டியதும், ஐ.நாவுடன் ஒத்துழைப்பவர்களுக்கான பாதுகாப்புப் பொறிமுறைகளை வலுப்படுத்துவதும் அவசியம்.

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைகளுடன் இலங்கை அரசு ஒத்துழைக்காதது துரதிர்ஷ்டவசமானது. மேலும், அரசு இந்தப் பொறிமுறையின் முன்னால் சாட்சியமளிக்க முன் வருபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படலாம் என்ற அச் சத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

அரச கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களும், ஆளும் கட்சி யுமே இந்த அச்சுறுத்தலுக்குப் பிரதான காரணம்.

அரசசார்பற்ற அமைப்புகளின் செயலகத்தின் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட உத்தரவு, கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் என்பவற்றிற்கு மேலும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

அரசை ஜனநாயகக் கொள்கைகளையும், சட்டத்தின் ஆட்சியையும் பின்பற்றுமாறும், காணாமற்போனவர்கள் தொடர்பாகவும், போரின் இறுதித் தருணங்களில் இடம்பெற்ற பெரும் மனித உரிமை மற்றும் சர்வதேச சட்டமீறல்கள் குறித்தும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் கோரும் அரசசார்பற்ற அமைப்புகளைத் தாக்கி, செயலிழக்கச்செய்து அழிப்பதே இலங்கை அரசின் தெளிவான நோக்கம்.

இலங்கையின் ஏதேச்சதிகாரத்தை எதிர்ப்பதால் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள அதே வேளை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையகத்தின் தீர்மானத்தை நிறைவேற்ற பணியாற்றும் மனித உரிமை பணியாளர்கள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள் உட்பட்டோரின் பாது காப்பை உறுதி செய்வதற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவைக் கோருகின்றோம்" - என்றார். (ற-சி)

### தம்புள்ளை

வடிக்கைகள் தொடர்பில் 2014-04-23 ஆம் திகதி இப்பள்ளியால் ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

அந்த முறைப்பாட்டுக்குப் பிறகும் பல சம்பவங்கள் இப்பள்ளிக்கு எதிராக இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில்தான் இம்மாதம் 15ஆம் திகதி இப்பள்ளிக்கு எதிராக குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதுவரை இதுபோன்று ஐந்து குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்றும், பள்ளியை உடைப்பதற்குப் பல்வேறு வகை யான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்றும் தெரிவிக்கும் தம்புள்ளை பள்ளிவாசல் நிர்வாகம் இந்தச் சம்பவங்கள் அனைத்தையும் தொகுத்து மீண்டும் இரண்டாவது தடவையாக ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவிடம் முறையிடத் திட்டமிட்டுள்ளது.

பள்ளியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசியல் தலைவர்கள் அனைவரிடமும் முறைப்பாடு செய்தும் அது தொடர்பில் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. பொலிஸில் செய்யப்பட்ட பல முறைப்பாடுகள் தொடர்பிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை; சூத்திரதாரிகள் கைதுசெய்யப்படவில்லை.

இந்நிலையில், சர்வதேசத்தின் உதவியை நாடுவதே பள்ளியைக் காப்பாற்ற இனி சிறந்த வழியாக இருக்கும் என்று பள்ளி நிர்வாகம் நம்புகிறது. ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவின் புதிய ஆணையாளர் இது தொடர்பில் கவனம் செலுத்தி நீதியைப் பெற்றுத்தருவார் என பள்ளி நிர்வாகம் நம்புகிறது.

இன்னும் ஓரிரு நாட்களில் இந்த முறைப்பாடு செய்யப்படும் என பள்ளி நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ற-சி)

### கிடப்பில்

வொரு பயனாளியும் பெற்றுக் கொள்ளும் வகையிலேயே ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் திருத்தியமைக்கப்பட்ட சுற்றறிக்கையினூடாக, வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியில் அங்கத்துவம் பெற்று மூன்று மாதங்கள் கடந்தவர்களுக்கே கடன் திட்டம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

நுகர்வுக் கடனாக 5 ஆயிரம் ரூபாவும், வாழ்வாதாரக் கடனாக 50 ஆயிரமும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது வாழ்வாதாரக் கடனான 50 ஆயிரம் ரூபாவை, பயனாளியின் கருத்திட்டத்தை சரியான முறையில் இனங் கண்டு பகுதி பகுதியாகவே வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல சமுர்த்தி வங்கிகளாலும் ஒதுக்கத்தின் அடிப்படையில் சேர்த்த நிதியையே கடன் வழங்க பயன்படுத்துமாறு கொழும்பு அரசு அறிவித்துள்ளது. யாழ்.மாவட்டத்தில் 90 ஆயிரம் சமுர்த்தி பயனாளிகள் உள்ளனர். ஆனால் சமுர்த்தி வங்கிகளால் ஒதுக்கத்தில் உள்ள நிதி 420 மில்லியன் ரூபா மாத்திரமே. அதனைப் பயன்படுத்தி முழுப் பயனாளிகளுக்கும் வழங்க முடியாது. அத்துடன் இந்தத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் 800 பயனாளிகளுக்கு கடன் திட்டம் வழங்குவதற்காக 20 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

பெருமளவான சமுர்த்திப் பயனாளிகள் கடன் திட்டத்துக்கு விண்ணப்பித்து இரண்டு வாரங்கள் கடந்துள்ள போதும், அவர்களுக்கான கடன் இன்னமும் வங்கியால் வழங்கப்படவில்லை. அரச அமைச்சர் ஒருவர் வழங்கிய பணிப்பின் பேரிலேயே அந்தக் கடன்கள் இன்னமும் வழங்கப்படாமல் இருக்கின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)


## மரண அறிவித்தல்

### அப்பையா செல்வரத்தினம் (செல்வம்)



கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கட்டட ஒப்பந்தக்காரர் அப்பையா செல்வரத்தினம் (செல்வம்) நேற்று (17.09.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா - லக்ஷ்மி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகமுத்து மற்றும் கனகம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற அருந்தவம் அவர்களின் அன்புக் கணவரும் தம்பித்துரை, பூமா தேவி, இராசேந்திரம், காலஞ் சென்றவர்களான தவராசா, சந்திரன் மற் றும் விஜயராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தெய்வேந்திரம், தங்கராசா, மகேந்திரன், வைந்தவராசா, காலஞ்சென்ற சற்குணபாலா, மற்றும் செல்வராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18.09.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
மைத்துனர்கள்
சகோதரர்கள்.

(52363)(08)

## கண்ணீர் அஞ்சலி



எமது தாயாரின் அன்புச் சகோதரன்
**அப்பையா செல்வரத்தினம்**
**(செல்வம்)**
அவர்களின் ஆத்ம சாந்திக்காக
பிராா்த்திக்கின்றோம்.

**மருமக்கள்:**
த.விஜயசீலன்(கட்டிட ஒப்பந்தக்காரர்)
த.உதயசீலன்(ஜேர்மனி), த.சுபாஷினி(ஜேர்மனி),
த.சுனிதா(லண்டன்), த.மயூரன்(இந்தியா)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வதி நவரட்ணம்

வேலணை கிழக்கு 3ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கொழும்பு நாகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வதி நவரட்ணம் காலமாகிவிட்டார்.

காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நவரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தயாநிதி மற்றும் மோகனதாஸ்(கொழும்பு) ஆகியோரின் தாயாரும் லலிதா தேவியின் மாமியாரும் ரிசாந்(பிரான்ஸ்) சாந்துஷா (யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பேத்தியாரும் காலம் சென்றவர்களான துரைராசா, குலசேகரம், அமிர்தகௌரி, செல்வநாயகம் மற்றும் புனிதவதி, தெய்வேந்திரம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சாரதாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2014) வியாழக்கிழமை கொழும்பு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
கோப்பாய் வடக்கு
கோப்பாய்.

நிரந்தர முகவரி:
வேலணை கிழக்கு

தகவல்:
சகோதரன்
தெய்வேந்திரம்
T.P : 077 011 1029

# கல்முனை கரையோரப் பகுதியில் ஒளிர மறுக்கும் மின் விளக்குகள்

கல்முனை, செப். 18
கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது ஜமாஹிரியா வீதி, ஒராபிபாஷா வீதி, காரியப்பர் வீதி ஆகிய வீதிகளின் கரையோரத்தை அண்டிய பிரதேசங்களிலும் கடற்கரை வீதியிலும் இரவு வேளையில் மின் விளக்குகள் ஒளிராமல் உள்ளதால் பிரதேச வாசிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

சாயந்தமருது கரையோரப் பிரதேசமக்கள் கடற்றொழிலை பிரதான தொழிலாக செய்து வரும்நிலையில் இரவுவேளைகளில் தூர இடங்களிலிருந்து கடற்கரைக்கு வரும்போது இருள் சூழ்ந்து காணப்படுவதால் கடற்றொழிலாளர்களும் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

அன்றாடத் தேவைகள் நிமித்தம் அயல் கிராமங்களான பாண்டிருப்பு, காரைதீவு பிரதேசங்களிலுள்ள மக்களும் இந்த கடற்கரை வீதியை இரவு வேளைகளில் பயன்படுத்தி வருகின்றனர். மேற்குறித்த இரு ஊர்களுக் குமான இலகு போக்குவரத்து வசதியான இந்தக் கடற்கரை வீதியில் இவர்கள் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் திருடர்களின் தொல்லை, போதை வஸ்து பாவனை என்பன இந்தப் பிரதேசத்தில் அதிகமாக இருப்பதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, குறித்த பிரதேசத்தின் மின் விளக்குகளை தொடர்ச்சியாக ஒளிரச் செய்யவேண்டிய பொறுப்பு கல்முனை மாநகர சபைக்கு உண்டு.

இந்த விடயத்தில் கல்முனை மாநகர முதல்வர் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-10)

# 63 குடும்பங்களுக்கு உருளைக்கிழங்கு

யாழ்ப்பாணம், செப்.18
நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 63 குடும்பத்தினருக்கு உருளைக்கிழங்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப்பொருள்கள் வழங்கும் நடவடிக்கை யின்கீழ் கடந்தகால வறட்சியால் பாதிக்கப்பட்ட, தெரிவு செய்யப்பட்ட 63 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்துக்கு தலா 5 கிலோ உருளைக் கிழங்கு வழங்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார். (வ-7)

## கூட்டுறவாளர் தின விழா

யாழ்ப்பாணம்.செப்.18
யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை நடத்தும் 92 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின விழா எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வீரசிங்கம் மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

சபையின் தலைவர் தி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடமாகாண உள்ளூராட்சி கூட்டுறவு கைத்தொழில் சமூகநலத் துறை அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் கே.சுசீந்திரன், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

நிகழ்வில் கூட்டுறவாளர்கள் கௌரவிப்பு, பரிசில்கள் வழங்கல் என்பன இடம் பெறும். (வ-17)

**வேலையாள்கள் தேவை**
கொழும்பில் உள்ள பிரபல சலூன் ஒன்றுக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை.
தொடர்பு: ராஜ் (52354)(5.6)
076 767 3111 / 077 676 3436

**Regal Rent A Car**
நாளாந்த மற்றும் மாதாந்த அடிப்படையில் கார் வாடகைக்கு உண்டு.
(52356)(5.6)
தொடர்பு 077 583 4770

**மென்பந்து சுற்றுப்போட்டி - 2014**
**(20.09.2014)**
நாம் நண்பர்கள் அமைப்பினால்
வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சி நிதி நோக்குடன் நடைபெறும்
மென்பந்து சுற்றுப்போட்டி
**விளையாட்டுக்கான நிபந்தனைகள்**
☆ 6 பேர் பங்குபெறும் 5 பந்து பரிமாற்றம் கொண்ட போட்டி.
☆ ஒருவர் ஒரு பந்து பரிமாற்றம் மட்டுமே வீச முடியும்.
☆ தங்கள் அணிக்கு ஒதுக்கிய நேரத்துக்குள் மைதானத்துக்குள் வருகைதர வேண்டும். (15 நிமிடத்திற்கு பின் எதிர் அணிக்கு வெற்றி வழங்கப்படும்)
☆ நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
தொடர்புகளுக்கு :
072 217 5053, 076 658 2083
பிரதான அனுசரணையாளர்கள் :
ஞானோதயம் கல்வி நிலையம் & Sports World
இடம் : யா/இந்துக் கல்லூரி மைதானம்
(C/16264)(7.6.3)

## கண்ணீர் அஞ்சலி



தெல்லிப்பழையில் புற்றுநோய் வைத்தியசாலை கட்டுவதற்கான காணியின் ஒருபகுதியை அன்பளிப்பாக வழங்கிய
**அ.மாணிக்கசோதி**
ஐயாவின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை சமூகம்**
(52359) (45.6.3)

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திருமதி கோகுலவதனி வீரசிவேஸ்வரன்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி பொன்மணி சுப்பிரமணியம்**
கடந்த ஞாயிற்றுக்கிழமை (14.09.2014) இயற்கை எய்தியுள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்,
**பிரதேச செயலகம், நல்லூர்.**
(52350)(7.6.3)

## மரண அறிவித்தல்

### கந்தன் கதிரவேலு

(ஓய்வுபெற்ற இயந்திர பொறியியலாளர் வடபிராந்திய போக்குவரத்துச்சபை)



பாலிவெட்டை கரணவாய் கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் கதிரவேலு 15.09.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.09.2014) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய்கிழக்கு,
கரவெட்டி. (9/16262)(7.6.3)
தகவல்: **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி ருக்குமணிதேவி இராசலிங்கம்



காரைநகர் பலகாடு, நாராயணகேணியடியைப் பிறப்பிடமாகவும், தற்போது திருநெல்வேலி ஆடியபாதம் வீதி, கேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ருக்குமணிதேவி இராசலிங்கம் 16.09.2014 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் (பாலத்துறை) சுப்பிரமணியம் இராசலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற (பாலத்துறை) சுப்பிரமணியம் தம்பதியரின் மருமகளும், புனிதமலர், தவராசா, தவரூபன், தவபாலன், காலஞ்சென்ற புஸ்பமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவிராஜசிங்கம், பரிமளாதேவி, மதிவதனி, தனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரசாந்தன், பிரவீனன், காயத்திரி, ஹம்சாயினி, விபிஷா, அபிநயா, அஸ்விகா, அஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2014) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
கேணியடி, திருநெல்வேலி. (52353)(7.6.3)
தகவல்: **சு.இராசலிங்கம்**

## மரண அறிவித்தல்

### திருமதி மேரிடொறற்றா (சுசிலா) மரியதாஸ் அன்ரன்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் சில்லாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிடொறற்றா மரியதாஸ் அன்ரன் 16.09.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்கராயர் மற்றும் அருளம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், அந்தோனிப்பிள்ளை-செபஸ்ரியானா (கனடா) தம்பதியரின் அன்பு மருமகளும், மரியதாஸ் அன்ரனின் அன்பு மனைவியும், அன்ரனீற்றா, அஸ்வின் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற லூர்துமேரி மற்றும் லீனஸ் யோசப் (இத்தாலி), ஜெயதாஸ், விமலராணி, சகாயராணி, யோசப் ஜெயபால் (UK), மேரி சறோஜினி (ஜேர்மனி), ஜெகநாதன் (நெதர்லாண்ட்), மேரிஜெனிலா (UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இமெல்டா (UK), மேரி மெற்றில்டா (UK), நொய்லின் நீலா (UK) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக 20.09.2014 சனிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர் பண்டத்தரிப்பு புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


சில்லாலை வடக்கு, சில்லாலை.
T.P : 077 736 3682, 021 791 4038 (52355)(7.6.3)
தகவல்: **கணவர்.**

# அம்பலவன் பொக்கணை ம.வியின் பரிசில் நாள்

முல்லைத்தீவு, செப். 18
முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணை மகா வித்தியாலய பரிசில் நாள் விழா நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு இடம்பெறும்
அப்பகுதியைச் சேர்ந்த கலாநிதி துரைசிங்கம் குமரநாதனின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட 12.5 அடி உயரமான சரஸ்வதி சிலை திறப்பு விழாவும் இடம்பெறும்.
வித்தியாலய அதிபர் சி.ஏகாம்பரம் தலைமையில் நடைபெறும் இரு நிகழ்வுகளுக்கும் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் கலந்து கொள்வார்.
நிகழ்வுகளையடுத்து மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

(த-9)

# தைபொயிட் காய்ச்சல்



சில பருவ காலங்களில் பெரும்பாலானோரை தாக்கும் நோயாக தைபொயிட் காய்ச்சல் உள்ளது.
மனித உடலில் மட்டும் வாழக் கூடிய 'சல்மொனெல்லா டைபி' பக்றீரியாக்களே இந்தக் காய்ச்சலை ஏற்படுத்துகின்றன. இந்த நோய் கிருமிகள் ஒரு மனித உடலுக்குள் சென்றதும், பல்கிப் பெருகுவதுடன், குருதிச் சுற்றோட்டத்தில் கலந்து காய்ச்சலையும் ஏற்படுத்துகின்றன.
சில அறிகுறிகளை வைத்து இந்தக் காய்ச்சலை அறிந்து கொள்ள முடிகிறது. உடல் வெப்பநிலை 103 பாகைக்கு மேல் இருக்கும். தலையில் அதிகமான வெப்பம் இருக்கும். தலையில் அதிக வெப்பம் காரணமாக தலைவலியும் ஏற்படும். சில நோயாளிகளுக்கு உடலில் சிவப்பு நிற திட்டுக்கள் ஏற்படுகின்றன. இவ்வகைப் பக்றிரியாக்கள் குருதிச் சுற்றோட்டத்திலும் குடற்பாகங்களில் காணப் படும். இதனால் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வயிற்று வலி, வயிற்றுப் போக்கு ஏற்படுகிறது.
அத்துடன் நோய் வாய்ப்பட்ட நபர்களின் மலத்தின் மூலம் வெளியேறும் சல்மொனெல்ல டைபி பக்றீரியாக்கள் நோயை ஏனையவர்களுக்கும் பரப்புகின்றன. குறித்த பக்றீரியாவை வெளியேற்றும் நபர்கள் கையாண்ட உணவு அல்லது பானங்களை ஒருவர் உட்கொள்ளும் போதோ அல்லது பக்றீரியாக்கள் கலந்த நீரை ஒருவர் குடிப்பதற்கோ அல்லது உணவுப் பொருட்களை கழுவப் பயன்படுத்தும் போதோ அவர்களுக்கும் இந்த காய்ச்சல் ஏற்படக் கூடும். கழிவுநீர் மூலமும், இந்நோய் தாக்கியுள்ள ஒருவர் அளிக்கும் உணவை சாப்பிடுவதன் மூலமும் இந்நோய் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.
எனவே, சுகாதாரமான பழக்க வழக்கங்களும், சுத்தமான காய்ச்சி வடிகட்டிய தண்ணீரை குடிக்கும் பழக்கமும் தைபொய்ட்டில் இருந்து தற்காத்துக் கொள்ள வழிவகுக்கும்.


## கடை விற்பனைக்கு

யாழ். நகர் மத்தியில் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சகல வியாபாரங்களுக்கும் பொருத்தமான கடை விற்பனைக்குண்டு. (தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்)
தொடர்பு: 0777 608 930 (51263) (10)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, டச்சு வீதி, மண்டுவில் காளி கோயிலுக்கு முன்னாலுள்ள 5 பரப்பு பயன்தரு மரங்களுடன் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:077 940 1614 (டி/16267)(3.6)


## வாடகைக்கு உண்டு

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அருகில் 2000 சதுர அடி பரப்பளவில் புத்தம் புதிய நல்ல முறையில் பிரிப்பு (Partion) செய்யப்பட்டு 5 வருடங்கள் சிறப்பாக இயங்குகின்ற பிரபல கணினி நிறுவன உரிமையுடன் வாடகைக்கு விடப்படும். 200 மாணவர்கள் ஒரே நேரத்தில் அமர்ந்து கல்வி கற்கக்கூடிய வசதி, 3 விரிவுரையாளர்கள் அறை, நூலகம், வரவேற்பாளர் அறை, மாணவர் முகாமைத்துவ அறை, நிர்வாக இயக்குநர் அறை, கணினி ஆய்வுகூடம் 2, பணியாளர்கள் சாப்பாட்டு அறை மற்றும் கணினிகள், Photo copy Machine, AC 3, Security cams, Projector மேலும் அலுவலக பாவனைக்குரிய சகல தளபாடங்களும் உண்டு.
தொடர்பு: 075 813 7274 (சி/16266) (7.6.3)


## Hatton National Bank
## அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், மானிப்பாய், கைதடி, திருநெல்வேலி, சங்கானை, கிளிநொச்சி வடக்கு, கிளிநொச்சி தெற்கு, அச்சுவேலி, கொடிகாமம், முள்ளியவளை, மல்லாவி, நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, முல்லைத்தீவு, வேலணை ஆகிய கிளைகளில் 31.08.2013 இற்கு முன்னர் அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 22.09.2014 தொடக்கம் 26.09.2014 (திங்கள்-வெள்ளி) வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ் கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.
ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.
(C/15270)(7.6.3)
ஹற்றன் நஷனல் வங்கி

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## மரண அறிவித்தல்



### தம்பிப்பிள்ளை நவரத்தினம்

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும், புகையிரத நிலைய வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும், தற்போது வெள்ள வத்தையில் வசித்து வந்தவருமான தம்பிப்பிள்ளை நவரத்தினம் நேற்று (17.09.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-பொன்னரியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி -செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், பவனச்சந்திரன் (லண்டன்), சூரியப்பிரகாஷ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயராணி (லண்டன்), குமுதினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனா ரும், சர்மிலன் (லண்டன்), சஞ்ஜீவ் (லண்டன்), சுவாதி (லண்டன்), தர்ஷிகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென் றவர்களான நடராஜா, பூபாலபிள்ளை, நல்லதம்பி, பூரணம், நேசம்மா, வெற்றிவேல், தங்கம்மா, இரத்தினசபாபதி, குலசிங்கம், துரைசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 20.09.2014 சனிக்கிழமை மற்றும் 21.09.2014 ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாள்களில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 21.09.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இறுதிக்கிரியை கள் இடம்பெற்று பிற்பகல் 1.00 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
077 630 3553,
077 813 9317 (7.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பி சின்னத்தங்கம்



கருகம்பனை காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் சுழிபுரம் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பி சின்னத்தங்கம் நேற்று (17.09.2014) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற தம்பியின் மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா, விஸ்வநாதன், காசிப்பிள்ளை, அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு சகோதரியும், நிர்மலா தேவி, காலஞ்சென்ற சண்முகரத்தினம் மற்றும் சந்திர பாலன், திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு தாயாரும் சிவகுமாரன், பவளராணி, விஜயலட்சுமி, சிவானந்தி ஆகியோரின் மாமியாரும் செந்தூரன், செந்தீபன், காலஞ்சென்ற சிவாஜினி மற்றும் லட்சிகா, லக்ஷன், சிந்துஜா, சஞ்சீவன், றொசானி, அனோஜன், தாரணி, தரணிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2014) வியாழக்கிழமை 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் (சுழிபுரம் மத்தி) இடம்பெற்று பூதவுடல் கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகன் திருநாவுக்கரசு
077 34 37 701

## தொடர்ச்சிகள்

### நாங்கள்

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

10 வருடங்களுக்கு முன்னர் மக்கள் தாங்கள் சிங்களபௌத்தர்கள் என சொல்வதற்கே தயங்கினர். நான் அவ்வாறு சொன்ன வேளை பலர் என்னை கழிந்து கொண்டனர். யாரும் துட்ட கைமுனுவை நினைவுகூர விரும்பவில்லை,

தர்மபால மீதும் இனவாதி என்ற முத்திரை குத்தப்பட்டது. ஆனால் அதனை நாங்கள் மாற்றியுள்ளோம்.

நாட்டுக்கு முதுகெலும்பை நாங்கள் வழங்கியுள்ளதால் இன்று மன்னர் குறித்தும் வரலாறு பற்றியும் திரைப் படங்கள் எடுக்கப்படுகின்றன. ஏனைய நாடுகளுடன் சமமாக நிற்க கூடிய பெருமித உணர்வை நாங்கள் தேசத்துக்கு வழங்கியுள்ளோம்.

இலங்கையின் மிக இருண்ட யுகத்தின்போது அநகாரிக தர்மபால, சிங்கள பௌத்தர்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்துவதற்காக அயராது பாடுபட்டார். சுதந்திரம் குறித்து நினைத்துப் பார்ப்பதற்கே வாய்ப்பில்லாத ஒரு சூழலில் அவர் இதனை செய்தார். அந்த வேளையில் இலங்கையில் அரசியற் கட்சிகள் என்று எதுவுமிருக்கவில்லை. அரசியல் குழுக்கள் உருவாவதற்கான சிறிய அறிகுறி கூடத் தென்படவில்லை.

ஒரு பக்கத்தில் அந்நியர் ஆக்கிரமிப்பு மறுபக்கத்தில் அறியாமையும் அடிமைத்தனமும் நிறைந்த மக்கள் என்ற சூழ்நிலையில் வாழ்ந்த அநகாரிக தர்மபாலா இலங்கையர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை தோற்றுவிப்பதில் வெற்றிகண்டார். இதன் மூலம் அவர்கள் ஓரளவு சுதந்திரமாக வாழக்கூடிய நிலையை ஏற்படுத்தினார்.

ஒரு தேசத்தின் பலவீனங்களை அகற்றுவதே சுதந்திரத்திற்கான சிறந்த வழி என்பது அவருக்கு தெரிந்திருந்தது. ஒரு தேசத்தை குழப்புவதன் மூலமாக, பலவீனப்படுத்துவதன் மூலமாக ஒரு தேசத்தை உயர்த்த முடியாது மாறாக தன்னுடைய தேசத்தைப் பலப்படுத்துவதன் மூலமே அதனை சாதிக்கலாம் என அவர் நம்பினார்.

சிங்களவர்களே மிகப்பெரியவர்கள், அவர்களே இந்த மண்ணில் வாழவேண்டும் என அவர் ஒருபோதும் தெரிவிக்கவில்லை. எமது தாய் மண் வளர்ச்சியடைவதை விரும்பாதவர்களே அவர் மீது இனவாத முத்திரை குத்தினர். அநகாரிக தர்மபால இனவாதியோ அல்லது விவேகமற்ற காலனி எதிர்ப்புவாதியோ அல்ல. காலனி ஆட்சியாளர்கள் குறித்து சிங்கள பௌத்தர்களிடம் காணப்பட்ட அடிமை மனோநிலைக்கு அவர் முடிவு காண விரும்பினார்.

மக்களின் அனுதாபத்தைப் பெறுவதற்காக பொய்யான மோதல்களை ஆரம்பித்து சிறை செல்ல அவர் விரும்பவில்லை. ஒருமுறை வீட்டுக்காவலில் வைக்கப்பட்டவேளை,தன்னை கைது செய்தவர்கள் குறித்து கருணையுடன் நடந்துகொண்டார். அவ்வேளையே நாட்டின் நன்மைக்காக நூல்களை எழுதினார்.

பௌத்தர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் குறித்து நூல்களை எழுதினார். ஒரு மக்களை சமூக ரீதியாக முன்னேற்றுவது, அவர்களது அடையாளங்களை உறுதிப்படுத்தும் பெயர்களை வழங்குவது, தேசத்தை முன்னோக்கி நகர்த்துவது போன்ற விடயங்கள் எவ்வளவு தூரம் கஷ்டமானவை என எம்மால் கற்பனை செய்து பார்க்கமுடியும்.

அவர் ஒரு தேசியவாதியாக விளங்கிய போதிலும், அவர் ஏனைய நாடுகள் குறித்தும் அறிந்தார். மக்களை ஏனைய நாடுகளின் முன்னேற்றங்களிலிருந்து பாடம் கற்குமாறு கேட்டார்.

அவரது போதனைகளின் போது முஸ்லிம்கள் போன்று மது அருந்துவதை தவிர்க்கவும், இந்துக்கள் போன்று மாமிசம் உண்ணுவதை கைவிடவும், இங்கிலாந்து பிரஜைகள் போன்று கடினமாக உழைக்கவும் வேண்டும் எனப் போதித்தார்.

ஒரு தேசத்தின் நாயகனாக விரும்பினால் அவருக்கு தனது தாயகம் குறித்து முழுமையான அறிவு இருக்கவேண்டும். கொழும்பிலும் அதனை சுற்றியும் வாழ்ந்த பௌத்தர்களை அடிப்படையாக வைத்து மாத்திரம் அவர் தன்னுடைய தந்திரோபாயங்களை வகுக்கவில்லை. சேர் கென்றி ஒல்கொட்னெயின் மொழி பெயர்ப்பாளராக அவர் நாடு முழுவதும் சென்றார். அதன் மூலமாக மக்களை பற்றிய புரிந்துணர்வு அவருக்கு கிடைத்தது. அதன் காரணமாகவே அவருக்கு தொலைநோக்கு பார்வையிருந்தது. அதன் காரணமாகவே ஏனையவர்களின் முயற்சிகளை விட அவருடைய முயற்சிகள் வெற்றி பெற்றன.

துட்டகைமுனுவுக்கு பின்னர் அதிகளவு கோபத்துக்கும் தூற்றுதலுக்கும் உள்ளானவர் அநகாரிக தர்மபால.

அநகாரிக தர்மபால செய்த சேவைகளை அக்கால மக்கள் சரிவர புரிந்துகொள்ளவில்லை. சேவைகள் சரியாக புரிந்து கொள்ளப்படாதபோது அவை விமர்சனத்துக்கும், கேலிக்கும், தூற்றுதலுக்கும் உள்ளாகின்றன. இன்று நாம் நாட்டை கட்டியெழுப்ப மேற்கொண்டுள்ள முயற்சிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மிக பெறுமதியானவை. எனினும் இதன் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ளாதபோது இந்த அபிவிருத்தியில் என்ன உள்ளது என குற்றம் சாட்டுகின்றனர். நாட்டை நேசிக்கும் தேசப்பற்றாளர்கள் இதனை புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

(த)

### தங்கூசி

தார்.

தனங்கிளப்பு, சாவகச்சேரி ஆகிய இடங்களில் நீரியல் வள அதிகாரிகளால் மீன்கள் பறிமுதல் செய்யப்பட்டதால் சாவகச்சேரிச் சந்தைக்கு மீன்கள்வரவில்லை. இதனால்நேற்று சந்தையில் மீன் விலை அதிகரித்துக் காணப்பட்டது.

தங்கூசி வலைகள் தடை செய்யப்பட்டு நீண்ட காலமாகியும் இந்த வலைகள் விற்பனவு நிலையங்களில் விற்கப்படுகின்றன. கடைகளில் தடை செய்யப்பட்ட வலைகள் விற்பனை செய்வதைத் தடை செய்தால் கடற்றொழிலாளர்கள் அவற்றினைக் கொள்வனவு செய்யமாட்டார்களே எனக் கூறப்பட்டது.

(த-9)

### இம்மாத

இதன்போது தெரியவந்தது.

அத்துடன் குறித்த தினத்தில் வங்கிகளின் பணப் பரிமாற்றத்தில் தாமதம் ஏற்பட்டிருந்தமையால் சிக்கலான நிலைமை தோன்றியிருந்தது. இதன் பின்னர் நிலைமை சீர் செய்யப்பட்டது.

இதேவேளை, ஓய்வூதியர்களில் எத்தனை பேர் வங்கிகளுக்குச் சென்று தமது பணம் கணக்கில் கிடைத்துள்ளமையை உறுதிப்படுத்தியுள்ளனர் என்ற விபரமோ அல்லது ஓய்வூதியரின் வங்கிக் கணக்குக்குப் பணம் வைப்பிலிடப்பட்டதா என்ற விபரமோ பிரதேசசெயலகங்களிடம் இல்லை. இதனால் அடுத்த மாதக் கொடுப்பனவைச் சிரமமின்றி மேற்கொள்வதற்காக, ஓய்வூதியப் பணம் வங்கியில் வைப்பிலிடப்படாதவர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(த-5)

### யாழ்.பல்கலை

பட்டதோடு வகுப்புக்களையும் புறக்கணித்திருந்தனர்.

அதனையடுத்து நேற்று முன்தினம் துணைவேந்தர், பதில் பீடாதிபதி ஆகியோர் இது தொடர்பில்கலந்துரையாடினர். நேற்று பாடங்களின் திணைக்களத் தலைவர்களுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன் போதே மாணவர்கள் விரும்பும் பாடநெறியில் சிறப்புக் கலையைப் பயில அனுமதி வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமது முதற் பிரச்சினை தீர்க்கப்பட்டமையால் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் விரிவுரைகளுக்குச் செல்வதாகவும், வகுப்பறைப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்க முடியாது என்பதனால் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கூறியுள்ளதாகவும் மாணவப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

குறித்த 3 பாடங்களிலும் முதலாம் வருடத்திலிருந்து ஏராளமான மாணவர்கள் கற்று வருகின்றனர். ஆனால் ஒரு சிறப்புப் பாடத்துக்கு 40 பேர் வரையிலேயே அனுமதிக்கப்படுவர். ஆனால் அந்த விடயம் முதலில் மாணவர்களுக்குத் தெரிவிக்கப்படுவதில்லை.

தற்போது சிறப்புப் பாடத்தைக் கற்பதற்கு ஒரு பாடத்தில் மாத்திரம் 55 பேருக்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்ளனர். அவ்வாறே 3 பாடங்களிலுமாக சுமார் 100 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் சிறப்புப் பாடத்தைக் கற்பதற்குத் தகுதி இருந்தும் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனவே தமக்கு அனுமதி வழங்க வேண்டும். அத்துடன் இங்கு விரிவுரைகள் நடைபெறுவதற்கு உரிய இடங்கள் பற்றாக்குறையாகவுள்ளன. அதனால் ஒரு பாடத்தின் ஒரு வருடத்துக்கான விரிவுரை நிறைவடையும் வரை வகுப்பறைக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது. இதனை அதிகரிக்கப் பல்கலைக்கழக நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. பலமுறை அது தொடர்பில் சுட்டிக்காட்டியபோதும் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதனை நிறைவேற்றவேண்டும் என்று கோரியே மாணவர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

முதலாம், நான்காம் வருடங்களுக்கான விரிவுரைகள் டெங்கு தொற்றுக் காரணமாக மறு அறிவித்தல் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-4)

### மண்ணெண்

ணோம்.

ஆனால் தற்போது திடீரென இந்த அரசு எரிபொருளுக்கான விலைக் குறைப்பைமேற்கொண்டுள்ளது. அதிலும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றருக்கு 20 ரூபாவினால் விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளமை மீனவர்களின் வாழ்வாதாரத்தில் சற்று உயர்வை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த விலைக் குறைப்பு தொடர்ச்சியாக நடைமுறையில் இருக்கவேண்டும்.

குறித்த விலை குறைப்பினூடாக மீனவர்களும் ஏனைய எரிபொருள் பாவனையாளர்களும் நன்மையடைவார்கள் என்பது உண்மை.

குறித்த எரிபொருள் விலையேற்றத்தினாலேயே அரசுக்கும், மக்களுக்கும் குறிப்பாக மீனவர்களுக்கும் இடையில் நீண்டதொரு இடைவெளி ஏற்பட்டுள்ளது - என்றார். (த)

### இலங்கையின்

பயணத்தின்போது இதற்கான அறிவிப்பை உத்தியோகபூர்வமாக வெளியிடவுள்ளார்.

1651 இல் இந்தியாவில் பிறந்த வாஸ் அவ்வேளை கத்தோலிக்கர்களுக்கு எதிராக நிலவிய ஒடுக்கு முறையின் மத்தியிலும் இலங்கையில் அவர்களுக்காகப் பாடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

### இலங்கை

தற்போது அவர்களுக்கு வடக்கில் 10 ஆயிரம் ரூபா மாத்திரமே வழங்கப்படுகிறது - என்றார்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் நேற்றுமுன்தினம் மத்திய கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கும் இலங்கை ஆசிரியர் சங்கத்துக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுத்துக் கூறப்பட்டது. அது தொடர்பில் ஆராய்வதாக அதிகாரிகள் கூறியுள்ளனர் என்று சங்கம் தெரிவித்துள்ளது.

(த-4)

### உள்ளூராட்சி

களை ஆரம்பிப்பதை ஊக்குவிப்பதற்காகவும் தற்போது நடைமுறையில் உள்ள வட்டி வீதங்களைக் கடந்த ஒகஸ்ட் 15 ஆம் திகதி தொடக்கம் குறைப்பதென நிதியத்தின் ஆணையாளர்கள் சபை தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-9)

### டெங்கு

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்களும், 900 க்கும் மேற்பட்ட இராணுவத்தினரும், 600க்கும் மேற்பட்ட பொலிஸாரும், வேலணை, கோப்பாய் பகுதிகளில் 90 கடற்படையினரும், மாநகர, நகர, பிரதேச சபைகளின் சுகாதார உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் அனைவரும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களுடன் இணைந்து டெங்கு ஒழிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமான இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நேற்று முன்தினம் 16 ஆம் திகதிவரை தொடரப்பட்டது. நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட இந்தச் செயற்திட்டம்வடக்கில் அனைத்து மாவட்டங்களிலும் இந்த வகையைச் சேர்ந்த அனைவரும் இவ்வாறு டெங்கு ஒழிப்பில் ஈடுபட்டனர். சிரமதானங்கள், வீட்டுத் தரிசிப்புகள், விழிப்புணர்வு கருத்தரங்குகள் என்பன கிராமங்கள் தோறும் மேற்கொள்ளப்பட்டன.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளில் பாடசாலை நேரங்களில் காலை வேளை சிரமதானப் பணிகளை மேற்கொண்டு பாடசாலை சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு சுகாதாரத்துறையினரால் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க பாடசாலைகளில் அப்பணி முன்னெடுக்கப்பட்டது.

அந்த அடிப்படையில் பாடசாலைகளில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் இணைந்து பாடசாலைச் சூழலை சிரமதானப் பணிகள் மூலம் துப்புரவு செய்தனர். கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், முன்பள்ளிகள், வர்த்தக நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் போன்றவை டெங்கு தொடர்பான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த ஊழியர்கள் திருநெல்வேலி சிவன் புது வீதியில் உள்ள பாரிய வடிகாலைத் துப்புரவு செய்யும் பணி நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கடந்த வியாழக்கிழமை முசலி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அலுவலகங்கள் மற்றும் வீடுகள் வீடுகள், மதஸ்தலங்கள், பாடசாலைகள், படை முகாம்கள் சுகாதார அதிகாரிகள் குழுவினரால் பரிசோதனை செய்யப்பட்டன. டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகளும் இடம்பெற்றது.

(ற-4,7,56,108,135)

### விக்னேஸ்வரனின்

சவுந்தரநாயகம் அடிகளார்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்த இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கிரேச் லொச்சன் பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினார். யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர்களான குருகுலராஜா, சத்தியலிங்கம், ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி ஆகியோருடன் சந்திப்புக்களை அவர் நடத்தினார்.

ஆயர் இல்லத்தில், தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளாரை சுமார் அரை மணி நேரம் சந்தித்துக் கலந்துரையாடினார். அதில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவருக்குத் தெளிவாக எடுத்துரைத்துள்ளேன். புனித பாப்பரசர் இங்கு வரவுள்ள செய்தி மிகப் பெரிய செய்தி என்றும், அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவா என்பது தொடர்பிலும் தூதுவர் என்னிடம் வினவினார். அவர் வருவது மிகப் பெரிய விடயம் என்பதைச் சுட்டிக்காட்டியதுடன், நாம் இங்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளத் தேவையில்லை என்பதையும் அவர் மடுவுக்கே வருகின்றார் என்பது குறித்தும் அவருக்கு விளக்கமளித்தேன். அவர் இங்குவந்து தமிழ் மக்களுக்கு செய்தி கூறுவாரா? என்று தூதுவர் கேட்டார். அவர் செய்தியை வழங்கக் கூடும் என்று தெரிவித்தேன்.

இலங்கையிலுள்ள ஆயர்கள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அண்மையில் சந்தித்தமை தொடர்பில் அவருக்குத் தெரிவித்தேன். அதன் போது எமது பகுதி தொடர்பான சில ஆதங்கங்களை நாம் அவர்களுக்குத் தெரிவித்தமையைச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வடக்கு மாகாண முதலமைச்சர் எங்களுடன் ஒத்துழைக்கின்றார் இல்லை என்றும், அவர் எமது அபிவிருத்தி தொடர்பான கூட்டங்களுக்கு வருகின்றார் இல்லை என்றும் என்னிடம் தெரிவித்திருந்தார். இதன் பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சரை சந்தித்து அவற்றை நான் தெரிவித்தேன். அப்போது வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தனது ஆதங்கங்களைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநராக சிவிலியனை நியமிக்காமல் தொடர்ந்தும் இராணுவ ஆளுநரையே வைத்திருப்பதுடன், வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமை தொடர்பிலும் முதலமைச்சர் என்னிடம் தெரிவித்திருந்தார். அப்போது நான், இரு தரப்பினரும் விட்டுக் கொடுத்துச் செயற்பட வேண்டும் என்பதைத் தெரிவித்திருந்தேன். இந்தச் சம்பவங்களை முழுமையாக நோர்வேத் தூதுவருக்கு எடுத்துச் சொல்லி இங்குள்ள நிலைமைகளைத் தெரிவித்தேன்"- என்று ஆயர் மேலும் தெரிவித்தார்.

(ற-5-21)

### வடக்கு

தேர்தல் பரப்புரைக்காக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி இறுதியாக வட பகுதிக்கு வருகை தந்திருந்தார். வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஜனாதிபதியின், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி படுதோல்வி அடைந்த பின்னர் முதற் தடவையாக அடுத்த மாதம் வருகை தரவுள்ளார்.

அவர் அடுத்த மாதம் 12 ஆம் திகதி, கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தை திறந்து வைப்பதுடன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தையும் நடத்தவுள்ளார்.

13 ஆம் திகதி யாழ்.மாவட்டத்துக்கு வந்து, பல்வேறு பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை திறந்து வைக்கவுள்ளார். அத்துடன் புகையிரத சேவையையும் அவர் அன்றைய தினமே ஆரம்பித்து வைக்கவுள்ளார். 14ஆம் திகதி யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு ஜனாதிபதி தலைமை தாங்கவுள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற-5)

## யாழ்.மாவட்ட மாட்டு வண்டில் சவாரி போட்டிகள்

தென்மராட்சி, செப் 18

யாழ்.மாவட்ட மாட்டு வண்டில் சவாரிப் போட்டிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒருமணிக்கு எழுதுமட்டு வாழ் தரவை சவாரித் திடலில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக லெப்.கேணல் ஏ.எல். லபல்கம கலந்து கொள்வார்.

போட்டியில் கலந்து கொள் விரும்புவோர் குறித்த நேரத்திற்கு முன்னர் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (வ-9)



வவுனியாவில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் குருதிக் கொடை முகாம் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெற்றது. பகவான் ஸ்ரீ சத்ய சாயியின் பக்தர்கள், பொதுமக்கள் இளைஞர்கள் எனப் பலர் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கினர். (வ-402)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.18

வ.திருநாவுக்கரசு எழுதிய 'தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வின்றி இலங்கைக்கு விடிவில்லை' என்ற நூல் வெளியீடு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இல 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மகளிர் அபிவிருத்தி நிலையக் கேட்போர் கூடத்தில் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூலாய்வுரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.நிக்சனும் கருத்துரையை அரச லிகிதர் சேவை சங்க முன்னாள் தலைவர் அ.சிவரத்தினமும் நிகழ்த்துவர்.

புரட்சிவாதி அமரர் ஆ.க. அண்ணாமலையின் 25 ஆவது ஆண்டு நினைவுப் பேருரையை ரணத் குமாரசிங்க நிகழ்த்துவார். (வ)

## சிறுவருக்கு எதிரான பாலியல் இம்சைகள் கிழக்கில் அதிகரிப்பு

### அந்தப்பிரதேச மனித உரிமைகள் புலனாய்வு அதிகாரி தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப்.18

அண்மைக் காலமாக சிறுவர்களுக்கு எதிரான பாலியல் இம்சைகள் மற்றும் பாலியல் வல்லுறவுகள் அதிகரித்து வருவதாக மட்டக்களப்பைச் சேர்ந்த மனித உரிமைகள் புலனாய்வு அதிகாரி அப்துல் அஸீஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது. ஒரு சமூகத்தில் சட்டமானது அமைதியையும் ஒழுங்கையும், நிலைநாட்டி அந்தச் சமூகத்தின் பாதுகாப்பையும், உரிமைகளையும் உறுதிப் படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்படுகிறது.

சமூகத்தில் சிறுவர்கள் வலுவிழந்தவர்களாக காணப்படுவதாலும் அவர்கள் அந்தச் சமூகத்தின் உயிரோட்டமானவர்கள் என்று கருதப்படுவதாலும் அவர்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை அனைவருக்கும் இருக்கிறது.

அண்மைக் காலமாக சிறுவர்கள் மீதான பாலியல் இம்சைகள் மற்றும் பாலியல் வல்லுறவுகள் அதிகரித்து வருகின்றன. அதுமட்டுமன்றி இத்தகைய கொடூரச்செயலை மேற்கொள்வோர் கொலை செய்கின்ற அளவுக்கு மிருகத் தனமான நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர்-என்றுள்ளது. (வ)

## உரிய திகதியில் ஓய்வூதியம் கிடைக்காதோர் கவனத்துக்கு

உரிய திகதியில் ஓய்வூதியம் வைப்பிலிடப்படாத ஓய்வூதியர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு தமது ஓய்வூதியத்தைப் பெறுவதில் ஏற்பட்ட காலதாமதத்துக்கான காரணத்தைக் கண்டறிந்து திருத்திக்கொள்ள வேண்டும். இனிவரும் காலங்களில் அதனை காலதாமதமின்றி ஓய்வூதியத் திகதிகளில் சிரமமின்றிப் பெற்றுக்கொள்ள ஒத்துழைப்பு நல்குமாறு யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கேட்டுள்ளார்.

இலங்கை முழுவதும் வங்கி மூலமான நேரடி வைப்பாக ஓய்வூதியம் செலுத்தும் செயல்முறை நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் கடந்த செப்ரெம்பர் 2014 மாதாந்த ஓய்வூதியம் இந்தத் திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட போது சில ஓய்வூதியர்களுக்கு உரிய திகதிகளில் அவர்களது ஓய்வூதியங்கள் வைப்பிலிடப்படாமை எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. (வ)

## இரு நூல்களின் வெளியீடு

வவுனியா, செப்.18

மைதிலி தயாபரன் எழுதிய 'வாழும் காலம் யாவிலும்', 'சொந்தங்கள் வாழ்த்தி' என்ற இரு நாவல்களின் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மேல்நீதி மன்ற நீதிபதி திருமதி க.சிவபாதசுந்தரமும், சிறப்பு விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோரும் மற்றும் கௌரவ விருந்தினர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் வரவேற்புரையை சட்டத்தரணி கே.தயாபரன் நிகழ்த்த ஆசியுரைகளை சிவஸ்ரீ பிரபாகரக்குருக்கள், அருட்சகோதரி திரேசா சில்வா ஆகியோரும், வாழ்த்துரையை நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனும், வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசனும், அறிமுகவுரையை திருமதி நெலோமி அன்ரனிகுரூஸ், சி.வரதராஜன் ஆகியோர் நிகழ்த்த ஆய்வுரையை தமிழருவி த.சிவகுமாரன், ந.பார்த்தீபன் ஆகியோர் நிழ்த்தவுள்ளார்கள். (வ-421)

## குழந்தைகளுக்கான உணவு வகை தொடர்பான விளக்கமளிப்பு



தென்மராட்சி செப்.18

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெறும் போசாக்கு குறைந்த குழந்தைகளுக்கு உள்ளூர் உற்பத்திப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கக் கூடிய உணவு வகைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம் நேற்று மருத்துவ மனை மண்டபத்தில் இடம் பெற்றது. வேள்ட்விஷன் நிறு வன அனுசரணையுடன் இந்தச்செயல்விளக்கங்கள் செய்முறை மூலம் தாய்மாருக்கு காண் பிக்கப்பட்டன. மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மற்றும் குழந்தைகள் விடுதி மருத்துவர் வேள்ட் விஷன் நிறுவனப் பிரதிநிதி ஆகியோர் உரை நிகழ்த்தினர். (வ-9)

## 13,000 மீனவக் குடும்பங்கள் மட்டக்களப்பில் வறட்சியால் பாதிப்பு

மட்டக்களப்பு, செப்.18

வறட்சி காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கடற்றொழிலில் ஈடுபடும் 13,000 மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் டொமின்கோ ஜோர்ஜ் தெரிவித்தார்.

இந்த நிலையில், மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தலைமையில் இவ்விடயம் குறித்த கூட்டம் நாளை நடை பெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, வறட்சி காரணமாக வாவி மீன்பிடியை நம்பியுள்ள 11,500 குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள்தாக வாவி மீன்பிடித்தொழிலாளர்கள் தெரிவித்தனர். மீன்களைப் பிடிப்பதற்காக வாவியில் வலை வீசும்போது பாசிகளே வலையில் சிக்குவதாகவும் அவர்கள் கூறுகின்றனர். (வ)

## குற்றங்களும் கைதுகளும்



### அனுமதியின்றி சாராயத்தை வைத்திருந்தவருக்கு தண்டம்



அனுமதியின்றி அரசசாராயத்தைவைத்திருந்தநபர் ஒருவருக்குகிளிநொச்சி நீதிவான்நீதி மன்றம் 5 ஆயிரம் ரூபா. தண்டம் விதித்துள்ளது. கடந்த 6 ஆம் திகதி முள்ளியான் கிராமத்தில் அரச சாராயத்தை வைத்திருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த நபரை பொலிஸார் நீதிமன்றத்தில் நேற்று முன் னிலைப்படுத்திய போது இந்தத்தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (வ–18)

### கசிப்பு வைத்திருந்த 4 பேருக்கு தண்டம்

கிளிநொச்சி, செப்.18

அரைப்போத்தல் கசிப்பை வைத்திருந்த 4 நபர்களுக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் நேற்று தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

கடந்த 14 ஆம் திகதி பச்சிலைப்பள்ளி சங்கத்தார் வயல் பகுதியில் கசிப்புடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட குறித்த 4 பேரையும் பொலிஸார் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தியபோது தமது குற்றத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். அதனை அடுத்து இத்தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (வ–18)

### நீண்ட நாள்களாக கொள்ளையில் ஈடுபட்டு வந்த நால்வர் கைது

வாழைச்சேனை, செப்.18

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் மிக நீண்ட நாள்களாக கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருந்தனர் என்ற சந்தேகத்தில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மீராவோடை பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை கடந்த திங்கட்கிழமை ஒருவர் திருடமுயன்றபோது பொதுமக்களால் பிடிக்கப்பட்டு வாழைச்சேனை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.



பொலிஸ் விசாரணைகளின் போது குறித்த நபரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் மேலும் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று பாகங்களாக பிரிக்கப்பட்டு புதைக்கப்பட்ட நிலையில் பிறைந்துரைச்சேனை பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளதோடு மற்றுமொரு மோட்டார் சைக்கிள் பாகங்களாக உடைப்பதற்கு முன்பாகவும் மேலும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் வாழைச் சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர்களுடன் தொடர்புடையவர்களாக மேலும்சிலர் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் விசாரணைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்களையும் குறித்த மோட்டார் சைக்கிள்களையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள தாகவும் வாழைச்சேனை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ)

### பூநகரி வாசிக்கு மறியல்



காட்டுப்பகுதிக்குள் சென்று பாலைமரங்களைத் தறித்து பல கைகளாக அரிந்தெடுத்தார் என்றகுற்றச்சாட்டில் பூநகரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நபரொருவரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.வகாப்தீன் நேற்று உத்தரவிட்டார். பூநகரி, அரசபுரம் காட்டுப் பகுதிலேயே குறித்த நபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ–18)

# பண்டாரவளை விபத்தில் ஆதரவாளர் சாவு; வேட்பாளர் செந்தில் உட்பட 25 பேர் காயம்

*ஊவாத் தேர்தல் இறுதிப் பிரசார நாளில் விபரீதம்*

கொழும்பு,செப்.18
ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் இ.தொ.காவின் வேட்பாளர் செந்தில் தொண்டமானும் அவரின் ஆதரவாளர்களும் நேற்று வாகன விபத்தில் சிக்கியுள்ளனர். இதில் ஆதரவாளர் ஒருவர் உயிரிழந்தார். அத்துடன் செந்தில் தொண்டமான் உட்பட 25 பேர் காயமடைந்தனர்.
பண்டாரவளையில் நேற்று மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் தியத்தலாவை, பண்டாரவளை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
செந்தில் தொண்டமான் தனது ஆதரவாளர்களுடன் வீதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது ஆதரவாளர்களை ஏற்றிக் கொண்டுவந்த வாகனம் ஒன்று இவர்கள் மீது மோதியுள்ளது எனவும், சாரதியின் கவனயீனத்தால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.
இந்த விபத்தில் வேட்பாளர் செந்தில் தொண்டமான் சிறு காயங்களுக்கு உள்ளானர் எனவும், அவரின் ஆதரவாளர்கள் உட்பட 24 பேர் காயமடைந்தனர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
விபத்தில் உயிரிழந்தஇ.தொ.கா. ஆதரவாளரின் சடலம் பண்டாரவளை ஆதார வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.
ஊவா மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தின் இறுதிநாளான நேற்று இந்த விபத்து இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## காரைநகர் சிறுமி வன்புணர்வு ; நவம்பர் 4 இல் விசாரணை

யாழ்ப்பாணம், செப். 18
காரைநகரில் சிறுமி வன்புணர்வு செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது.
யாழ்.சிறுவர் நீதிமன்றில் நீதிவான் ஜீவராணி கறுப்பையா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே வழக்கு தவணையிடப்பட்டுள்ளது.
சந்தேக நபர்களாகக் குறிப்பிடப்படும் 7 கடற்படைச் சிப்பாய்களும் நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். பொலிஸார் வழக்குத் தொடர்பில் மேலதிக அறிக்கை சமர்ப்பித்தனர்.
குறித்த சிறுமி பாடசாலை செல்லும் நேரத்தில் கடற்படைச் சிப்பாயால் அழைத்துச் செல்லப்பட்டு துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது. 11 நாள்களாக மாணவியொருவர் அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதோடு அந்த நாள்களில் அவர் பாடசாலை செல்ல அனுமதிக்காது பாடசாலைச் சீருடையிலேயே கடற்படைச் சிப்பாய் குறித்த மாணவியை அழைத்துச் சென்று தினமும் பாடசாலை நிறைவடையும் நேரம் வரை தன்னுடன் வைத்திருந்து துஷ்பிரயோகம் செய்துவிட்டு வீட்டுக்கு அனுப்பி வைத்து வந்தார் என்று குற்றச்சாட்டில் வழக்குத் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது.
மற்றைய சிறுமி ஒரு வருடத்துக்கு முன்னரே வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அது தொடர்பிலும் உரிய விசாரணை மேற்கொள்ள நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (த-4)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**மரண அறிவித்தல்**



திருமதி பொன்மணி சுப்பிரமணியம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்மணி சுப்பிரமணியம் கடந்த 14.09.2014 இறைபதம் அடைந்துள்ளார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18.09.2014) வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.
தொ.பே.: 0777634453

**வெளிவந்துவிட்டது**
தரம் -09 மாகாணமட்டம் பாஸ் பேப்பர் வந்துவிட்டது
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்
021 222 9881

**போட்டிப்பரீட்சைகளுக்கான வழிகாட்டி நூல்கள் வெளிவந்து விற்பனையாகின்றது**
S.L.A.S-I,II - P.உமாசங்கர்
S.L.A.S - T.தவசேகர்
முகாமைத்துவ உதவியாளர்- தவசேகர்
முகாமைத்துவ உதவியாளர்- கமலதாஸ்
அரச தாபன நடைமுறை - இரவீந்திரன்
முகாமை நடைமுறைகள் - இரவீந்திரன்
நிதிமுகாமை நடைமுறை - இரவீந்திரன்
பொது நிதிமுகாமை நடைமுறை - S.நாகராசா (வினா விடைகள்)
பொதுநிதி அலுவலக முகாமைத்துவம்- இராசநாயகம்
I.Q - கமலதாசன்
I.Q -அஸ்ரன் பதிப்பகம்
தரம் 9 மாணவர்களுக்கான மாகாணமட்ட பொதுப்பரீட்சை வினாவிடைகள் (Past Papers)
பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ் நிலையம், யாழ்ப்பாணம் 021 222 6693
வேம்படிச்சந்தி, யாழ்ப்பாணம் 021 222 1637

CA Sri Lanka
in English Medium
புதிய பிரிவுகள் ஆரம்பம் (தமிழ் விளக்கங்களுடன்)
27/09/2014
சனிக்கிழமை
8.30am
K-AIMS BUSINESS SCHOOL
149,2/1, K,K.S road, jaffna. Phn-0773722104

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், சரியான உச்சரிப்பு, நேரடியாக பிரெஞ் ஆசிரியரிடம் படிக்கலாம். இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள், AUDIO CDs & BOOKS இலவசமாக பாவிக்கலாம். யாரும் படிக்கலாம். ஓரிரு மாதங்களும் படிக்கலாம். LETTRE & PHOTOCOPIES இலவசம். உடன் பதியுங்கள்
குறிப்பு :வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு உத்தியோகபூர்வ நிறுவனம் AF மட்டுமே. பொய் விளம்பரங்களை நம்பாதீர்கள்.
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி →புகையிரதகடவை →AF or ஆரியகுளத்திலிருந்து றக்கா றோட் →AF

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதிய மாணவர்களுக்கான 3 மாத வார மற்றும் வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட எமது இப்பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
வாரநாள் பிரிவுகள் ஆரம்பம் - 22.09.2014
பிரிவு 1. காலை 8.00-10.00 பிரிவு 2.காலை 10.00-12.00
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 20.09.2014
1.காலை 08.00-10.00 2.காலை 10.00-12.00
20 வருட ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கப்பட்ட எமது பயிற்சியில் இணைவதன் மூலம் 3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேசமுடியாதிருப்பின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்.
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

**வேலைவாய்ப்பு**



யாழ்.நகரில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்களை பின்வரும் இடங்களுக்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
★ யாழ்ப்பாணம்
★ பருத்தித்துறை
★ கிளிநொச்சி
★ வவுனியா
★ மன்னார்
தகைமை : A/L சித்தி
அனுபவம் : சந்தைப்படுத்தல் துறையில் முன்அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம்.
வயது : 20-28
சம்பளம் : அனுபவம், தகைமை மற்றும் முன்னேற்ற அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.
உங்கள் சுயவிவரக்கோவையை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது தபால் முகவரிக்கோ 25.09.2014 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
விள.இல.: 5013
மே/பா. உதயன், இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Email: jaffnavacancy@gmail.com

யாவரும் வாரீர்!
CELEBRATE!
**உடுவில் மகளிர் கல்லூரி**
**190 ஆவது ஆண்டு நிறைவு**
• வர்த்தகக் கண்காட்சி "September Shades"
19 வெள்ளி 2.30 - 6.00 P.m
20 சனி 10.00 - 6.00 P.m
• பாடசாலை நடைபவனி
20 சனி 2014 காலை 8.00 A.m
* கண் கவர் வர்த்தக நிலையங்கள்
* இசை நிகழ்வுகள்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.